

அமரர் சண்முகம் சிவலிங்கம் ஓராண்டு



# நினைவுமலர்

iPMCG Inc.

அன்பு நண்பர்
நாகேந்திரநாதருக்கு
— ஜபார்

# நினைவு வெளி

## அமரர் சண்முகம் சிவலிங்கம்

## ஓராண்டு நினைவு மலர்

**நூல்:** நினைவு வெளி
**தொகுப்பாசிரியர்:** சசி. வித்தியானி
**வெளியீடு:** *© iPMCG Inc, Publishing Division, Suite # 100, 3311 Beard Road, Fremont, CA 94555 USA*
**அட்டை:** சசி. மகரிஷி
**அச்சாக்கம்:** *Design Waves— Sri Lanka.*
*www.designwavesmedia.com*

**இந் நூலின் இலவச பிரதிகளை பெற விரும்புவோர் தொடர்புகொள்க:** சசி. கௌசிகன், *Wonderland Book Shop, 405 Trinco Road, Batticaloa. Phone: +94-775-851-316*

**இணையத்தில் சசியின் படைப்புகள்:**
*http://aboutshanmugam-sivalingam.com*



*19-மார்கழி -1936* *20-சித்திரை–2012*

# நினைவுகளில் கரைவதற்கு முன்...

எங்கள் அப்பா அமரர் சண்முகம் சிவலிங்கம் அவர்களின் மறைவின் ஒரு வருடத்தை நினைவு கூறும் வகையில் 'நினைவு வெளி' எனும் இந்த நூலை வெளியிடுவதில் மனநிறைவு கொள்கிறோம்.

வாழ்வின் தத்துவங்களையும், அதன் உள்நோக்கான அர்த்தங்களையும் புரிந்து கொண்டு, மாக்சிய சிந்தனை மூலம் தன் வாழ்க்கையில் வெற்றி கொண்டவர் அப்பா அமரர் சண்முகம் சிவலிங்கம் அவர்கள்.

பலருக்கு விஞ்ஞான அறிவையும், ஆங்கில அறிவையும், ஆங்கில இலக்கியத்தையும் அடித்தளம் போட்ட பெருந்தகை அவர்.

எம்மத்தியில் இன்று அவர் இல்லாவிட்டாலும், அவர் விட்டுச் சென்ற சுவடுகள் அழியாச் சுடராய் எல்லோர் மனங்களிலும் என்றென்றும் ஒளிரும்.

அவர் பற்றிய மற்றவர்களின் நினைவுகளை பதிவு செய்வதும், பகிர்ந்து கொள்வதுமே இந் நூலின் நோக்கமாகும்.

அதனால் உலகெங்கும் பரவியிருக்கும் இலக்கிய நண்பர்களினதும், உறவினர்களினதும், மாணவர்களினதும் ஆக்கங்கைகளைப் பதிவு செய்ய எண்ணினோம். பலர் தங்கள் ஆக்கங்களைத் தர விரும்பினாலும், நாளாந்த வாழ்க்கைத் தடங்கல்களினால் அவர்களால் அவற்றைத்

தரமுடியாமல் போய்விட்டது. ஒருசிலருடன் தொடர்புகளை ஏற்படுத்த முடியாமல் போனது. அதற்காக மனம் வருந்துகிறேன்.

அப்பா எழுதிய இருப்பியல்வாதம் பற்றிய கட்டுரை வியந்து பேசப்பட்ட கட்டுரையாகும். இருப்பியல்வாதம் பலருக்கும் விளங்கப்படாத விடயமாக இருந்த போதும், அவர் அதை மிக எளிய முறையில் அதன் கருத்தை சிதைக்காது அழகாக விளக்கி எழுதியுள்ளார்.

இந் நூலின் நிறைவாக இருப்பியல்வாதம் பற்றிய கட்டுரையையும் உள்ளடக்கியுள்ளேன்.

கடைசியாக அப்பா அமரர் சண்முகம் சிவலிங்கம் எழுதிய சில பிரசுரிக்கப்படாத கவிதைகளையும் இந்த இதழ் பெருமையாக தாங்கி உள்ளது.

'பிரகஷ்த்தம்' என்ற சிறுகதை விரைவில் வெளிவர இருக்கும் அப்பாவினுடைய 'காண்டாவனம்' என்ற சிறுகதை தொகுதியில் இருந்து தரப்படுகின்றது.

'காண்டாவனம்' சிறுகதைத் தொகுதிக்குப் பின்னர் அவரின் 'கோயில் வெளி' என்ற நாவலையும், பிரசுரிக்கப்படாத தமிழ் /ஆங்கில கவிதைகளையும் 'நான்கு ஆண்டுகள்' என்ற நாவலையும் வெளியிட திட்டமிட்டுள்ளோம்.

இந்த நூலுக்கு ஆக்கங்கள் தந்த அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

**சசி. வித்தியானி**

| நினைவு | வெளி |
|---|---|


- தங்கராணி சிவலிங்கம் • 008
- அருட்தந்தை. ரி.பி. பத்மராஜா • 013
- அன்புடன் • 014
- மு.சடாட்சரன் • 017
- இரா. தர்மலிங்கம் • 019
- சசி. வித்தியானி • 024
- சசி. மகரிஷி • 027
- அரு. கணேஷ் • 042
- கென்றி ஜெயராஜா • 043
- கல்லூரன் • 045
- மருதமுனை விஜிலி • 046
- திருமதி.வி. புவனராஜா • 049
- எஸ். தர்மலிங்கம் • 051
- சசி. சௌஜனன் • 055
- டாக்டர். புஸ்பலதா (மலரா) • 051
- சசி. கௌசிகன் • 062
- விக்டர்.டீ. அல்விஸ் • 067
- சசி. நிருமிதன் • 071

| நினைவு | வெளி |
|---|---|
| • அருட்.சகோ.எஸ்.ஏ.ஐ. மத்தியூ | • 073 |
| • எம்.ஏ. நுஃமான் | • 080 |
| • க. இரத்தினவேல் | • 091 |
| • இளவாலை விஜேந்திரன் | • 093 |
| • மு. புஷ்பராஜன் | • 098 |
| • கருணாகரன் | • 105 |
| • சு. குணேஸ்வரன் (துவாரகன்) | • 117 |


## அமரர் சசி அவர்களின் படைப்புகள்


| | |
|---|---|
| • முதற் பிரசுரிப்பு | • 121 |
| • பிரபல்யமான கவிதை | • 124 |
| • பெரிதும் பேசப்பட்ட கட்டுரை | • 130 |
| • பிரசுரமாகாத கவிதைகள் மூன்று | • 145 |
| • பிரகஷ்த்தம்—சிறுகதை | • 154 |

## நீங்கள் மரணிக்கவில்லை...

**•தங்கராணி சிவலிங்கம் (அன்பு மனைவி)**

என் கண்களில் கண்ணீரின் ஈரம் இன்னும் காயவில்லை. நெஞ்சு துயரத்தால் கனக்கின்றது. நீங்கள் மரணித்து விட்டீர்கள் என்ற அதிர்ச்சியில் இருந்து இன்னமும் நான் விடுபடவில்லை. என் உள்ளம் சுக்கு நூறாய் உடைந்து சிதறுகின்றது. ஒன்றையுமே சீர் செய்ய முடியாமல் தவிக்கிறேன். அப்பா அதற்குள் ஓராண்டா? என்னால் நம்ப முடியாமல் கதறுகிறேன். நீங்கள் மரணிக்கவில்லை, உங்கள் அறையில் சயனிப்பதாகவே நான் உணர்கின்றேன். காணாத ஆட்டின் பின்னே கர்த்தர் கண்ணீருடன் அலைந்ததுபோல் நானும் இன்றுவரை உங்களை கண்ணீருடன் தேடுகிறேன். எங்கோ ஒளிந்து மறைந்து இருப்பீர்கள் என்ற நப்பாசையில். இனிமையான உங்கள் குரலால் சிறு குழந்தைபோல் எந்நேரம் எதற்கெடுத்தாலும் 'அம்மா' என்று என்னை அழைக்கும் குரலொலி என் காதுகளில் எப்போதும் ஒலித்த வண்ணமாக ஒலித்துக் கொண்டிருக்கின்றது அப்பா.



பத்தொன்பது வயதில் என் கரம் பிடித்து ஓர் சிறு குழந்தையைப் போல் என்னை வழிநடத்தி வந்தீர்கள். உங்களின் அன்பு, பரிவு, பாசம், அரவணைப்புகள், பண்பான பேச்சுக்கள் எல்லாம் என்னைத் திணறடித்தது. எனக்கு

இப்படியும் ஓர் கணவனா? என வியந்த நாட்கள் - வருடங்கள் எத்தனை எத்தனையோ.

0

அன்பின் பரிசாக ஆறு ஆண்சிங்கங்கள், ஆண் குழந்தைகள் ஆறு என்று சொல்வதில் அவருக்கு பெருமிதம். எனக்கும் பிள்ளைகளுக்கும் நற்பண்புகளையே கற்றுத் தந்திருக்கிறார். ஓர் கணவனாக மட்டுமின்றி நல்ல



தந்தையாக, ஆசானாக, சிறந்த ஆசிரியராக எங்களை வழி நடத்தி வந்துள்ளார். மற்றவர்களை சாதி, மத பேதம், உயர்ந்தவர், தாழ்ந்தவர், படித்தவர், பாமரர் என்று பாகுபாடு இன்றி அன்பாக பழக வேண்டுமென்று எனக்கு அடிக்கடி வலியுறுத்துவார்.

எங்கள் வாழ்வில் 25 ஆண்டுகளை கடந்த போது காலன் சதி செய்வான் என நானோ அவரோ நினைக்கவில்லை. நாட்டின் நிலைமை காரணமாக எனது மூன்றாவது மகன் பிரகாஷ் காலனுக்கு பலியாகி விட்டார். அந்த 4 வருடங்கள் நாங்கள் பட்ட கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள் எண்ணில் அடங்காதவை. என் கணவர் மென்மையான உள்ளம் கொண்டவர். பிள்ளைகளிடத்து கொள்ளை ஆசை உள்ளவர். மகனின் இறப்பு அவரால் ஈடு செய்ய முடியாமல் போய் விட்டது. வாழ்க்கையில் எல்லாமே

மாறிவிட்டது. அவரே தளர்ந்து சோர்ந்து உள்ளம் உடைந்து துவண்டு விட்டார். அவர் அவராக இருக்கவில்லை. கட்டிலில் இருந்து கொண்டு நடுநிசியில் அழுவார். அவரின் அழுகை என்னை எழுப்பிவிடும். அவருக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று எனக்கு தெரிந்து இருக்கவில்லை. காலங்கள் பல கடந்தது. அவருக்கு நானும், எனக்கு அவருமாக ஆறுதல் கூறி எங்களைத் தேற்றிக் கொண்டோம்.

பின் அவரில் எல்லாமே மாற்றமாக காணப்பட்டது. அவரின் புன்சிரிப்பு, ஆறுதலான வார்த்தைகள், பொறுமை எல்லாமே மாற்றம். அவரை ஆசுவாசப்படுத்த எனக்கு எதுவுமே தெரியவில்லை. பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று.

அவரை நான் ஓர் தீர்க்கதரிசியாகவே கணிப்பிடுகிறேன். நடப்பவைகளை நேர காலத்தோடு எனக்கு சொல்லி விடுவார். ஒவ்வொரு பேரக் குழந்தைகளும் எப்படி வளருவார்கள், எப்படி இருப்பார்கள் என்று என்னிடம் கூறியுள்ளார். தனது மகன்மார்களை எப்படி நேசித்தாரோ அதேபோல் மருமக்கள், பேரக்குழந்தைகள் மேல் அலாதி பிரியம் வைத்திருந்தார். அவரது மரணம் பற்றி நீண்ட கவிதை ஒன்று எழுதியுள்ளார். 'யாருக்கும் தெரியாமல் நடுநிசியில் மறைந்துவிடுவேன் என்னைக் காணமாட்டீர்கள்' என்று அவர் எழுதியது போல் மறைந்துவிட்டார்.

அவரின் மரணம் என்னால் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். 75 வயதில் அவர் இயற்கையாக மரணத்தை பற்றிக் கொண்டார். அவரின் மரணம் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது. கடைசிவரை திடகாத்திரராக வீறுநடைபோட்டவர் இன்று இல்லையே என்ற ஏக்கம்.

இது சிறப்பான மரணம் என்று பலரும் பேசிக் கொண்டார்கள்.

அவரது இலக்கிய நண்பர்களுக்கு ஒன்றை கூற விரும்புகிறேன். அவரின் ஆக்கங்கள் பல வெளிவரவில்லை என்ற அங்கலாய்ப்பு உங்களுக்கு இருக்கிறது. அவரின் படைப்புகளை வெளிக்கொணர பொருத்தமான காலச்சூழல் இல்லாத காரணத்தால் அவைகள் வெளிவராமல் இருந்திருத்தல் கூடும். கூடிய விரைவில் அவரின் படைப்புகள் எல்லாம் நூல் வடிவில் வரும். கூடிய விரைவில் அவைகள் உங்கள் கரங்களில் தவழும் என்பது நிச்சயம்.

அப்பா நீங்கள் கட்டாயம் வான் வீட்டில் இருப்பீர்கள் என நம்பி என் ஜெபங்களை உங்களுக்காக இறைவன் பாதம் சமர்ப்பிக்கிறேன்.

□



# வாழ்வின் முடிவை வெற்றியாக்கினார்

• அருட்தந்தை ரி. பயஸ் பத்மராஜா ( மைத்துனன், அமெரிக்கா)

பிறந்து, படித்து, எழுதி, கவியாகி மறைந்த பாண்டியூர் சண்முகம் சிவலிங்கம் இலங்கை கிழக்கு மண்ணில் தடம் பதித்துச் சென்றுள்ளார்.

இளம் வயதிலிருந்து, கலை உணர்வு, அவர் உள்ளத்தில் நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டது. தன் திறமையினால் இக்கலை உணர்வை பல எழுத்து வடிவங்களில் வளர்த்து, நிறைவாக்கினார்.

மண் பற்றுடன், பேச்சிலும், எழுத்திலும் புது யுகம் தேடி, கவியுலகில் சரணடைந்து, தன் வாழ்வு, பிறர் வாழ்வு, ஊர் வாழ்வு, தமிழ் இன வாழ்வில், தான் கண்ட 'அவலங்களை' சிறுகதை, கவிச் செய்தியாக்கி, பிறர்க்கு விட்டுச் சென்றுள்ளார்.

எப்படி வாழ்வை முதலில் கண்டோம் என்பதை விட, எப்படி அவ்வாழ்வை வாழ்ந்து முடித்தோம் என்பது, அவரது படைப்புகளின் மையக் கருத்தாக வெளிவந்தன.

அவரை அறிந்த நாட்களிலிருந்து எனக்கும், பலருக்கும், ஒரு புரியாத புதிராகவே அவர் இருக்க விரும்பினார்.

ஆயினும் அவரது வாழ்வின் முடிவு ஒரு பெரும் வெற்றியாகவே பலருக்கும் பட்டது.

இந்த மரண ஓராண்டு நிறைவு நாளில், அவர் ஆன்மா சாந்தியடையட்டும் என்று ஆண்டவனை வேண்டி முடிக்கிறேன்.

□

# தமிழுக்கு தனித்துவம்

## அன்புடன்

பூவிலும் மெல்லிய
புன் சிரிப்பாளர்
நாவிலே தேன்பூசி
நவில்கின்ற பேச்சாளர்....

பாவிலே புதுமைக்கு
பண்சேர்த்த பாவாணர்
'சசி' என்றழைக்கின்ற
சண்முகம் சிவலிங்கம்
நினைவுகள் நெஞ்சுக்குள்
நிழலாடி நிற்கிறது....

பாண்டிருப்பு தாய்பெற்ற பண்பாளர்
கேரளத்தில் கல்வி கற்று
பட்டமாகி,
பவிசுபெற்ற ஆசிரியர், அதிபரவர்!

ஆசிரியர் பதவி தொழிலல்ல; அது ஒரு
சேவையென்று பணிசெய்த சேவகனார்...
''கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக'' என்ற வள்ளுவரின்
வாழ்வாங்கை வாழ்க்கைக்குள்
வரவழைத்த வார்ப்பாளர்!

ஈழத்து இலக்கியத்தின்
இலச்சினையாய் இலங்குபவர்...
பத்தோடு ஒன்று
பதினொன்று அல்ல அவர்
பத்திரமாய், பவித்திரமாய்
சித்திரமாய் விளங்கும், மிகச்
சிறப்பான கவிஞரவர் ......!
சிறந்த சிறுகதைகள், நாவல்கள்
விமர்சனங்கள், மொழிபெயர்ப்பு
இத்தியாதி அவர் பணிகள்
இணையில்லா தொடரணிகள்....

''அவரைப் போல்
பிறிதொரு கவிஞரில்லை
அவருடையதைப் போல
பிறிதொரு கவிதையில்லை.... ''

''இருத்தலும்
இருத்தலுக்கு
பிரக்ஞையாய் இருத்தலும்
என்னும் கருதுகோல் கொண்டு
எழுதிய எழுத்தாளர் அவரென்று
எழுத்து ஆளுநர்கள்
எழுதி வைத்த 'பேனா' அவர்....''

தற்காலத் தமிழுக்கு
தனித்துவம் அவர் கவிதை...
'நீர் வளையங்கள்' – அவர்
பேர் சொல்லும் மட்டுமன்றி
'சிதைந்தபோன தேசமும்
தூர்ந்து போன மனக்குகையும்'
இருக்கிறது அன்னாரின்
இருப்பியலை சொல்வதற்கு....

தமிழ் வாழும்வரை
தமிழ் கவிதை வாழும்!
தமிழ் கவிதை வாழும்வரை
தமிழறிஞர் வாழ்வர்!
தமிழறிஞர் வாழ்வாரேல்
'சசி' வாழ்வார்! வாழும் தமிழ்!

# நினைவு அலைகள்

மு. சடாட்சரன்

ஈழத்து இலக்கிய வானில்
இறக்கை விரித்து
தனித்துவக் கொடிநாட்டி
நெடுந்தூரம் பறந்து
பாடிவந்த குயில்;
திடீரென வீழ்ந்து திகிலடைய வைத்து விட்டது!
பிரிவை நினைத்தால் பெருங்கவலை என்செய்வோம்?

நீர்வளையங்கள் எழுப்பி
நெஞ்சங்களைக் கவர்ந்தார்!
சிதைந்த தேசமும் தூர்ந்து போன மனக்குகையும்—
தீட்டிய தீந்தமிழ் ஓவியங்கள்
அழியாத காவியமாய்
தமிழ் நெஞ்சங்களில் குடிகொள்ளச் செய்த
நவீன கவிஞன் மரணிப்பதில்லை.

வாழ்கின்றார் வளமான தனி எழுத்தால்
உயர் சிந்தனையால்,
உணர்வின் ஊற்றால் உருவான

படையல்கள் என்றும் பசுமையாய் நிலைத்திருக்கும்!
காலமெலாம் பேசும் கலந்து உறவாடும்!

சைக்கிளில் வந்து என் கேற்றடியில்
அன்பாக அழைக்கும்
அந்தக்குரலைக் கேட்க முடியவில்லை!
அது தொலைந்து போயிற்றே
ஆனாலும் வாழ்கின்றார் இங்கே வளர்நிலவாய்!
கை வண்ணத்தால் காலனை வென்றுவிட்டார்!
தமிழ் இலக்கிய வானில் தனியிடம் பெற்றுவிட்டார்!

அவர் நினைவில் இணையும் நேரமெல்லாம்,
அகத்தில் துயர அலைகள் 'அடிக்கிறது'!
இரவு இருந்தவர் காலையில் இல்லையே!
காலையில் நடந்தவர் மாலையில் இல்லாத
காலம் தற்காலம் என்பதை உணர்ந்தார்
ஏற்றமான எழுத்தால் எங்கும் விளங்கி
இறப்பினை வென்ற இணையிலாக் கவிஞர்
சசியை நினைந்து சரித்திரம் படைப்போம்!

# எனது அண்ணனின் வாழ்க்கை சுருக்கம்

• இரா. தர்மலிங்கம்

*சசி அவர்கள் 1936.12.19 இல் பிறந்தார். தாய் தந்தையர்கள் மிக அன்பாகவும் செல்லமாகவும் இவரை வளர்த்தனர். கல்முனை பற்றிமாக் கல்லூரியில் கல்வி கற்றார். அப்போது அங்கு ஆசிரியராக இருந்த அருட்.சகோ.A.T.அல்போன்ஸ் அவர்களின் பார்வை இவரில் விழுந்தது. இவரின் கற்றல் திறமையையும் ஏனைய திறமைகளையும் கண்ட அருட்சகோதருக்கு இவரையும் ஒரு துறவியாக்க வேண்டும் என்று விருப்பம் ஏற்பட்டது. இதனை சசி அவர்களுக்கு கூறி அவரில் மனமாற்றத்தை ஏற்படுத்தி பின்னர் தாய்தந்தையரிடம் தனது விருப்பத்தைக் கூறினார். சசி அவர்கள் துறவியாவதற்கு கொஞ்சமும் விரும்பாத பெற்றோர் இறுதியாக கிறிஸ்துவ மதத்தை தழுவுவதற்கு மட்டும் சம்மதம் தெரிவித்தனர். பத்தாவது வயதில் இவர் ஒரு கிறிஸ்தவராக மாறினார்.*

*S.S.C பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் வாழைச்சேனை தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராக ஓராண்டு கடமையாற்றினார். அப்போது அருட்சகோதரர் அல்போன்ஸ் அவர்களின் ஆலோசனையின் பெயரில் 1956 இல் மேற்படிப்புக்காக இந்தியாவின் கேரள பல்கலைக்கழகத்தில் இணைந்து B.Sc., உயிரியல் பட்டப்படிப்பை மேற்கொண்டு நான்கு ஆண்டுகளின் பின் 1959 இல் நாடு திரும்பிய போது சகோதரர் அல்போன்ஸ் அவர்கள் கொழும்பின் அரசாங்கப் பாடசாலையில் ஆசிரியர் நியமனம் பெற்றுக் கொடுத்தார். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அருட்.சகோதரர் அல்போன்ஸ் அவர்கள் இவருக்கு வழிகாட்டியாகவும் துணையாகவும் இருந்திருக்கிறார்.*

1962 ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து இடமாற்றம் பெற்று நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரிக்குச் சென்றார். அவ்வருடம் மே 21 இல் இவரின் தந்தையார் சண்முகம் அவர்கள் காலமானார். இதன் பின் 1963 இல் இடமாற்றம் பெற்று அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திற்குச் சென்றார். பின் அங்கிருந்து 1964 இல் நிந்தவூர் அல்/அஸ்ரக் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அவ்வருடம் ஆகஸ்ட் 20 இல் பாண்டிருப்பு தங்கராசா, தங்கரத்தினம் ஆசிரியத் தம்பதியினரின் சிரேஸ்ட்ட புத்திரி தங்கராணியை இல்லறத் துணையாக ஏற்றுக் கொண்டார். பாடசாலை விடுமுறைக் காலங்களிலும் இவர் பாடசாலையில் விடுமுறை வகுப்புகளை நடத்துவார். சிலர் வீட்டுக்கும் வந்து கற்றனர்.

கேரளாவில் படிக்கும் போது கம்யூனிச சித்தாந்தத்தில் ஈடுபாடு உள்ளவராக அதன்பால் ஈர்க்கப்பட்டு மாக்சிய கொள்கைகளைப் பின்பற்றினார். இவர் இலங்கையின் கம்யூனிசவாதி சண்முகநாதனுடன் தொடர்பு வைத்திருந்தார். லெனின்—மா.ஓ.சே.துங் போன்றோரின் சிந்தனைகளை ஏற்றுக் கொண்டவராக காணப்பட்டார். 1971 இல் இலங்கையில் ஏற்பட்ட இளைஞர் புரட்சி (சேகுவேரா) இன் போது தன்னிடம் இருந்த பெறுமதிமிக்க மாக்சிய தத்துவப் புத்தகங்களை அழித்து விடவேண்டிய நிர்ப்பந்துக்குள்ளானார் (அவ்வருடம் எல்லா இடங்களிலும் மாக்சியவாதிகளை இராணுவத்தினர் கைது செய்தனர்), இருப்பினும் மா.ஓ.சே.துங் மறைந்த போது அவருக்காக அஞ்சலிக் கூட்டங்களை சம்மாந்துறை ஆனந்தனுடன் இணைந்து நடத்தினார்.

இவர் இலங்கையில் ஒரு தலை சிறந்த விமர்சகராகவும் இலக்கியவாதியாகவும் கதாசிரியராகவும் நடிகராகவும் கலை உலகில் பிரசித்தி பெற்றிருந்தார். 1961 இல் என்று

நினைக்கிறேன், இவர் நடித்த 'இலங்கேஸ்வரன்' நாடகத்தை பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்தது. அந்த நாடகத்தில் வீணையுடன் தோன்றிய காட்சி இன்னும் என் மனக்கண் முன்னே தோன்றுகிறது. அந்த நாடகம் பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் அரங்கேறியது.

இவர் ஒரு கிறிஸ்தவராக இருந்தும் இந்து சமய விழாக்கள் நடத்துவதில் விருப்பம் கொண்டவராகக் காணப்பட்டார். *1960-70* காலப்பகுதியில் தைப்பொங்கல் விழா, சித்திரைப்புத்தாண்டு விழா போன்ற விழாக்களை தன் நண்பர்களின் துணையோடு நடத்தினார். இதில் சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம் மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், வழுக்குக்கம்பம் போன்ற விளையாட்டுக்களும் மாலை வேளையில் கலை நிகழ்ச்சிகளில் பாட்டுப் போட்டி, கவி அரங்கு, நாடகம், இசை நிகழ்ச்சிகள் என்பனவும் சிறப்பாக நடைபெற்றது. இவரது காலத்திற்குப் பின் நானும் எனது நண்பர்களும் இந்நிகழ்ச்சியை நடத்தி மகிழ்ந்தோம்.

*1966*இல் கல்முனையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக கல்முனைக்குடி, சாய்ந்தமருது பகுதியில் இருந்த தமிழர்கள் அடித்து விரட்டப்பட்டனர். மட்டக்களப்பு *C . T . B*க்கு சொந்தமான பஸ் வண்டியொன்றை, அங்கு சாரதியாக இருந்த பாண்டிருப்பைச் சேர்ந்த முத்துலிங்கம் என்பவர் கொண்டுவந்தார். அவ் வண்டியில் சசி அவர்களும் அவரின் சில நண்பர்களும் சாய்ந்தமருதுக்குச் சென்று அம்மக்களை, பொலிஸாரின் துணையுடன் கொண்டுவந்து பாண்டிருப்பு திரௌபதையம்மன் கோயிலடியில் அமர்த்தினர். இவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்காக பிரபல சட்டத்திரணியான ஜி.ஜி.பொன்னம்பலமும், அ.அமிர்தலிங்கம், செ.இராஜதுரை, சாவகச்சேரி

நவரெட்ணம், டாக்டர்.நாகநாதன் போன்ற பா.உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

1966 இல் கல்முனையில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் தமிழ் மக்களுக்கு சந்தைக்கு சென்று பொருட்கள் வாங்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனை உணர்ந்த இவர் பாண்டிருப்பில் ஒரு சந்தையைத் தொடங்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டார். இதன் பயனாக வாள்மாற்றும் சந்திக்கு முன் உள்ள கோயில் காணியில் கடைகள் அமைக்கப்பட்டு சந்தை தொடங்கப்பட்டது ஒரு வரலாறாகும். இதில் மீன், மரக்கறி, மளிகை சாமான்கள் என பலதரப்பட்ட வியாபாரம் பெருமளவில் நடைபெற்றது. அதுமட்டுமின்றி, தான் வைத்திருந்த சைக்கிள் வண்டியையும் ஊருக்குள் மீன் வியாபாரம் செய்வதற்காக அன்பளித்தார். அன்று பாண்டிருப்பு வாள்மாற்றும் சந்திக்கு முன் தொடங்கப்பட்ட சந்தை பல இடங்களுக்கு மாறிச் சென்று இப்போதும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த விடயம் இன்று எத்தனை பேருக்கு தெரியும் என்று தெரியவில்லை.

கல்முனை சாஹிராக் கல்லூரியில் 1961 ஆம் ஆண்டு தலை சிறந்த தமிழ் ஆசிரியர்கள் கற்பித்தனர். சண்முகம் சிவலிங்கம், மட்டக்களப்பு பாஸ்கரன், யாழ்.நவரெத்தினம், மகாலிங்கம் மற்றும் வெங்கடாச்சலம் போன்ற விஞ்ஞானப் பட்டதாரிகளும் மௌனகுரு செல்வநாயகம் போன்ற கலைப் பட்டதாரிகளும் கற்பித்தனர். 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சாஹிராக் கல்லூரியில் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. எமது பகுதியைச் சேர்ந்த இரத்தினவேல், பரதன் போன்ற தமிழ் மாணவர்கள் பலரை சாஹிராக் கல்லூரியில் சேர்த்தார். இவர்களுடன் என்னையும் இணைத்துக் கொள்ள நான் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்றேன். 1974 இல்

கல்வி டிப்ளோமா கற்கைநெறியை கொழும்பு பல்கலைகழகத்தில் மேற்கொண்டார். அக்காலப் பகுதியில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் புத்தக ஆக்கக் குழுவிலும் கடமையாற்றினார்.

*1977* இல் உவெஸ்லி உயர்தரப் பாடசாலைக்கு மாற்றம் பெற்று பின்னர் *1983* இல் பற்றிமாக் கல்லூரிக்கும் பின் *1990* ஆம் ஆண்டு மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரிக்கும், பின் *1992* இல் அதிபராகப் பதவி உயர்வு பெற்று பாண்டிருப்பு மகா வித்தியாலயத்திற்கு அதிபரானார். *1995* இல் அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். இதன் பின்னர் கலை இலக்கியப் பணிகளில் முழுமையாக ஈடுபட்டார். *2012.04.20* இல் இவ்வுலகை நீர்த்தார்.

□

# ஆக்காண்டி நீ போய்விட்டாயே!

சசி. வித்தியானி

ஆக்காண்டி, ஆக்காண்டி
நீ போய்விட்டாயே!
எம்மை விட்டு நிரந்தரமாய்
போயேவிட்டாயே!.

மலைக்கப்பால் போன
உன் குஞ்சுகள்
மறுபடியும் உனைப் பார்க்க
உன் பேரக்குஞ்சுகளுடன்
வரவிருக்கையில்
நீ இல்லாமல் போனாயே!

கரைவலை இழுப்பாய்
கொல்லன் உலையில் இரும்படிப்பாய்
சுடு வெயிலில்
பலமைல் சைக்கிள் மிதித்து,
கல்விப் பணிபுரிந்து,
எங்களை வயிறு நிறைத்து
வளர்த்தாயே!

எம் கைமாறு வாங்காமலே
போய்விட்டாயே!

உன் அறிவின் கூர்மையினாலும்
விவேகத்தினாலும்
பல்லாயிரம் பயங்கரங்களுக்குள்ளும்
உன் குஞ்சுகளின் உயிர் காத்த
'பிரமாண்டம்' நீ.

இன்னும் சில மாதங்கள்
பொறுத்திருந்தால்,
உன் மற்றப் பேரக்குஞ்சுகளுடனும்
உறவாடியிருப்பாயே.

உன் பேரக்குஞ்சுகளும்
பெரிதாய் வளர்ந்து வருகையில்
நீ போய்விட்டாயே!

அவர்களுக்கு நீ
என்ன சொல்ல நினைத்திருந்தாயோ?
உன் அன்பின் ஆழத்தையா?
இருப்பியல்வாதக் கருத்தையா?
உன் மாக்சிய சிந்தனைத் தெளிவையா?
வாழ்கைப் பரவளைவின்
உள் உரசல்களையா?
அன்றி,
எழுதி எழுதி பிரசுரிக்க விரும்பாத
இரகசியத்தையா?

ஆக்காண்டி ஆக்காண்டி
என்றும் நீ எங்களுக்கு
காவிய நாயகனே.
தந்து விட்டுப் போன
உன் படைப்புகள்
என்றும் அழியா ஓவியங்களே.

ஆக்காண்டி ஆக்காண்டி
மலைக்கப்பால் போன குஞ்சுகள்
உன் பேரக்குஞ்சுகளுடன்
மறுபடியும் வரவிருக்கையில்,
நீ இல்லாமல் போனாயே.

# அப்பாவின் ஆத்மாவுக்கு...

• சசி. மகரிஷி

அப்பா!

எங்கிருந்து தொடங்குவது என்ற நீண்ட குழப்பத்தின் பின்னர் இங்கிருந்தே தொடங்குகின்றேன்.

நான் அவுஸ்ரேலியாவுக்கு வந்த ஆரம்ப நாட்களில், அதாவது 2006 இன் முற்பகுதியில்
உங்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

அந்தக்கடிதம் இப்படித்தான் தொடங்கியது.

"இருள் சூழ்ந்த இந்த அறையில் என் மகள் டீப்தியை நெஞ்சோடு அணைத்துக்கொண்டு படுத்திருக்கிறேன். எதிரே அறையின் மூலையிலுள்ள சிறிய அலுமாரியின் மேல் மெல்லியதாய் சுடரும் மெழுகுவர்த்தி. மெழுகுவர்த்தியின் மங்கல் ஒளியில் தெரிகிறது மாதாவின் திருவுருவப்படம். இந்த இருள் சூழ்ந்த அறையும் அறையின் மூலையில் மங்கல் ஒளியும் மங்கலில் தெரியும் மாதாவின் முகமும் எனக்கு எங்களின் வீட்டில் அம்மாவின் அறையை ஞாபகப்படுத்துகின்றது.

மகள் நானாகிப்போக - நான் நீங்களாகிப் போகிறேன். எனக்கு நீங்கள் கதைகள் சொன்ன காலங்கள் துளிர்க்கின்றன. ஒரு ராஜா குதிரையில் வந்த கதை- தாயின் இதயத்தைக்கேட்ட மகனின் கதை-..............."

இப்படி ஒரு கடிதத்தை எழுதக்காரணம் என் மகள் டீப்தி தான். அப்பொழுது அவளுக்கு ஆறு வயது. இரவில்

அவளுக்கு நான் கதைகள் சொல்ல வேண்டும். சொன்னால் அதைக் கேட்டுக்கொண்டே தூங்கி விடுவாள். ஆனால் அவளுக்கு கதைகள் சொல்வது எனக்கு பெரும் சிரமமான காரியம். காரணம் டீப்திக்கு அப்போது தமிழ் சுத்தமாகத் தெரியாது. எனக்கு சிங்களம் சரளமாக பேச வராது. எனக்குத் தெரிந்த தமிழ்க்கதைகளை ஒவ்வொரு சிங்களச் சொல்லாக பொறுக்கிப்போட்டு அரையும் குறையுமாக சொல்லி முடித்திருந்தேன்.

அன்றிரவும் அவள் கதை சொல்லச்சொன்னாள். கதை சொல்லும் மனநிலை எனக்கு இருக்கவில்லை "புதிய கதைகள் ஞாபகமில்லை நாளை சொல்கிறேன்" என்றேன். "பொய் என்றாலும் பரவாயில்லை நீங்களே உருவாக்கிச் சொல்லுங்கள்" என்று அடம்பிடித்தாள். எனக்கு கோபம் வந்தது "கதையுமில்லை ஒன்றுமில்லை பேசாம தூங்கு" என்று கத்தி ஏசிவிட்டேன். அடித்தும் விட்டேன்.

என் சின்ன மகள் "கதை சொல்லுங்கள் டடா ....கதை சொல்லுங்கள் டடா....." என்று ஏங்கி ஏங்கி அழுது களைத்தே தூங்கி விட்டாள். இது என் மனதை குடைந்து கொண்டே இருந்தது. அன்றிரவு முழுவதும் எனக்கு நித்திரையே வரவில்லை.

அறையின் முகட்டையே பார்த்தபடி படுத்திருந்தேன்.

எங்கள் வீட்டின் நடுவறையில் (அம்மாவின் அறையில்) நான் இருப்பது போலவும் எனக்குப் பக்கத்தில் நீங்கள் இருப்பது போலவுமான உணர்வுக்குள் ஈர்க்கப்பட்டேன். எனக்கும் அப்போது ஆறு அல்லது ஏழு வயது தான் இருக்கும்.

எங்கள் வீட்டுக்கு மின்சாரம் இல்லாத அந்த நாட்களில் அம்மாவின் அறையிலுள்ள பெரிய கண்ணாடி அலுமாரியின் மேல், தங்கமுலாம் பூசியது போன்று பளபளக்கும் பெரிய சிமினி விளக்கு ஒளிர்ந்து கொண்டிருக்கும். அலுமாரிக்கு பக்கத்தில் இடப்புறமாய் சுவரில் கருணையே உருவான இயேசுநாதரின் பெரிய திருவுருவப்படம் மாட்டப்பட்டிருக்கும். சிமினி விளக்கின் வெளிச்சத்தில் தெரியும் இயேசு நாதரின் திருமுகத்தை பார்த்த படியே நான் பண்பாயில் படுத்திருப்பேன். நீங்கள், எனக்குப் பக்கத்தில் படுத்தபடியே கதைகள் சொல்வீர்கள், நான் கேட்காமலேயே நிறையக் கதைகள் சொல்வீர்கள்.

இந்த நினைவுகளும் இதனோடு இணைந்து எனது சிறுவயது நினைவுகள் பலதும் ஒவ்வொன்றாய் ஒன்றன் பின் ஒன்றாய் என்னுள் முளைக்கத் தொடங்கின.

மறு நாள் அந்தக் கடிதத்தை எழுதத் தொடங்கினேன்.

கடிதத்தை எழுதிக்கொண்டிருந்த போது 'தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான கடிதம் ஏன் ஒரு இலக்கிய வடிவத்தை பெறமுடியாது?' என்ற எண்ணம் தோன்றவே 'அப்பாவுக்கு......' என்று தலைப்பிட்டு பத்திரிகையொன்றுக்கு அனுப்பலாம் என முடிவு செய்தேன். பின்னர் அதை சிறுகதையாய் எழுதலாம் போலவும் தோன்றிற்று. இவ்வாறு எண்ணங்கள் பின்னலானதினால் அந்த கடிதம் எழுதி முடிக்கப்படவுமில்லை அனுப்பப்படவுமில்லை.

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது உங்கள் மறைவுக்கு சில நாட்களின் பின்னர் உங்களைப் பற்றிய கட்டுரைகளை

இணையத்தில் தேடித்தேடிப் படித்துக்கொண்டிருந்த போது தற்செயலாக என்னுடைய கவிதையொன்றை நூலகம் தளத்தில் காண நேர்ந்தது. சரிநிகர் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த (26-11-2000) அந்தக் கவிதையைக் கண்டவுடன் உங்களை இழந்ததன் ஏக்கமும் வலியும் இன்னும் அதிகமாயிற்று. அதனால் 'அப்பாவின் ஆத்மாவுக்கு...' என்ற தலைப்பில் கட்டுரையொன்றை பத்திரிகையில் எழுத எண்ணினேன். வழமையான தள்ளிப்போடல்களும் தடைகளும் காரணமாக அதனையும் எழுத முடியவில்லை. அதை இப்பொழுது எழுதுகிறேன்.

## கவிதைகள் பற்றி கதைத்ததேயில்லை

அப்பா! கவிதைகள் பற்றி நான் உங்களுடனோ அல்லது நீங்கள் என்னுடனோ ஒரு நாளேனும் கதைத்ததேயில்லை. எனது கவிதைகள் பற்றி என்னிடம் நீங்கள் நேரடியாக எதுவும் சொன்னதும் இல்லை. 'சொந்தச் சுமைகள்' தொகுப்பில் இடம்பெற்ற எனது நான்கு கவிதைகள் பற்றி முன்னுரையில் சொல்லியிருக்கிறீர்கள்.

சஞ்சிகையொன்றில் (தமிழ் உலகம்) வெளியாகியிருந்த என்னுடைய 'என் சின்ன மகளும் எங்கள் புழுதி மண்ணும்' கவிதையை வாசித்து விட்டு அம்மாவிடம் சொன்னீர்களாம் "ரிஷி நல்லதொரு கவிதை எழுதியிருக்கிறான் " என்று. தவிர, எனது கவிதைகள் பற்றி என்னிடம் நீங்கள் நேரடியாக கதைத்ததேயில்லை.

என்னைப் பார்க்க நீங்கள் கொழும்புக்கு வந்திருந்த ஒரு

சமயம் *(2001ஆம்* ஆண்டு என நினைக்கிறேன்) என்னுடைய கவிதையொன்று பற்றி உங்களுடன் பேச ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

நீங்கள் என்னுடன் பேசிக்கொண்டிருந்த போது முழுமை பற்றியோ அல்லது வெறுமை பற்றியோ பேச்சு வந்தது. அப்பொழுது நான் "நான் ஒரு கவிதை எழுதியிருக்கிறேன் வெறுமை சமன் முழுமை என்று" எனச் சொன்னேன். உடனே நீங்கள் "எங்கே காட்டு பார்க்கலாம்" என்றீர்கள். கவிதயைத் தேடினேன். பத்திரிகை நறுக்கைக் காணவில்லை. அக் கவிதை அந்த நேரம் ஞாபகமும் வரவில்லை. பெரும்பாலும் என்னுடைய எல்லாக் கவிதைகளும் எனக்கு மனப்பாடமாகவே இருக்கும். ஆனால் குறித்த கவிதை அன்று ஞாபகத்தில் வராமல் போனது ஏன் என்று தெரியவில்லை.

அதனால் உங்களுடன் கவிதை பற்றி நேரடியாக கதைக்கக் கிடைத்த வாய்ப்பும் கைநழுவிப் போனது.

அக் கவிதை பற்றி நீங்கள் என்ன சொல்வீர்கள் என அறியும் ஆவலும் நொறுங்கிப் போனது. பின்னர் நான் அது பற்றி மறந்தும் போனேன்.

கிட்டத்தட்ட *11* ஆண்டுகளின் பின்னர் அக் கவிதையை காண நேர்ந்த போது கலங்கிப்போனேன். நாலைந்து நாட்கள் முன்னதாக இக் கவிதை என் கண்ணில் பட்டிருக்கக் கூடாதா? உங்களை இழந்ததன் பின்னர் ஏன் காண நேர்ந்தது? என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கினேன்.

இது தான் அந்தக் கவிதை.

**வெறுமை = முழுமை**

*நான்*

*வெறும் வெளி*

*வெண் தாள்*

*ஒரு கறுப்புப் படலம்.*

*என்னில்;*

*எந்தச் சிறு புள்ளியுமில்லை.*

*ஏதுமற்ற*

*எனது கறுப்புப் படலத்தை*

*பெரும் கரு வட்டமாக*

*கண்டவர்கள் நீங்கள்.*

*எனது வெளிர் தன்மையை*

*நிறப்பிரிகை செய்து*

*ஏழு நிறங்களாக*

*பார்த்தவர்கள் நீங்கள்.*

*எனது சூனியத்தை*

*இன்னும் நீங்கள்*

*ஏற்றுக் கொள்ளவில்லை.*

*எனது*

*கருமை ஊடும்*

*வெண்மை ஊடும்*

*என்னை நீங்கள்*

*முழுமையாய் காண்கிறீர்கள்.*

*முழுமைதான் -*

*வெறுமையில் நான் முழுமைதான்.*

நான் ஊர் விட்டு வந்த பின்னர் அதாவது ஒரு ஊடகவியலாளனாய் கொழும்பு வந்த பின்னர் எழுதிய கவிதைகளிலொன்று இது.

நிகழ்வுகளினதும் நினைவுகளினதும் பதிவுகளாக வருகிற எனது சற்று நீண்ட கவிதைகளிலிருந்து அல்லது *'சொந்தச் சுமைகள்'* தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகளிலிருந்து உருவத்திலும் உள்ளடக்கத்திலும் வேறுபட்டது இக் கவிதை.

இதை நீங்கள் வாசித்திருந்தால், பரவாயில்லை என்று சொல்லியிருப்பீர்களா? அல்லது கவிதை எழுத எனக்கு இன்னும் பயிற்சி தேவையெனச் சொல்லியிருப்பீர்களா? அல்லது இக் கவிதையில் என்ன இருக்கிறது, ஏன் இதை எழுதினாய் எனக் கேட்டிருப்பீர்களா?........இப்படி எத்தனையோ கேள்விகள் என் இதயத்தை அரித்துக் கொண்டேயிருக்கின்றன.

## *உங்கள் இலக்கிய வாரிசாகாமல் தோற்றுப் போனவன்.*

*கல்முனையில் (கார்மேல் பாத்திமா கல்லூரி கிளனி மண்டபத்தில்) 92 அல்லது 93 இல் (சரியாக ஞாபகமில்லை) நடைபெற்ற சாகித்திய விழாவில் நீங்கள் வாசித்த கட்டுரையில், கல்முனைப் பிரதேசத்து புதிய கவிஞர்களின் வரிசையில் அதாவது கல்முனைப் பிரதேசத்தின் மூன்றாவது தலைமுறைக் கவிஞர்களின் பட்டியலில் எனது பெயரையும் சேர்த்திருந்தீர்கள். அத்துடன் தினகரன் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த என்னுடைய 'ஒற்றை நட்சத்திரம்' கவிதையின் சில வரிகளையும் அங்கு படித்தீர்கள்.*

*அதைக் கேட்டபோது அதிச்சியாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. இன்னொரு புறம் பெரும் பயமும் என்னைப் பற்றிக் கொண்டது. உங்கள் வார்த்தையை காப்பாற்றுவேனா? என்ற பயம் தான் அது.*

*பிறகு அவ்வப்போது ஏதோ கொஞ்சம் எழுதிக் கொண்டிருந்தேன். பின் நாட்களில் எழுத்திலிருந்து தூரத் தூரப் போய்க்கொண்டேயிருந்தேன். நான் கொழும்பில் இருந்த நாட்களில், நீர்வை பொன்னையன் அவர்களுக்கு அறிமுகமானேன். அதன் பின்னர் விபவி கலாசார மையம் நடாத்துகின்ற நூல் விமர்சனக் கூட்டங்களில் உரை நிகழ்த்த என்னை அவர் அடிக்கடி அழைத்துக் கொண்டிருந்தார். நீர்வை அவர்கள் அவருக்குத் தெரியாமலேயே என்னை புதிய தலைமுறையின் ஒரு விமர்சகனாய் உருவாக்கிக் கொண்டிருந்தார்.*

*2004 இன் முற்பகுதி என நினைக்கிறேன், விபவியின் ஏற்பாட்டில் வெள்ளவத்தை தர்மராம வீதியிலுள்ள பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தில் நடைபெற்ற தெணியான் அவர்களுடைய 'சிதைவுகள்' (குறுநாவல்) நூல் அறிமுகக் கூட்டத்திலும் நான் பேசினேன்.*

*அங்கு தெணியான் அவர்கள் தனது உரையில் சொன்னார்; "என்னுடைய கதைகள் பற்றி கல்முனையில் சண்முகம் சிவலிங்கம் 70 களில் பேசினார், சுமார் முற்பது வருடங்களின் பின்னர் அவருடைய மகன் என்னுடைய கதைகள் பற்றி இங்கே கொழும்பில் பேசியிருக்கிறார்" என்று. தெணியான் அவர்கள் இக் கூற்றை அவர் பக்கமாகச் சொல்லியிருந்தாலும் நான் வேறொரு அர்த்தத்தில் எனது பக்கமாக்கிக் கொண்டேன். அதாவது நீங்கள் பயணித்த விமர்சனப் பாதையிலும் நான் காலடி எடுத்து வைத்திருக்கிறேன் என்று. ஆனால் அந்தப் பயணமும் பாதியிலேயே நின்று போனது.*

*நான் அவுஸ்ரேலியா வந்த பிறபாடு எப்போதாவது உங்களுடன் தொலைபேசியில் கதைக்கும் போது நீங்கள் தவறாமல் இரண்டு கேள்விகள் கேட்பீர்கள். "சந்தோசமாக இருக்கிறாயா? ஏதும் எழுதுகிறாயா? இக் கேள்விகளுக்கு எப்போதும் எனது பதில் ஆமும் இல்லையுமாகவே இருந்தது. ஏதும் எழுதவில்லையா என நீங்கள் கேட்கும் போதெல்லாம் அதை நான் அவ்வளவு பொருட்படுத்தவில்லை.*

*இன்னொரு நாள் கேட்டீர்கள் "மகன் கொழும்பு இலக்கியக் கூட்டங்களில் நீங்கள் பேசிய பேச்சுகள்*

இருந்தால் எனக்கு அனுப்புங்கள், என்னுடைய சில விமர்சன உரைகளையும் சேர்த்து 'முன்னும் பின்னும்' என ஒரு புத்தகம் போடலாமென எண்ணியுள்ளேன்" என்று.அப்போதுதான் ஒரு விடயம் பளிச்சிட்டது.

உங்களுடைய இலக்கிய வாரிசாக நான் இருக்க வேண்டுமென்று உங்களின் கடைசிக் காலங்களில் நீங்கள் விரும்பி இருக்கிறீர்கள். இதை நினைக்க நினைக்க கவலையாகவே இருக்கிறது.

அப்பா! உங்கள் பெயர் சொல்லும் அளவுக்கு நான் எழுதவில்லை. தொடர்ச்சியாகவும் எழுதவில்லை. ஆம்! துளிர் விடுகையிலேயே கருகிப்போனவன் நான். உங்கள் இலக்கிய வாரிசாகாமல் தோற்றுப்போனவன் நான். எனினும் தோல்விகள் முடிவல்லவே. துளிர்கள் கருகினாலும் வேர்கள் இன்னும் உயிர்ப்புடன் தான் இருக்கின்றன. என்னை மறைத்திருப்பது பனிப் புகார்தான். பருவ காலம் மாறும் போது பனிப்புகாரும் விலகும். அப்போது பூத்து பின் துளிர்ப்பேன்.

நான் எப்போதோ எழுதிய 'கல்லாகி விட்டேன்' கவிதையின் கடைசி வரிகள் ஏனோ இப்போது வந்து விழுகின்றன.

***'.....என்னை யாராவது / பட்டைதீட்டினால் / வைரமாய் ஒளிர்வேன் / இல்லையேனும் கவலை கொள்ளேன் / என்றோ ஒரு நாள் / என்னை / நானே செதுக்கி / சிற்பமாகவேனும் எழுவேன்.***

## *பரதேசியாய் அலைக்கழிந்து எங்கள் உயிர் காத்த கடவுள் நீங்கள்.*

'அப்பா' என்ற சொல் எல்லோருக்கும் அற்புதமானது. ஆனால் எங்களுக்கோ அற்புதத்திலும் அற்புதமானது.

இக்கட்டான காலகட்டங்களில் எங்களை ஊர் ஊராய் கொண்டோடி காப்பாற்றிய கடவுள் நீங்கள்.

மருதமுனையில் மருதூர்க்கனி மாமா வீட்டில், அஸீஸ் சேரின் வீட்டில், அஸீஸ் சேரின் உதவியுடன் அட்டாளைச்சேனையில் இரு இடங்களில், அல்விஸ் சித்தப்பாவின் உதவியில் அம்பாறையில் அவரின் நண்பர்களின் குவாட்டஸில், நீலாவணையில் யோகராஜா அண்ணன் வீட்டில், கல்லாற்று ஐயா வீட்டில், களுதாவளையில் செல்வநாயகம் அவர்கள் வீட்டில், செட்டிபாளையத்தில் வைத்தியர் ஒருவரின் டிஸ்பென்ஸ்சரியில், தேத்தாத்தீவு தேவாலயத்தில், மூர்த்தி அண்ணனின் உதவியுடன் மாங்காட்டில் அவரின் உறவினர் பரமலிங்கம் அண்ணனின் வீட்டில், பரமலிங்கம் அண்ணனின் உதவியுடன் கடுக்காமுனையில் அருளானந்தம் அவர்களின் வீட்டில், பெரியபோரதீவில் தாயா அண்ணனின் மனைவியின் உறவினர் வீட்டில்..... இப்படி ஊர் ஊராய் வீடு வீடாய் எங்களைக் கொண்டோடி காப்பாற்றினீர்கள்.

எங்களுக்காக பலரிடம் கெஞ்சி மன்றாடி அடைக்கலம் கேட்டீர்கள். பல தடவைகள் அவமானப்பட்டும்

போனீர்கள். சுற்றிவளைப்புகளைத் தவிர்க்க எங்களோடு நள்ளிரவிலும் அதிகாலையிலும் ஆறுகள் கடந்தீர்கள். பொட்டல் காடுகள் கடந்தீர்கள். வேகா வெயில் கடலோரம் நெடு நடைகள் நடந்தீர்கள்.

என்னையும் சௌஜனனையும் சில வேளைகளில் கௌசியையும் ஓரிடத்தில் விட்டு விட்டு அம்மாவையும் நிம்மியையும் பார்க்க இன்னொரு இடத்திற்கு எத்தனை மைல் தூரமானாலும் எந்தச் சாமமானாலும் சைக்கிள் மிதித்துத் திரும்புவீர்கள்.

வயல் வரம்புகள், கருங்கல் வீதிகள். கிறவல் மேடுகள், மணல் வெளிகளென உங்கள் சைக்கிள் சில்லுகள் சுழலும். எழுவான் கரையிலிருந்து படுவான் கரைக்கும் படுவான் கரையிலிருந்து எழுவான் கரைக்குமென நீங்கள் பரதேசியாய் அலைக்கழிந்து திரிந்ததையும் பட்ட கஷ்டங்களையும் எழுதிச் சொல்லி விட முடியாது.

அப்பா! உங்களுக்குத் தெரிந்த இந்த விடயங்களை ஏன் எழுதுகிறேன் என்றால், இந்த உலகத்தில் தங்கள் பிள்ளைகளின் உயிரைக் காப்பாற்ற உங்களைத் தவிர வேறெந்த தந்தையும் இப்படிக் கஷ்டப்பட்டிருக்க மாட்டார்கள் என்பதைச் சொல்லத்தான்.

நீங்கள் எங்களுக்கு அப்பாவாக கிடைத்ததுக்கு கடவுளுக்கு அன்றி உங்களுக்கே நன்றி கூறுகின்றோம்.

இதை எழுதிக்கொண்டிருக்கையில் எனது கவிதையொன்றின் (அகாலத்தில் அவளுக்கு ஒரு கடிதம்) பின்வரும் வரிகள் நினைவுக்கு வந்து போகின்றன.

*தேத்தாத்தீவு / தேவாலய அகதிமுகாமில் / ஒழுகுகின்ற ஓலைக்கொட்டிலினுள் / நித்திரையேயின்றி / எங்கள் நிலையை நினைத்து நினைத்து / அழுது அழுது விழித்திருந்த / இரவுகளைச் சொல்லவா.*

*ஒரு நடுமதியம் / அலவாய்க் கரையோரம் / கூனிய முதுகுடன் / கால்கள் புதையப் புதைய / நா வறல வறல நடந்த / நெடு நடையைச் சொல்லவா?*

*நள்ளிரவிலும் / பின்னோர் பின்னிரவிலும் / ஓட்டத் தோணிக்கு / கைகளைத் துடுப்பாக்கி / நெடுங்கம்பு ஊன்றி ஊன்றி / மங்கல் நிலவொளியில் / எங்கள் உயிரைக் கொண்டோடினோமே / அந்தக் கணங்களைச் சொல்லவா?.*

***உங்களின் வாழ்க்கைக் காவியம்***

அப்பா! நீங்கள் என்னுடன் கடைசியாக தொலைபேசியில் கதைத்த போது, சந்தோசமாக இருக்கிறாயா? ஏதும் எழுதவில்லையா? என்ற கேள்விகளோடு உங்களுடைய கவிதைத் தொகுதி எப்படி இருக்கிறது என்றும் கேட்டீர்கள். நானோ "கவிதைகள் தொகுக்கப்பட்ட முறை வித்தியாசமாக இருக்கிறது. நன்றாக இருக்கிறது." என்று மட்டும் சொன்னேன். அப்பா இப்போது சொல்கிறேன்.

தொகுதியிலுள்ள ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு சிறுகதை, ஒவ்வொரு இயலும் ஒவ்வொரு குறுநாவல். மொத்தத்தில் சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும் உங்களின் வாழ்க்கைக் காவியம். உங்கள்

வாழ்க்கையையும் உங்கள் படைப்புகளையும் சிறு கோடு வரைந்தேனும் பிரிக்கமுடியாது என்பதற்கு சாட்சியம்.

தொலைக்காட்சியிலோ, வானொலியிலோ, புகைப் படத்திலோ, பாராட்டுக் கூட்டத்திலோ உங்களை மலினப்படுத்த முடியாது என்று ஏன் சொன்னீர்கள் என்றுதான் இங்கு யாருக்கும் விளங்கவில்லை.

உங்களை மிகச்சரியாக மதிப்பிட எவராலும் முடியாது என்பதனால் அப்படிச் சொன்னீர்களோ என ஓர் எண்ணம் என்னுள்.

அப்பா! கடைசிக் காலங்களில் நீங்கள் தீர்க்க தரிசனமாக பேசியதாகவும் தீர்க்க தரிசனமாக பல விடயங்களைச் செய்ததாகவும் அம்மா சொன்னார்.

அப்பா! கடைசிக் காலங்களில் மட்டுமல்ல ஆரம்ப நாட்களிலேயே நீங்கள் தீர்க்க தரிசனமாகத்தான் பேசியிருக்கிறீர்கள்.

ஆம்! உங்களின் 'வெளியார் வருகை' மட்டுமன்றி என்னளவில் 'ஆக்காண்டி'யும் தீர்க்க தரிசனத்தின் வெளிப்பாடுதான்.

ஈழத்தின் நவீன கவிதைப் பெருவெளியே! எங்கள் அப்பா! நீங்கள் என்றும் மரியாத உயிர்ச் சுவடாய் எந்த மாற்றமுமின்றி அதே ஆளுமையுடன் உலகம் உள்ளவரை உங்கள் படைப்புகளில் வாழ்வீர்கள். விலகிச்சென்ற

மையங்களும் வேறுபல புதிய மையங்களும் இப்போ உங்கள் படைப்புகளை நோக்கியே - உங்கள் படைப்புகளை நோக்கியே.

அப்பா! உங்கள் படைப்புகளைப் படிக்கையில் காதோரம் உங்கள் குரலே கேட்கிறது. நீங்கள் எங்கள் அருகில் இருப்பதாகவே உணர்கிறோம்.

எனினும் எனக்குள் ஓர் ஏக்கத் தீ எரிந்து கொண்டேயிருக்கிறது. என் மூத்தமகள் டீப்தி வளர்ந்திருக்கும் அழகை நீங்கள் பார்கவில்லையே! என் சின்ன மகன் ஹெவினை *(Gevin)* நீங்கள் தூக்கவில்லையே! என்ற ஏக்கம்தான் தீயாய் இன்னும் என் நெஞ்சுக்குள்.

இதை முடிக்கையில் உங்களுக்கு ஒரு கவிதை எழுத முயற்சிக்கின்றேன், எழுத எழுத உதிர்கிறது கண்ணீர்தான். அதனால் இப்போதைக்கு எனது கண்ணீரே உங்களுக்கான எனது கவிதை.

நீ ளு ம் நினைவுகளுடன்

உங்கள் மகன் ரிஷி.

சிட்னி, அவுஸ்ரேலியா.

□

# நெஞ்சோடு கலந்த நினைவுகளிலிருந்து...

அரு. கணேஷ்

மேகம் சொரிந்த உனது நினைவு மழையில்
நிமிர்ந்து நிற்கிறாய்
ஒரு பெரும் விருட்ஷமாக
நிலத்தின் ஆழத்திலிருந்து
எல்லையில்லாத ஆகாயத்தை நோக்கி.

நீ பதித்துச் சென்ற சுவடுகளை
நான் மீட்டுப்பார்க்கிறேன்.
ஒரு கவிஞனாக, ஒரு புத்திஜீவியாக, ஒரு எழுத்தாளனாக
யாவற்றுக்கும் மேல்
ஒரு மனிதனாக நீ நடந்த சுவடுகள்
எப்போதும் அழியாத பதிவுகள்.

பாண்டிருப்பின் எல்லைகளைத் தாண்டி
தேசங்களைத் தாண்டி
பாடுகின்றன உன் எழுத்துக்கள்.

இருப்பின் உண்மைதான் மரணம்
என நீ கூறிய வார்த்தையின் அர்த்தம்
நீ இல்லாத வெறுமையை உணர்த்தியிருக்கிறது.

உன் உயிர்ப்பறவை உன்னிப்பறந்த
அந்த மரக்கிளை
என் நெஞ்சத்துள் இன்னும் அசைந்து
கொண்டிருக்கிறது.

## ஊர் மக்களை மகிழ்வித்தவர்

• **கென்றி ஜெயராஜா** *(மைத்துனர் — கனடா)*

எனது மைத்துனரும், நல்ல நண்பருமான அமரர் ஸ்டீபன் சிவலிங்கத்தின் முதலாவது ஆண்டு நினைவாஞ்சலிக்கு, எனது சார்பிலும் எங்கள் குடும்பத்தின் சார்பிலும் இந்த செய்தியை எழுதுவதில் நான் உரிமையும் பெருமையும் அடைகிறேன். இவரின் முதலாவது ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் திகதி. பாண்டிருப்பின் தவப்புதல்வனான ஸ்டீபன் சிவலிங்கத்தின் நினைவாகச் செய்யப்படும் இந்நிகழ்ச்சி பொன்னேடுகளில் பொறிக்கப்பட வேண்டிய நந்நாள்.

இத்தருணத்தில், இவரைப்பற்றி, இவருடன் சேர்ந்து இருந்த கால நினைவுகள் சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன். எனது இளமைப் பருவம் தொடக்கம், நான் இவருடன் சேர்ந்து செய்த காரியங்கள் பல. இவர் எனக்கும், என் நண்பர்கள் பலருக்கும் ஓர் தூண்டுதலாக விளங்கினார். இவரிடம் பல திறமைகள் உண்டு. அதில் நான் சிறப்பாக குறிப்பிட விரும்புவது, இவரிடம் இருந்த சமூக தொண்டாற்றல் ஆர்வமாகும். நாங்கள் சிறு பையன்களாக இருந்த காலத்தில், எங்கள் ஊரான பண்டிருப்பில் வருடா வருடம் விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவார். எங்களை இரு இல்லங்களாகப் பிரித்து, அவற்றிற்கு 'ராஜூ இல்லம்', 'கோவிந் இல்லம்' எனப் பெயரிட்டு போட்டிகளை 'பைரன் மைதானத்தில்' நடத்தி, எங்கள் ஊர் மக்களை மகிழச் செய்ததை மறக்க முடியாது. இவ்விளையாட்டுப் போட்டிகள் பல ஆண்டுகளாக மிக சிறப்பாக நடத்தப்பட்டன. இதற்கெல்லாமான பெருமை ஸ்டீபனையே சார்ந்தது.

அமரர் ஸ்டீபன் அவர்கள் எனது தங்கை தங்கராணியை 1964ம் ஆண்டு மணம் புரிந்து, ஆறு ஆண் குழந்தைகளைப் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்தார். இவரின் மூத்த புதல்வன் சுதா வித்தியானி, இன்று வட கலிபோர்னியாவில் வசிக்கிறார். இரண்டாவது மகன் ரிஷி அவுஸ்ரேலியாவில் வசிக்கிறார். இவரின் மற்ற புதல்வர்கள் இலங்கையில் வெற்றிகரமாக தொழில் புரிகின்றனர். இவர் அமரத்துவம் அடைந்த வேளையில் தனது மனைவி தங்கராணியை நல்ல ஆசீர்வாதத்துடனும், ஒரு குறைவில்லாமலும் விட்டுச் சென்றுள்ளார்.

நானும், எங்கள் குடும்பத்தாரும் அமரர் ஸ்டீபன் சிவலிங்கத்தை வெகுவாக இழந்து நிற்கிறோம். ஆண்டவரும், கர்த்தர் யேசுவும் இவரின் ஆத்மாவுக்கு நித்திய இளைபாற்றியை கொடுப்பாராக. மற்றும், இவர் பிரிவால் வாடும் இவர் மனைவி, பிள்ளைகள் ஆகியோருக்கு ஆண்டவர் ஆறுதல் அளிப்பாராக.

□

# எழுத முடியாத உணர்விலிருந்து.......

**கல்லூரன்**

எழுத முடியாத உணர்விலிருந்து
எழுகிறது உன் நினைவு
கேட்க முடியாத இடத்திலிருந்து
கேட்கிறது உன் குரல்
பார்க்க முடியாத இடத்திலிருந்து
பளிச்சிடுகிறது உன் முகம்.

வெறும் குருதியினாலும் தசைகள்
எலும்புகளாலும் ஆக்கப்பட்ட மனிதப் பிண்டங்கள்
மன்னிக்கப்படட்டும்.
கிடுகுகளால் வேயப்பட்ட பர்ணசாலைக்குள்ளும்
இருக்கிறது உனக்கு ஒரு சிம்மாசனம்.
புல்லை வெறும் புல்லாகவே பார்த்து பரிகசிக்கும்
புல்லுருவிகள் மன்னிக்கப்படட்டும்.

புல்லுக்குள்ளும் புதையல்களைக் கண்டவன் இவன்.
இன்னும் இவன் நினைவுகளை என் உணர்வுகளில்
எழுதி எழுதிப் பார்க்கிறேன்
இன்னும் இவன் குரல்களை
என் செவிகளால் கேட்டுக் கேட்டுப் பார்க்கிறேன்.
எங்கோ ஒரு இடத்திலிருந்து எனக்கு மட்டும்
தோன்றிய காட்சியிலிருந்து
எழுதியது இக்கவிதை .

## எனக்குள் வாழும் சசி ஐயா!

• மருதமுனை விஜிலி

ஒரு மனித நேயம்; காலத்தைப் பெறுமானமாய் பௌத்திரப்படுத்திய இலக்கியச் சிகரம். இம்மண்ணின் பேற்றினை உச்சத்திற்கு வெளிக் கொணர்ந்த பெருந்தகை. மருதமுனை மண்ணோடும் இரக்கம் கொண்டு தனக்குள் பொதிந்து கிடக்கும் புலமைகளை, தான் இணைந்திருந்த கமு/ஷம்ஸ் கல்லூரியில் பல மாணவர்களை இலக்கியம், ஆங்கிலம் சார் திறன்களில் உயர இருத்திய பெருமைக்குரியவர். ஊர் இருள்படத் தொடங்கும். அப்போதும் தன் உடன்பிறப்புகள் என நினைந்து ஆங்கிலக் கல்வியினைப் புகட்டியவர்.

இதனால் தான் ஐயா, மண்ணறையை நெருங்கிய போது மருதமுனை சமுதாயம் விழிநீரால் கசிந்து, உடல் உறைந்து போனது அக்கணம். இங்குள்ள மாணவர் சிலர் உயர்பதவிகளில் இருப்பதற்கு ஐயா சசியின் முனைப்பே காரணமென கூறலாம்.

கவிஞர் மருதூர்க் கொத்தனின் மரணச் சேதிகேட்டு இப்படிச் செதுக்கினார் ஐயா அவர்கள்;

ஓ ... மருதூர்க் கொத்தனா?

நாக்குளறி, நடுங்கி,

வீரென்று கத்தினேன், முகம் வியர்க்க.

என்ன . . . என்ன ?

என்று என்னை உலுப்பினாள்

படுக்கையில் கிடந்த என் பாவை *(31.07.2004)*(மருதூர் கொத்தன் மீள்தல்)

இவ்வாறு தான் இவர் மத, இனங்களுக்கப்பால் தன் இலக்கிய நேயங்களுடன் உறவாடிய நட்பு. இவர் ஒரு கவிஞராக முழுமைப் படுத்தப்பட்டாலும் புனை கதைகள், குறுநாவல், பத்தி எழுத்துக்கள் *(column writing)* ஆய்வு, என்றெல்லாம் தன் இலக்கியப் பாதையைச் செவ்வனே செப்பனிட்டவர். ஐயாவின் எழுத்துக்கள் மனிதாபிமானத்தை அடையாளங்கண்டன.

இதனால் தான் என்னவோ? மருதமுனையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'முனைப்பு' சஞ்சிகையில் 'மனிதநேயமும் மண்ணாங்கட்டியும்' சிறுகதையை எழுதி பேசப்பட்டவர். வியூகம் சஞ்சிகையில் தடம் பதித்த, கன்னிகா, காட்டுப்பூச்சி புனைவுகளும் கனத்த இதயங்களில் வீற்றிருந்தன. மட்டுமன்றி, 'களம்' சஞ்சிகையில் வேரூன்றிய 'காலடி' குறுநாவல் இலக்கிய உலகில் மெச்சக் கூடியதாய் அதிர்வு கொண்டது. அது யாருமே தொட்டிராத வித்துவப் பணி.

சமூக அரசியல், மற்றும் போர்க்காலக் கவிதைகளை உயிரோட்டமுள்ளதாக்கியவர். பாட்டாளி மக்களுக்காகவும், தன் பேனாவினைக் குனிய வைத்தவர்.

*இன்று மட்டும் –*

*இனித் துன்பம் இல்லை என்பர்;*

*போய் உழைப்பர் –*

*சந்தியில் நிற்கிறேன்*

*பகல் சாய்கிறது . . .*

. . . . . . . . . . . . . . . .

உழைப்பிற்காக மக்களின் அல்லல்களை தன் நீர் வளையங்களில் கவி வடிவமாக்கினார். தான் எப்போதும் ஒரு சுதந்திரமான தேசத்தைக் கனவு கண்டவர். இதனை இவர் 1985ல், எழுதிய *'காவல் அரண்'* கவிதையில், **மீட்கப்பட்ட தமிழ் மண்ணில்/எனது சைக்கிள் உருண்டோடும்/வெறிச்சோடிய தெருக்களின் பகல் பொழுதில்/பழுத்த இலைகள் உதிர்ந்து கிடக்கும்**, என்றார்.

மேலும் இனங்களுக்கிடையிலான உறவுப் பாலமாய் திகழ்ந்து எழுத்தினைப் புடம் போட்டவர். 1987 ல் இந்திய சிப்பாய்கள் காலடி பதித்த போது நிகழ்ந்த அநீதங்களை அடையாளப் படுத்தினார்; **சமாதானச் சாக்கடையில்/ தமிழ்ப் புறாக்களும்/முஸ்லீம் புறாக்களும்/ஏழெட்டு நாட்களாய் குந்தி எச்சமிடும்/வெறிச்சோடிய வீதிகளில்/ மணல் சாக்குகளை அடுக்கி/இந்திய துப்பாக்கி வீரர் இருக்கையிலே . . .!** என்றாரே. என்னை வாசிப்பதற்கும், எழுதுவதற்கும், உரமூட்டிய அந்த உள்ளத்தை எழுதும் போது கரம் வலிக்கிறது. ஐயா எழுதிய 'துருவப் பறவைகள்' சிறுகதையில் என்னையும் ஒரு பாத்திரமாக சித்தரித்தாரே! ஒட்டு மொத்தத்தில் எல்லா வகுதியினரையும் எழுத்துக்களால் சாட்சி பகிர்ந்தவர். அந்த ஆத்மாவுக்கான மீட்டலுடன் விடைபெறுகிறேன்.

□

# வேர்களும் விழுதுகளுமானவர்

## திருமதி. வீ. புவனராஜா

பாஞ்சாலி பதிகொண்ட பாண்டியூர்
கிராமந்தன்னில்
பிள்ளைப்பருவத்தை இனிதே கழித்து
கல்விக்கு கலங்கரை விளக்கானீர்
காளைப்பருவத்தில் கைப்பிடித்தீர்
தங்கராணியை.

இல்லற வாழ்வின் சின்னங்கள் ஆறு தந்தீர்
அத்தனையும் ஆண் சிங்கங்கள் என்பதில்
எத்தனை பெருமை உமக்கு
மனைவியை நேசித்தீர் மக்களை ஆசித்தீர்
இன ஒற்றுமையை இதயத்தில் பதித்தீர்
எல்லா இனத்தோடும் இங்கிதமாய் நடந்தீர்
கவிதை இலக்கியத்தில் கரை காணாதவர் நீர்

மதங்களை மதித்தவர் நீர்
மதம் பிடிக்காதவர் நீர்
வேர்களும் விழுதுகளும் சேர்ந்தவர் நீர்
விருட்சமாய் விண்ணுலகில் மறைந்தவர் நீர்

உத்தமனாய் வாழ்ந்து உயர்ந்தவர் நீர்

சத்தியத்தை உமது சொத்தாக நினைத்தீர்

எங்களோடு இங்கிதமாய் வாழ்ந்தவர் நீர்

எங்களைப் பிரிந்து விட்டீர்

இன்றுடன் ஓர் ஆண்டு.

*The mankind has discovered new drugs for heart disease but not discovered the secrets of winning the hearts of people like you.*

# சிறந்த நாடக எழுத்தாளர் - நெறியாளர் - நடிகர்

● எஸ். தர்மலிங்கம்

*1936*ம் வருடம் இம் மண்ணில் உதித்த மைந்தர் இவர். இவரின் பெற்றோர்களாகிய சண்முகம் + சின்னப்பிள்ளை ஆகிய இருவரும் தம் கண்ணின் மணியென தாலாட்டி சீராட்டி சீராக வளர்த்தனர். *1941*ம் வருடம் கத்தோலிக்க மதகுருமாரால் ஸ்தாபிக்கப்பட்ட சென்.மேரிஸ் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். படு சுட்டியான இவர் படிப்பில் மட்டுமின்றி கலை நிகழ்ச்சிகள் விளையாட்டுப் போட்டிகளிலும் முதன்மை காட்டினார். இவரின் ஆற்றல்களைக் கண்ணுற்ற தலைமை ஆசிரியர் இவரை கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியில் கல்வி கற்க அனுமதி கொடுத்தார்.

இவரது ஆற்றலையும், படிப்பில் இவர் காட்டிய திறமையையும் கண்ணுற்று அதிபர் நறபுத்திகளை ஊட்டி மேலும் மெருகேற்றினார். இவரும் அவரின் நம்பிக்கைக்கு பாத்திரமாக சிறப்பாக கல்வி கற்று சாதாரணதரம் உயர்தரம் இரண்டு பரீட்சையிலும் பெறுமதியான சித்திகளைப் பெற்றார்.

அத்தருணம் கத்தோலிக்க மதத்தின் மேல் இவருக்கு ஏற்பட்ட ஈடுபட்டால் ஸ்டீபன் என்னும் நாமம் சூட்டி கத்தோலிக்கராக மாறினார்.

சிவலிங்கம் அண்ணன் என்றால் உடன் நண்பர்களுக்கு கண் முன் வருவது அவரது நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும், எதற்கும் அஞ்சா நெஞ்சுரமும்தான். மலை போன்ற விடயங்களை மிக மிக எளிதாக நினைத்து

அவ்விடயத்தை மிக நுணுக்கமாகவும், விரைவாகவும் செய்து முடிக்கும் வல்லமையுமே.

என் நண்பர் குழாத்திடம் அவர் மிக கண்ணியமாக இடும் கட்டளைகளை உடனடியாக செய்து முடித்து விடுவோம். பயத்தினாலல்ல, அவரது திறமை மீதும், அவர் மீதும் நாங்கள் வைத்திருந்த நம்பிக்கையினால். அவர் பேச்சுக்கு நாங்கள் எவரும் மறு வார்த்தை கூறமாட்டோம். எங்கள் திறமைகளை பாராட்டுவார். மென்மேலும் எங்களுக்கு ஊக்கமளிப்பார்.

இப்படியாக எவ்வேளையும் எங்களோடு இணைந்திருந்தவர், உயர் கல்வி கற்பதற்காக *1956*ம் வருடம் எங்களை விட்டு பிரிந்து கேரளா *(இந்தியா)*, மார் இவானியல் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி கல்வி பயில சேர்ந்தார். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற தருணத்தில் அங்கு நடைபெற்ற நாடகங்களில் முன்நின்று செயலாற்றி நடிப்பதோடல்லாமல் உள்ளக விளையாட்டுக்களிலும் *(INDOOR GAME)* திறமை காட்டி பரிசில்களும் பெற்றார்.

*1959*ம் வருடம் பல்கலைக்கழக பரீட்சையில் சித்தியடைந்து பட்டதாரியாக *(B.Sc.)* மீண்டும் தாய் நாட்டுக்கு திரும்பினார்.

இங்கு வந்தவுடன் பாண்டிருப்பு இளைஞர்களை ஒன்றிணைத்து 'இலங்கையர்கோன் இராவணேஸ்வரன்' என்னும் நெடுங்காவியத்தை திறமையாக நெறிப்படுத்தினார். அந்நாடகத்தில் நடித்த எங்கட்கு இன்னாரின்னார் இப்படி இப்படியான பாத்திரத்தில் எப்படி நடிக்க வேண்டுமென கற்றுத் தந்தார். நாங்களும் அவரின் சொற்பணிந்து அப்பெரும் காவியத்தை பாண்டிருப்பு, இந்து மகாவித்தியாலயத்தில் அவரின் மேற்பார்வையில், அவர் இந்தியாவில் கற்று வந்ததற்கொப்ப நாடக மேடையை ஒவ்வொரு

காட்சிக்கும் மூன்று திரைகளை அமைத்து எதுவித தடங்கலுமற்று நாடகத்தை அரங்கேற்றினோம். நெறியாண்மை, கதை வசனம், ஒப்பனை, காட்சி அமைப்புகள் போன்றவற்றை அவரின் நேரடிப் பார்வையில் ஒழுங்கமைத்ததுமல்லாமல் இராவணேஸ்வரன் பாத்திரத்தில் அவரும் நடித்தார்.

கடைசியாக 1ம் வகுப்புக்கு 1.65 சதமும் 2ம் வகுப்புக்கு 1.10 சதமும் டிக்கெற் விற்று ரசிகர்களை உள்ளே அனுமதித்து நாடகத்தை 2 ½ மணித்தியாலம் வரை நடத்தி சுபம் கூறி முடித்தோம். ஊரவர்கள் மனதாரப் புகழ்ந்து விட்டு வீடு சென்றனர்.

இக்காவிய நாடகம் இலங்கை பூராகவும் புகழாக பேசப்பட்டது. அவ்வேளை கொழும்பு வாழ் அன்பரொருவர் இரண்டாவது தடவையாக தலைப்பட்டிணத்தில் அரங்கேற்ற அண்ணன் அவர்களிடம் அனுமதி கேட்டு வந்தார்.

நாடகத்தில் நடித்த சிலருக்கு வீட்டிலும், வெளியூர்களிலும் பல கடமைகள் இருந்ததன் காரணமாக மேற்படி அரங்கேற்றம் ரத்தானது.

இது நடந்த அடுத்த மாதமே அம்பாறை பிள்ளையார் கோயில் திருவிழாவில் ஒரு நாடகத்தை அரங்கேற்றும்படி அண்ணரிடம் அக்கோயில் நிர்வாகிகள் மிக உருக்கமாக கேட்டனர். அண்ணரும் சம்மதித்து எங்களை ஒன்றிணைத்து ஒரு நாடகத்தை கதை வசனம் நெறியாண்மை, ஒப்பனை, திரை ஒழுங்குகள் முழுவதையும் தனியே செயலாற்றி 'மனப்போர்' என்னும் நாடகத்தை அவ் ஆலய வீதியில் அரங்கேற்றி அனைவராலும் பாராட்டப்பட்டார்.

இதன் பின்னர் அவருக்கு ஆசிரியராக அரசினரால் நியமனம் வழங்கப்பட்டு மருதானை சென்.ஜோசப்

கல்லூரியில் ஆசிரியராக கடமை ஏற்றார். இதன் பின்னர் எங்கட்கும் அவருக்கும் இடையே இருந்த உறவு தற்காலிகமாக துண்டிக்கப் பட்டது.

ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்தி நாலாம் ஆண்டு ஆவணி மாதம் 20ம் திகதி பெற்றோரின் சம்மதத்துடன் தங்கராசா-தங்கராணி என்னும் மங்கையை கரம் பற்றினார்.

இவர்களின் இனிய தாம்பத்திய வாழ்க்கைக்கு சான்றாக –

வித்தியானி

மகரிஷி

பிரகாஷ்

சௌஜனன்

கௌசிகன்

நிருமிதன்

என ஆறு ஆண் குழந்தைகளை ஈன்றெடுத்தனர். மேற்படி அறுவரில் பிரகாஷ் விடலைப் பருவத்தில் ஆண்டவருடன் இணைந்து விட்டார். மற்ற ஐவரும் அண்ணரின் புகழ் காத்து வெளிநாடுகளில் பொறியியலாளராகவும், நம் நாட்டில் உத்தியோகத்தர்களாகவும் சீரோடும் சிறப்போடும் வாழ்கின்றனர்.

அண்ணரின் பிள்ளைகள் அண்ணாரை பிரதி பண்ணியது போல் அவர் நடை, உடை, பாவனைகள், குணாதிசயங்கள், கல்வியறிவு முழுவதிலும் அவர் போலவே உள்ளனர். ஆகையால் நீங்கள் மறைந்து விடவில்லை உங்கள் பிள்ளைகளுடன் சங்கமித்து இருக்கிறீர்கள்.

□

# ஒரு புதிய உலகில் ...

சசி . சௌஜனன்

மௌனித்துப்போன – என்
கவிதை உணர்வுகளும்,
மரணித்துப்போன – என்
ஊர் நினைவுகளும்
உயிருக்காக உங்களோடு
இவ்வூரை விட்டு
ஓடிய உணர்வலைகளும் . . . உங்கள்
மரணத்தில் துளிர்விடுகிறது . . . .
துயிலாத துயரத் துளிகளாய் . . . .

அப்பா – இது
உங்கள் அன்பு மகனின்
வேதனை வரித் துளிகள்

உங்கள் இருதயம்
நின்றுபோனதென்று – என்
இருதயத்தின் வால்வுகள்
விறைத்து விறைத்து – என்
கண்களில் கண்ணீர் பாய்ச்சுகிறது
எப்போதுதான் நிற்குமோ தெரியவில்லை.

அப்பா,

இயேசு சொன்ன வார்த்தைகளை – நீங்கள்

அறிந்தீர்களோ இல்லையோ

அவருடைய குரலை – ஒரு நாள்

நீங்களும் கேட்பீர்கள்

பூஞ்சோலையான ஓர் புதிய உலகில்

உயிர்தெழுந்திருப்பீர்கள் . . . அப்போது

உங்களை நான் மீண்டும்

பார்ப்பேன் ... . என் அண்ணன்

பிரகாஷைப் பார்ப்பேன் .. ..

மரித்த அநேகரைப்

பார்ப்பேன் . .. . .

அந்நாட்களில். ... .

உங்கள்,

ஆனந்த உணர்வுகளின்

மென் வித்துகளெல்லாம்

முளைத்தெழும்பும். . ..

சிதைந்துபோன உங்கள்

தேசம் செழித்தோங்கும் . ... .

தூர்ந்துபோன – உங்கள்

மனக்குகை ஒளிபெறும். .. .ஆம். . .உங்கள்

உள்ளத்தினுள் – நீங்கள்

ஒளித்து வைத்து விட்ட,

புதைத்து வைத்து விட்ட,

பறிகொடுத்துவிட்ட

சிதைத்துவிடப்பட்ட எல்லா சிந்தனைகளும்,
உணர்வுகளும்

உண்மையாய் உயிர்பெறும். .. .

பிறகென்ன. . .

உயிர்த்தெழுந்து வரும். . . . உங்களோடு

கைகோர்த்து

கதைகள் நிறையச் சொல்ல

ஆவலாய்

காத்திருக்கிறேன். .. .

வேதாகம வார்த்தைகள் நிறைவேற

வாஞ்சையோடு

விழித்திருக்கிறேன். . . .

# இருப்பின் பரிமாணங்கள்

• டாக்டர் திருமதி. புஷ்பலதா லோகநாதன் ( மலரா)

பிறப்பிலிருந்து இறக்கும் வரை வாழும் வாழ்க்கை எல்லோருக்கும் பொது. ஆனாலும் வாழும் போது தன்னை நிறுத்தி இறப்பின் பின்னும் இருத்தலை ஸ்திரப்படுத்துவோர் சிலரே. அந்த சிலருள் தன்னை, தனது இயலுமைகளை, ஆளுமைகளை வாசப்படுத்திய அமரர் சண்முகம் சிவலிங்கத்தின் ஓராண்டு. நினைத்துப் பார்க்கும் போது, சடத்துவமாய் அவரின் இருப்பு தொலைந்துவிட்டாலும் உயிர்ப்பாய் இன்னுமின்னும் என் நினைவுகளிலும் – ஆளுமையாயும், இலக்கியத்தின் நவீனமாயும், உச்சமாயும் தேட முனைந்து பதிவுகளை தந்தவர் என்ற வகையில் உயரமாயும் வாழ்கின்றார்.

சிறுபராயம் முதலே எனது குடும்பத்துடன், அவரின் குடும்பம் பரிச்சயமிக்கது. எனது ஊர்க்காரர், பக்கத்து வீட்டுக்காரர், உறவினர் என்பதெல்லாம் மீறி உயர்தர வகுப்பில் எனக்கு உயிரியல் ஆசிரியராக இருந்தார். அன்றிலிருந்து எல்லாப் பரிச்சயங்களையும் மீறி, ஒருவித பயம் கலந்த மரியாதையும் சேர்ந்து கொண்டது. பாடசாலைப் பருவம் தொடங்கி இறுதி வரைக்கும் எனது அன்புக்கும், மரியாதைக்கும் என்றுமே பாத்திரமானவர்.

நினைத்துப் பார்க்கையில் தீட்சண்யம் மிக்க கண்களும், எதனையும் யதார்த்தமாய் அலசும் நிதான நடையும், தெருவில் அடிக்கடி அவரைச் சுமந்து உருளும் சைக்கிளும் ஞாபகம் வரும். முகத்தில் தேக்கிய புன்னகையுடன் சரளமாய் உரையாடுவார். யாரும் கண்டால் மதிப்புக் கொடுக்கத்தோன்றும் தோற்றத்திற்குச் சொந்தக்காரர்.

ஊரில் அவர் வாழ்ந்த காலப் பகுதியில் உருவாகிய பல தலைமுறை இளைஞர்களை அவருடன் காணலாம்.

இலக்கியத்தை தனது உயிர் மூச்சாகக் கொண்டு, இலக்கியம் படைத்து, பதிவுகளை தக்கவைத்து வெளிப்படுத்தாமல் போன பாண்டியூரான் தொடக்கம், இன்று யாராலும் ஒதுக்கி தள்ள முடியா ஆளுமையாய் வளர்ந்து நிற்கும் உமா வரதராஜன் ஆகியோருடன் அவரின் உறவு எனக்குத் தெரிந்தது. கடந்து போன காலங்களில் பஷில் காரியப்பர், ஆனந்தன், கந்தக்குட்டி, அன்புமுகைதீன், சடாச்சரன், நீலாவணன், சந்திரலிங்கம், க.ஐ.யோகராசா, அரு.கணேஷமூர்த்தி, சா.தர்மலிங்கம் ஆகிய இலக்கியவாதிகளுடனும், கலைஞர்களுடனும் இன்னும் நான் பெயர் குறிப்பிடாமல் நீளும் பட்டியலுக்கு சொந்தக்காரர்களுடனும், கதை, கவிதை, கட்டுரை, விமர்சனம், சஞ்சிகை எனப் பல பரிமாணங்களை காண்பித்தார்.

தமிழர்களின் வரலாற்றில் வடுவாய் பதிந்த காலகட்டங்களில் தனதும், தனது குடும்பத்தினதும் இருப்புக்காய் அல்லலுற்றார். தனது அல்லலையும், ஆதங்கங்களையும் அழகாய் 'சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்' எனும் கவிதைத் தொகுப்பில் வடித்தார். தனது பங்காய் அப்பழுக்கற்ற நடுகல் ஒன்றையும் நட்டவர் அவர்.

எனது திருமணத்தின் பின் அவரது வீட்டிற்கு இன்னும் அண்மையாய் குடிபெயர்ந்தேன். எனது கணவருடனும் நல்லதொரு உறவைப் பேணினார். அந்த வேளையிலேயே இலக்கிய உலகில் அவருக்கான பரந்த இடம் எனக்குப் புரியத் தொடங்கியது. எல்லாவற்றையும் மீறி அவர் அதிகம் சார்ந்த உலகமும் அதுவாகத்தான் இருந்தது. அவரைச் சிறு சிறு நோய்கள் அண்மிக்க தொடங்கிய வேளையில் மருத்துவத் துறையில் இருந்த எனது கணவருடனும் என்னுடனும் தனது நோய் சம்பந்தமாய் பல கேள்விகள் கேட்டு தனது உடலைப் பற்றிய ஒரு

முழுமையான தேடலில் ஈடுபட்டார். அவரது எழுத்துக்களில் மிளிர்ந்த விஞ்ஞான அடிப்படையிலான தேடல்கள் அவரைப் பற்றி அறிவதிலும் முன் நின்றது.

எனது முதலாவது கவிதைத் தொகுப்பான, 'புதிய இலைகளால் ஆதல்' இணைக் கொடுத்து முன்னுரை கேட்டேன். எனது துறை சார்ந்தும், சமூகத் தொண்டு சார்ந்தும், குடும்பம் சார்ந்தும் அறிந்திருந்த அவருக்கு ஆச்சரியமாய் பட்டது. மனம் திறந்து அவரிடமிருந்து தரப்பட்ட ஒரு விமர்சனமாகவும், மிக நீண்ட முன்னுரையாகவும் இருந்தது. அவரது தலைமையிலேயே அத்தொகுப்பு வெளியிடப்பட்டது. அந் நிகழ்வின் பின் எங்களுடன் பேசும்போது இலக்கியமும், இலக்கியவாதிகளும் அவரது பேச்சில் அடிபடும். பலரை சிலாகித்துப் பேசுவார். பல படைப்புகளிற்கு கத்தி வெட்டுப் போல் விமர்சனங்களை முன் நிறுத்துவார்.

இதனை எழுதிக் கொண்டிருக்கும் போது நீலாவணனை கௌரவ ஆசிரியராகக் கொண்டு அவர் நடத்திய பாடும் மீன் சஞ்சிகையின் பிரதி ஒன்று எனது பார்வைக்கு கிடைத்தது. இன்று மலிந்து வரும் சஞ்சிகைகளின் மத்தியில் அச்சஞ்சிகை எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. புதிய இலக்கியத் தேடல், 40 வருடங்களின் முன் வெளியிடப்பட்ட அச்சஞ்சிகையில் மிகையாகப் பட்டது. அதுவும் எமது பிரதேசத்தில், அனுபவங்களும், அவைகளைத் தேடும் தேடலும், அதனை அழகுபடுத்துவதும், வாழ்க்கையை முனைப்பாக்கும் தேடலும், வாழ்க்கையின் அனுபவச் சாரலும், ஆளுமையும் அற்ற இன்றைய, ஒரு சில தவிர்த்த, பல சஞ்சிகைகளின் முன் பாடும் மீன் ஆச்சரியப்படுத்தியதில் தவறில்லை.

இறுதி வரைக்கும் சமூகத்துடன் ஒன்றித்து, தனித்துவமான விமர்சனங்களை வெளியிட்டு, தனது உறவுகளைக் கட்டிக்

காத்து, தலை நிமிர்ந்து வாழ வைத்து தனக்கென ஒரு இருப்பை ஸ்திரப்படுத்திய தனி மனிதர் அவர். எல்லாக் கணங்களிலும் எத்தனையோ ஒத்துப் போதல்கள், பிறழ்வுகளை எனக்குள்ளாகத் தோற்றுவித்தாலும் சராசரிக்கு உயர்வான வாழ்வின் சொந்தக்காரரர்.

திரௌபதை அம்மன் கோயிலின் அருகாமை, பாண்டிருப்பு மக்களின் சரிகளும், தவறுகளும், தமிழர் வாழ்வியலின் ஏற்ற இறக்கங்கள், குடும்பத்தின் அக துக்கங்கள், தனக்குள்ளான பிறவகிப்புக்கள் என பலவற்றையும் வாழ்க்கை சார்ந்து, இலக்கிய உலகில் நவீனத்தின் தேடலாய் பதிவு செய்த ஒருவரின் சடத்துவ இல்லாமை பொருட்டல்ல. அவரின் நினைவுகளும் பதிவுகளும் அவரை என்றும் வாழ வைத்துக் கொண்டிருக்கும்.

□

# மாரியில் ஒரு நாள்

**சசி. கௌசிகன்**

மாரி அடை மழை
சோவெனக் கொட்டி—சற்று
ஓய்ந்திருக்கிறது.

வாவிக் கரை வீதியில் நான்...
மூத்தவன் என் முன்னே
இளையவனும் அவளும் – பின்னே
சற்று ....
அலறியபடியே செல்கிறது என் மோட்டார் சைக்கிள்.

இடது பக்கமாய் விரிந்து கிடக்கும்
மட்டக்களப்பு வாவி
கிட்டங்கி வரை தொடரும்,

மாரியின் இருளும் – அதன் குளிரும்
வாவியில்– அலைகளின் எழுகையும்
என்னை
அப்பாவின் நினைவுகளுக்குள் கூட்டிச் சென்றது.

வாழ்வின் இருபத்தி மூன்றாண்டுகளை
காலம் சப்பித் துப்பிய பின்னும்
மனதுள் உறைந்திருக்கிறது அந்த நினைவுகள்

*90கள் . . .. . .*
எம் வாழ்வைக் காக்க – அவர் ஓடிய
நெடிய கொடிய பயணம்.
தார் வீதிகள் ..... குறுக்கொழுங்கைகள்
பற்றைகள் . . .. கடற்கரை மணல் வெளிகள்
நகரங்கள் .... கிராமங்கள் என
எங்கெங்கோவெலாம்
எங்களைக் கொண்டோடினார்.
இதோ,
இப்போதென் நினைவைக் கிளறியதே இந்த வாவி . .. .
இந்த வாவியூடும்தான்.
எழுவான் கரைக்கும். . . . படுவான் கரைக்குமாய். . . .
நீண்ட நெடுந்தூரமோடினார்.

பின் ஓர் நாள் – மாரியில்
எல்லா பாதைகளும் அடைபட்டுப்போன– பெரு முற்றுகை.
விடிந்தும் விடியாத காலைப் பொழுதினில்– வழி தேடி
ஓடத் தொடங்கினோம்.

வெல்லாவெளி.... மண்டூர் தாண்டி

பாதையிழந்து

பற்றைகளூடும் .... மணல் வெளிகளினூடும்

பெருக்கெடுத்த சிற்றாறுகளின் குறுக்காய்

சைக்கிள்களை தோளில் சுமந்தபடி

கயிறு பிடித்து – காலால் கடந்தும்

பலாச்சோலையடி சற்றமர்ந்தும்

எங்கெங்கோவெல்லாம்

ஓடினோமெனினும்

எந்தப் பாதையும்.... எந்தத் துறையும்
திறக்கவில்லையெமக்கு.

பின் மாலையில்

'கடுக்காமுனை' யால் ஆற்றைக் கடக்கும் தகவலறிந்து

கணக்குப் போட்டு பார்த்தோம்.

நான்கு மணி நேரமாவது வேண்டும்

கடுக்காமுனையடி போய்ச் சேர,

நேரம் மாலை ஆறெனினும்

மாரி இருட்டு – எங்கும் பரவத் தொடங்கிற்று.

சோவெனக் கொட்டும் மழையில்

பாதைகளை வெள்ளமுடைத்திருக்கும்.

எந்த வெளிச்சமுமில்லை – அது போக

போகின்ற வழியிலுள்ள பெருஞ் சந்தியொன்று-
அனேகம்

மறு தரப்புக்கு கை மாறுயிருக்குமெனின்—இப் பயணம்

தற்கொலைக்குச் சமம்.

என்ன செய்வது……

வந்தவர்களில் பலர் யோசித்தனர்.

அப்பா மட்டும் உறுதியாய் நின்றார்,

இங்கிருப்பதும் அதுவெதானென்றார்,

போவதே ஒரே வழி ''வெளிக்கிடுவம்'' என்றார்.

கடும் அம்மை நோயால்

இனியும் ஓடமுடியாதென்று மயங்கி விழும்

அண்ணாவையும் சுமந்தபடி,

காரிருளில் ரகசியம் பேசி

மின்னல் வெட்டில் – பாதை பிடித்து

கடுக்காமுனையடைந்தோம்.

பெரும் நீண்ட வரிசை – அங்கு

எல்லோரும் நின்றிருந்தனர் – அவர்கள்

ஆசிரியர்கள் – மாணவர்கள் –

விவசாயிகள். .. ..

உத்தியோகஸ்தர்கள்… ..இளைஞர்களென….

எல்லோரும் நின்றிருந்தனர்.

அத்தனை சனத்தினுள்ளும்

தோணிக்குச் சொல்லி விட்டு

அப்பா வந்தார்.

அதுதான் எங்கள்

இறுதிப் பயணம் -இறுதி ஓட்டம் -இறுதி நகர்வு.

குளிரும்.... கும்மிருட்டும் – ஆற்றில்

அலைகளின் எழுகையும்

இடைக்கிடையே தெறித்த

மின்னலொளியில் –

அன்றிரவும் இந்த வாவி இப்படித்தான் தெரிந்தது எனக்கு.

# சிறந்த ஆசிரியருக்கு எடுத்துக்காட்டு எங்கள் பெரியப்பா

• விக்டர். டீ. அல்விஸ்

'' இரிக்காரா அக்கா* ''

'' ஓ; இஞ்ச விக்டர் வந்திரிக்கி ''

''ஆ . . . என்ன விக்டர் ''

'' இந்த . . . ''

இவ்வாறு அதிக கதையில்லாமல் ஒரு உரையாடல் நடந்து எனது ஒரு ஆங்கிலத்திலான தேவையையோ ஒரு *doubt* யையோ, ஒரு கவிதையையோ அல்லது வேறொரு ஆக்கத்திற்கான தேவையையோ சொல்ல, செய்து தருகிறேன் என்பார்.

எங்கள் பெரியப்பா (அவரை நாங்கள் பெரியப்பா என்று அழைத்தது இல்லை. கௌசியின் அப்பா, நிம்மியின் அப்பா என்றே சொல்வது உண்டு.) ஒரு திறமையான ஆளுமை என்பதை எல்லோரும் போல் நானும், என் பால்ய வயதுகளிலேயே உணர்ந்திருக்கிறேன்; எம் மத்தியிலே ஏடுதிறத்தல் எனும் நம்பிக்கையும் சம்பிரதாயமும் உண்டு. என் மூத்த மகன் றோஷின்க்கு அவர்தான் ஏடுதிறந்த குரு. அவன் தற்போது முன்பள்ளியிலே கற்கிறான். அவன் ஒரு சுட்டிப்பயல் என்றாலும் கெட்டிக்காரன் என்றே அனைவரும் சொல்கின்றனர். இதைநான் ஏன் சொல்லவந்தேனென்றால் அவரது திறமையிலும் ஆளுமையிலும் நான் கொண்ட நம்பிக்கைக்கு ஒரு உதாரணமாக.

கடுமையாக அவர் கோபப்பட்டுக் கண்டதுண்டு. அவர் பிறப்பினால் முதலாம் நம்பருக்குரியவர் *(1936.12.19)*. அம்மா சொல்வாள், முதலாம் நம்பர்க்காரர்

கோபக்காரர்களென்று. கோபமிருக்குமிடத்தில் குணமிருக்குமென்பர்; அதுபோல அவர், குணமும் உதவி செய்யும் மனமுமுடையவர் என்பதற்கு என்னைவிடுத்து பலர் அவரைப்பற்றிச் சொல்வதிலும் அறிந்திருக்கிறேன். அவரது குணத்திற்கும் திறமைக்கும் அறிவிற்கும் சான்றுகூற ஊரிலும் உலகெங்கிலும் அனேகர் இருப்பர். அதுபோல இளமைப்பருவத்திலேயே அவரின் விளையாட்டு, கலை, கிராம மேம்பாட்டிற்கான ஆர்வத்தையும் முயற்சியும் பற்றியும் எத்தனையோபேர் சொல்வர்.

ஒரு ஆசிரியரென்றால் இவ்வாறு இருக்கவேண்டுமென்று அவரைப்பற்றி பலரிடம் கதைத்திருக்கிறேன். கற்பித்தலுக்கான அவரது ஆயத்தம், தேடல், தெளிதல் பற்றி அறிந்திருக்கிறேன். ஏனென்றால் பாடநேரத்தில் வகுப்பிற்கே வராமல் *Notes* யினை அனுப்பி அதை எழுதிக்கொள்ளச் சொன்ன விஞ்ஞான ஆசிரியரிடமும் பாடசாலையில் நான் கற்றிருக்கிறேன்.

புத்தகங்களை பிள்ளைகளைக்கொண்டே வாங்கி, எந்த *Tute* டை அடித்து எவ்வளவிற்கு விற்கலாம் என எண்ணும் ஆசிரியருகளுக்கு மத்தியில் அதையெல்லாம் தன்பணத்திலேயே செய்து கற்பித்தலின் நிறைவை மாணவர் பெறவேண்டுமென உழைத்த ஒருவரென்பதை அறிந்திருக்கிறேன். அவர் கற்பித்த மாணவரிடமும் கேள்விப்பட்டுமிருக்கிறேன்.

பட்டங்கள், பரிசில்கள், பாராட்டுக்கள் என்பதையெல்லாம் ஒரு விடயமாகவே கருதாதவர். ஆனால் இன்று தமிழ் கூறும் கலையுலகில் அவரைத் தெரியாதவர் – பேசாதாவர் இருக்க முடியுமா?

அவரது கவிதைகளைப் படித்திருக்கிறேன். கிராமத்தில் பிறந்து இயற்கையோடு வளர்ந்ததாலோ என்னமோ

இயற்கை இரசிப்புகள் நிறையவே இருக்கும். மற்றொன்று, ஈழத்தின் அவலங்களை நிறையவே சொல்லியிருப்பார். (தானும் ஒரு மகனை இழந்து மீதிப் பிள்ளைகளை அசாத்தியமான சூழல்களில் வட்டமிட்ட கழுகுகளிலிருந்து பாதுகாக்க, பூனை குட்டிகளை கவ்வித் திரிவதுபோல் இரவும் பகலும் பலத்த காற்றில் சிக்கிய பஞ்சினைப் போல் அவர் அலைக்கழிந்த காலமுமுண்டு). அவர் கவிதைகளைப் பற்றி நான் சொல்ல வரவுமில்லை, அதைப் பற்றி எனக்கு சொல்லவும் தெரியாது; எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன்.

மொத்தத்தில் பாண்டிருப்புக் கிராமத்தின் ஒரு முத்தென அவரைச் சொல்லலாமன்றோ. அவர் பிறப்பில் முதலாம் நம்பர் போல் வாழ்ந்த காலத்திலும் அவர் ஒரு முதலாம் நம்பர். அவர் கவிதைகளை வாசிக்கும் பொழுது, எனக்கும் கவிதை எழுத வேண்டும் என்ற ஆசை எற்பட்டது. நானும் பல கவிதைககளை எழுதி எழுதி பழகிக் கொண்டு இருக்கின்றேன். அவ்வாறு நான் எழுதிப் பழகிய கவிதையொன்றை அவருக்கு சமர்ப்பணம் செய்யலாமென எண்ணுகிறேன்.

காலம் கடந்துகொண்டேயிருக்கும்
நாடியவை, தேடியவை
தூர்ந்துகொண்டே போகும்
வாழ்க்கை
ஒரு வரையறைக்குள் முடிந்துவிடும்.

கதறியழுவர்,
கண்ணீர் விடுவர்
பின்னர் எல்லாம் முடிந்து விடும்.

நன்மக்கள்
நன்மைகளை எண்ணிச் சொல்வர்
அந்த வரைவு
வாழ்வின் நிறைவு.

நாளைவரும்
யார் நிலைப்பார்?
யார் மரிப்பார்?
எப்போதென்று
எதுவும் தெரியாது.
வாழ்க்கை – ஒரு
வரையறைக்குள் முடிந்துவிடும்.

வான்மேகக்கோலமது வாழ்க்கை
மாறி மாறி மறைந்தேவிடும்
யார் நிலைப்பார்?
யார் மறிப்பார்?
யாருக்கென்று யாரழ
எவருக்கென்று,
எவர் ஆறுதல் சொல்ல
மனம் ஆற்றி
வழி நடப்போம்

---

(*) பெரியம்மாவை எமது அம்மாவும் அவர் சகோதரர்களும் கதைப்பது போல் நாமும் சிறுவயது முதல் 'அக்கா' என்றே அழைப்பதுண்டு.

□

# வெறும் வானம்!

சசி.நிருமிதன்

சீமேந்து முற்றம் -
அதில் சாய்மனை இருப்பு -
வெள்ளி பூத்த
புது வானம் -
இன்றுதான் பூத்த மாம்பூ -
என்றும் பூக்கும் வெண் அகத்திப்பூ -
என்னையும் தென்னையையும்
வருடிச் செல்லும் தென்றல் -
சலசலக்கும் ஓலை –
இவையெல்லாம்
அப்பாவையே நினைவு படுத்துகின்றன.

அவனோடு வெண்ணுரை நனைத்த கால்கள்,
மட்டிக்கு மடு தோண்டிய ஈரமணல்கள்,
போகன் விலா ''ஆக்'' தாங்கிய இரட்டைக் கேற்,
வளைந்த மதில் வளைவுளில்
வளையும் அவள் நினைவுகள்.

ஆக்காண்டியாய் வாழ்வு ...

ஆமைபோல் ஐந்தடக்கி ...
ஊமைபோல் ஊர்ந்த பொழுதுகள் ..
கேரளத்தின் தென்னஞ்சோலை...
இடு காடு..
களனிப்பூக்கள்...
வனமிருந்து ...
என இன்னும் நீளும் அவர் நினைவுகள் .

குளுத்தியாய் உன் ஒரு சொட்டு சீனிக்கரைசலுக்கு ...

காலுடைந்த கன்றை தாங்கிய பசு –
என் பிணியில் பதறிய பக்தன் –
என் வரிகளை தூசு தட்டிய தூரிகை –
என் ஆற்றல் தேடிய குடிசைப் பள்ளி ஆசான் –
என் முயற்சி கண்டு தோள் தட்டிய வசிஷ்ட்டர் –
என்னோடு களம் வந்த வீரன் –
இப்படி இன்னும் நீளும் ஆயிரம் நினைவுகள்...
நினைவுகளுக்கு முற்று
ஓர் பெருமூச்சோடு நிறைந்த வானம்
அது வெறும் வானம்!
நீங்கள் தொலைவில் கூட இல்லாததால்
எனக்கு அது இனி வெறும் வானம்.

## விடிகின்ற பொழுதுக்காய் எரிந்த தீபம்

• அருட் சகோதரர் கலாநிதி ***S.A.I* மத்தியூ *Ph.D***

அசையும் சீரும் அடியாக்கி
அழியாக் கவிதை உருவாக்கி
அழகுக் கவிஞர் கோவிலென
அமைத்து வைத்தே குடிபுகுந்தாய்!

வசையும் புகழும் ஒன்றெனவே
மனத்தில் நாளும் நீ நினைத்து
வளமார் சமயம் தமிழோடு
வாழ்ந்து நலம்பெறற் றோங்கிடவே

அசையா மனத்தோ டருங்கோவில்
அமைத்தே மக்கள் இதயத்தில்
அழகாய்க் குடியும் அமர்ந்திட்டாய்!
அழியா வாழ்வை அடைந்திட்டாய்!

நீங்கள் இங்கு இல்லாமல் போய் விட்டீர்களாம். அதிர்வோடு செய்தி... தொலைபேசியில் எனது

மதிப்பிற்குரிய எழுத்தை ஆளும் உமா வரதராஜன். சுகத்தில் கண்ட சுந்தரக் கவிஞனை திடீரென மனத் துன்பத்தில் கண்ட இன்னொரு கலை ஆத்மாவின் குரல்.

அதிர்ச்சி நீங்கும் முன் இன்னொரு தொலைபேசிக் குரல் அது ஆர்.தர்மலிங்கத்தினுடையது. அது சிவலிங்கத்தின் இளையவன் என்ற உறவுக்கு, உரிமைக்கு, உவப்புக்கு நீண்ட காலம் சிவலிங்கத்துடனே வாழ்ந்து உறவாடிய ஓர் ஆசிரியரின் குரல். "உங்களுக்குத் தெரியுமா?" செய்தியை ஏலவே அறிந்திருந்த நான் தொலைபேசிக் குரலுக்கு உரியவரை அடையாளம் கண்டு "நான் தூரத்தில் இருக்கிறேன் விரைவில் வருகிறேன்." இது எனது பதில்.

நேற்று மாலை எனது வதிவிடத்திற்கு அண்மையில் உள்ள யாட் வீதியில் நான் தூரத்தே கண்ட சண்முகம் சிவலிங்கம், சட்டென அடுத்தநாள் அதிகாலையில் விரைவுப் பயணம் செய்தாரா?

அன்னாரது மரணச் செய்தி கேட்டு சிறு கவிதையொன்று வெளியிட்டேன். 'பூட்டினையோ உன் உள் மனக் கதவை' இது கவிதையின் தலைப்பு. இந்தத் தலைப்பு பல காலம் அவரை அறிந்ததன் விளைவாக அவரைப் பற்றி ஒன்று கூட்டின ஒரு *definition.*

நான் எழுதிய கவிதை போன்ற ஒன்றில் கவித்துவம் இல்லாவிட்டாலும் உன் உள் மனக் கதவை பூட்டினையோ என்ற தலைப்பு; உன் உள் மனக் கதவின் தாழ்ப்பாள் மூடப்பட்டுவிட்டது.

இனி உன் தனித்துவமான நுண்ணிய உணர்திறன் கவிதைகள், சிறுகதைகள், ஆழ்ந்த அகன்ற விமர்சனங்கள் உனது புதிது புதிதான இலக்கிய உத்திகள் நீ போட்ட அந்த தாழ்களுக்குள்ளே அடைபட்டு விட்டன என்பது எனது கவிதைத் தலைப்பின் விளக்கம்.

அந்தக் கவிதையிலே நான் உள்ளடக்கிய அவரின் வாழ்க்கையோட்டத்தில் அவரைப் புடம் போட்ட ஆசிரியச் சந்நியாசிகள், மிகுந்த விவேகம் கொண்ட சிவலிங்கத்தை, ஸ்டீபன் என ஞானப் பாலூட்டி கேரளாவிற்கு அனுப்பி விஞ்ஞானப் பட்டதாரியாகக்கினாக்கினார்கள்.

கல்முனைப் பாத்திமாக் கல்லூரியின் விஞ்ஞானப் பீடத்தை உயர்நிலையில் உயர்த்த அயராது உழைத்தார் அருட்சகோதரர்.A.T.அல்போன்ஸ் SSJ எனும் அருங்கலை வினோதன். ஸ்டீபன் பட்டம் பெற்று வந்தபோது அல்போன்ஸ் பாத்திமாவில் இல்லை. விஞ்ஞான வெற்றிடமும் கல்லூரியில் நிரப்பப் பெற்று விட்டது.

ஸ்டீபன் என்ற விஞ்ஞானப் பட்டதாரி வேறு வேறு இடங்களில் தம் தடம் பதித்தார். தடம்பதித்த இடங்கள்

- நாவலப்பிட்டி
- கொழும்பு
- அக்கரைப்பற்று

- நிந்தவூர்
- சாஹிரா கல்லூரி கல்முனை
- உவெஸ்லி உயர்தரப் பாடசாலை கல்முனை
- கார்மேல் பாத்திமாக் கல்லூரி, கல்முனை (அவர் தம் விருப்பத்தின் பேரிலும் எனது அழைப்பின் பெயரிலும்)
- சம்ஸ் மத்திய கல்லூரி
- அவரின் பிறந்த ஊர் பாண்டிருப்புக் கிராமத்தில் பாண்டிருப்பு மகாவித்தியாலயக் கல்லூரி முதல்வர்

அவர் சாஹிராவில் இருந்த போது கார்மேல் பாத்திமாவில் விஞ்ஞான ஆசிரியர்கள் இருக்கவில்லை. அவரை பாத்திமாவுக்கு அழைத்தோம். அடைக்கலம் தந்த சாஹிராவை விட்டு அவர் வர விரும்பவில்லை. ஆனால் மாவட்ட நாடகப் போட்டியில் பாத்திமாவோடு போட்டியிட வந்தார். பாத்திமாவின் நாடகத்திற்கு நான் பொறுப்பு (மத்தியூ)

சாஹிரா நாடகத்தின் பெயர்: 'ஆக்காண்டி'.

பாத்திமாவின் நாடகத்தின் பெயர்: 'குந்தியின் மைந்தன்'.

கடும் போட்டி ஆக்காண்டி வென்றது. இல்லை! தான் வளர்ந்த கல்லூரியை, வாய்ப்புத் தந்த சாஹிராவை வெற்றியடையச் செய்த நன்றிமகன் சண்முகம் சிவலிங்கம். எனினும் தம் பிள்ளைகள் அறுவரையும் தாம் படித்த கல்முனைப் பாத்திமாக் கல்லூரியிலே பயிலவிட்டார்.

அவர் என்றுமே செய்த நன்றி மறந்தவர் அல்லர். தமது 1988 - 2002 வரை எழுதிய சுமார் நாற்பது கவிதைகள் அடங்கிய நூலை வெகு நேர்த்தியாக அச்சிட்டு தம்மை உருவாக்கிய அருட்சகோதரர் அந்தோனிமுத்து திருச்செல்வம் அல்போன்சஸ் அவர்களுக்கு முதலாவதாகவும் இரண்டாவதாக அன்பின் திரு.இ.பத்மநாப ஐயர் அவர்களுக்கும் நன்றியுடன் பாத காணிக்கை ஆக்குகின்றார்.

சிதைந்து போன தேசமும் தூர்ந்து போன மனக் குகையும்' என்ற தலைப்பில், தம்மையே தம் மனக் குகையாக்கிய சண்முகம் சிவலிங்கம்; தம் மகன் ஈழ தேசத்தைக் காண விரும்பி துப்பாக்கியேந்தி செருக்களத்தில் தன்னையே பலி கொடுத்ததை பற்றி தந்தையின் வாஞ்சைமிகு வார்த்தைகளால் வடித்த கவிதையை 1986ல் பதிவாக்கினார்.

'போருக்குப் போனாய் போ' என்ற தலைப்பில் அக்கவிதையே 'சிதைந்து போன தேசமும் தூர்ந்து போன மனக் குகையும்' என்ற கவிதைத் தொகுப்பின் முதல் கவிதையாக அமைந்துள்ளது. நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்று. அக் கவிதையே கவிதைத் தொகுதியின் முன்னுரை - அதுவே சிவலிங்கத்தின் ஆளுமை.

கவிஞர் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான். சண்முகம் சிவலிங்கத்தின் நூலுக்கு ஒரு மதிப்புரை எழுதும் போது கூறுகிறார்:

"எல்லா நல்ல கவிஞர்களினதையும்போல அவரது கவிதையும் அவரது முகமாக இருக்கிறது. அவரில் இருந்து

பிரிக்க முடியாத ஒன்றாக அமைகின்றது............ அவரது கவிதைகளில் கணிசமானவை அவரைப் பற்றிய கவிதைகள் தான்." பேராசிரியரின் கருத்து மிக ஆழமான தேடலின் முடிவு.

நுஃமான் எவரையும் எளிதில் புகழமாட்டார். புகழ்ச்சிகள் அவர்தம் தெளிந்த உள்ளத்திலேயேயிருந்து வருபவை.

பலவற்றை, பலரை, பலரின் செயற்பாடுகளை நையாண்டியாக எள்ளி நகை பாடும் ஒருவரே கவிஞன். சண்முகம் சிவலிங்கம் என்னைப் பற்றி நிறையக் கவி பாடியுள்ளார். அங்கே நாம் காண்பது **குறியீடுகள்**. தன்னைக் குறிப்பிடுகிறாரா? பிறரைக் குறிப்பிடுகிறாரா? தெளிவு கொஞ்சம் கஷ்ட்டம்தான்.

என் மனதில் சிவலிங்கம் இருப்பார். அதற்குக் காரணம் அவர் என்னோடு என் கலாசாலையில் கற்பித்தவர். எங்கள் உறவு அதிபர் ஆசிரியர் உறவு. பின்னாளில் அவரும் ஓர் உயர் பாடசாலையின் அதிபர்.

அவர் தம் புதல்வர்கள்; வித்தியானி, மகரிஷி சித்திராஞ்சன், நவலோகப் பிரகாஷ், சௌஜனன், கௌசிகன், நிருமிதன். இந்த வளமான மக்கள் தம்மை வாழ்வாக்கிக் கொண்ட அன்னை தங்கராணி.

சிவலிங்கம் தங்கராணி பாக்கியம் பெற எஞ்சியுள்ள ஐவர் பார் போற்ற வாழ்வர். பிரகாஷ் போர்ப் படைத் தளபதி தியாகியாகி தாய் தந்தையருக்கு ஆறுதலானான்.

அவர் விட்டுச் சென்ற எழுத்துக்களும் எண்ணங்களும் வாழும். எச்சங்களும் அவர் தம் புகழ் பாடும். அப்புகழை வாழ்ந்து காட்டும் தம் தந்தை புகழுடையார் என அவர்கள் தம் வாழ்வில் எழில் காட்டும்.

நாமும் சிவலிங்கத்தின் குகையை மேலும் மேலும் நமக்கு வெளிச்சமூட்டி திறந்து பார்ப்போம்.

*Principle emeritus*

*Carmel Fatima College*

*National School - 1978 - 1999*

□

## என் நண்பர் சசி

• எம். ஏ. நுஃமான்

*நான் மறைந்துவிடுவேன்*
*நான் இருந்தேன் என்பதற்கு*
*எந்தத் தடயமும் இருக்காது*
*ஆனால்,*
*எனது இருப்பு*
*காற்றுக்குள் ஊதியிருக்கும்*
*அதை நீங்கள் காணமாட்டீர்கள்*
*எனது இருப்பின் வன்மம்*
*அவலங்களின் சின்னமாய் இருக்கும்*
*அதை நீங்கள் அறியமாட்டீர்கள்*
*தொலைக்காட்சியில்*
*வானொலியில்*
*புகைப்படத்தில்*
*அல்லது ஒரு பாராட்டுக் கூட்டத்தில்*
*என்னை மலினப்படுத்த முடியாது*
*ஒன்றும் இல்லாமைக்குள்*
*எனது ஒரு கண்*
*என்றும்... சிவப்பாய் இருக்கும்!*

1992ல் நண்பர் சண்முகம் சிவலிங்கம் எழுதிய இருப்பின் வன்மம் என்ற தலைப்பிலான கவிதை இது. இப்போது உண்மையில் அவர் மறைந்துவிட்டார். இப்போது நாம் அவரை மலினப்படுத்த முனைகிறோமோ என்று அச்சமாக உள்ளது. ஒன்றும் இல்லாமைக்குள் அவரது ஒரு கண் சிவப்பாய்த் தெரிகிறது.

நண்பர் சிவலிங்கத்தின் மறைவுச் செய்தி ஒரு எதிர்பாராத பேரிடியாக என்னுள் இறங்கியது. அவர் ஒன்றும் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தவர் அல்ல. தன் மாலை உலாவின்பின் வீடுவந்து சாப்பிட்டுத் தூங்கியவர்தான். காலையில் எழுந்திருக்கவில்லை. ''மரணம் எத்தனை இலகுவாய் இருப்பினும் மரணம் கொடியதே'' என நான் எப்போதோ எழுதிய கவிதை வரி இப்போது நினைவு வருகிறது.

1964 அல்லது 65ல் முதன்முதலில் சந்தித்தோம் என்று நினைக்கிறேன். கடந்த சுமார் 50 ஆண்டுகளாக நாங்கள் முரண்படாத நண்பர்களாகவே இருந்திருக்கிறோம். 1960, 70களில் இலக்கிய வேட்கையோடு ராப்பகலாகச் சைக்கிளில் அலைந்திருக்கிறோம். 'நாங்கள் இரு தும்பிகள்' என்ற கவிதையில் அவர் அதைப் பதிவுசெய்திருக்கிறார்.

எங்கள் தனித்துவத்தை இழக்காமலேயே நாங்கள் ஒருவருக்கொருவர் ஆதர்சமாக இருந்திருக்கிறோம். 1982ல் அவர் எழுதிய 'மரியாத உயிர்ச் சுவடும் விலகிச் செல்லும் மையங்களும்' என்ற கவிதையும், அதே தலைப்பில் 2002ல்

அவர் எழுதிய அதன் இரண்டாம் பாகமும் என்னை விழித்தே எழுதப்பட்டவை.

*நீ வந்திருக்கிறாய்*
*நான் எழுதவேண்டும்*
*ஏன்?*
*நீயே எனது மையமா?*

என்று தொடங்குகின்றது முதல் கவிதை. ஏதோ ஒரு சோர்வுற்ற மனநிலையில், தன் மையங்கள் விலகிச் செல்வதான ஒரு பிரமையில் எழுதிய கவிதை அது.

*''என் நண்பர் மிக இனியர் சுடு சொல்லை அறியார்*
*கண்ணீரின் துளிபோல காலம் என்னும் நதியில்*
*கலந்திட வே உயிர் செய்த காதலுருவானார்...''*
*என்று நான் உன்னை*
*ஓர் நாள் இரவு பாடிய*
*நீர் வளையங்களை நீ மறந்திருக்கமாட்டாய்*
*நீர் வளையங்கள் இன்னமும் நீள்கின்றன*
*எனினும் மையம் மாறிற்று –*

என்று நீண்டு செல்லும் அக்கவிதையின் இறுதி வரிகள் சிலவற்றை இங்கு தருகிறேன்.

*சரி....*

*இப்போது நீ வந்திருக்கிறாய்,*

*நேற்று உன்னைப் பார்க்கையிலே*

*என் மகனின் நினைவுவந்தது ஓர்கணம்*

*நீ தூக்கிய பாலகன்தான் –*

*எனினும்*

*காலப் பரவளைவில் ஆளை ஆள் கடக்கையில்*

*நீயும் அவனும் ஒரு புள்ளியில்*

*ஒரு சிறிய*

*காலப் பின்னத்தில்*

*வாழ்க்கைக் கனவுகளைப் பொறுத்தவரை –*

*முன்னேறும் முனைவுகளைப் பொறுத்தவரை,*

*நீயும் அவனைப்போல் நெடுந்தூரம் செல்கின்றாய்.*

*நானோ*

*இன்னமும் இங்கேதான்*
*குந்திக்கொண்டிருக்கின்றேன் –*

*மத்திய பிரதேசப் புல்வெளியில்*

*ஓடும் ரயிலைப் பார்த்தபடி,*

*கம்பளியால் போர்த்திக் குந்திக்கொண்டிருந்த*

*அந்த நரைத்த தாடி ஆட்டிடையனைப்போல் ---*

*ஒரு living fossil ஆய்*

*மரிக்காத உயிர்ச்சுவடாய்......*

*விலகிச் செல்லும் இந்த மையங்களைப் பார்த்தபடி.*

இந்தக் கவிதை இடம்பெறும் 'நீர்வளையங்கள்' என்னும் அவரது முதலாவது கவிதைத் தொகுதிக்கு நான் எழுதிய முன்னுரையில் இக்கவிதை பற்றிக் குறிப்பிடும்போது, ''தன்னை ஒரு *living fossil* ஆகக் காண்பது - என்னைப் பொறுத்தவரை அவரைப் பற்றி அவருக்குள் நிகழும் ஒரு மாயத் தோற்றமாக *(illusion)* ஒரு திரிபுக் காட்சியாக இருப்பினும் அதன்மூலம் நமக்குச் சில நல்ல கவிதைகள் கிடைத்துள்ளன. விலகிச் செல்லும் மையங்கள் தமிழில் மிகவும் வித்தியாசமான கவிதைதான்'' என்று எழுதினேன்.

எனினும் நான் மாயத்தோற்றம் என்றதையே அவர் தன் யதார்த்தமாகக் கருதினார் போலும். 'சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்' என்ற தனது இரண்டாவது தொகுதியில் இடம்பெற்றுள்ள இக்கவிதையின் இரண்டாம் பாகம் பின்வருமாறு தொடங்குகின்றது :

*என்னை நான் ஒரு Living fossil எனக் கருதுவது*

*என்னுள் நிகழும் ஒரு illusion என்று நீ எழுதிய வரிகளை*

*இடைக்கிடை நினைத்தபடி*

*நான் இன்னும் இங்கேதான்*

*குந்திக்கொண்டிருக்கின்றேன்*

*அதே பழைய மரியாத உயிர்ச் சுவடாய்*

*Living fossil ஆய்... எந்த மாற்றமும் இன்றி...*

*என் இருப்பின் ஸ்திதியை*

*எனக்குள்*

*நானே காண இடந்தராமல்*

*ஏன் அதனை*

*எனக்குள் நிகழும் ஒரு*

*Illusion*

*என்கிறாய்?...*

இவ்வாறு தொடரும் அக்கவிதை பின்வருமாறு முடிகிறது.

*மாவலிக் கரையின்*

*வனப்புமிகு*

*குன்றுகளில்*

*நீ*

*ஏறி*

*ஏறிச்*

*செல்வதை*

*இங்கிருந்தே காண்கிறேன்*

*நானோ*

*இன்னமும்*

*இங்கேதான்*

*குந்திக்கொண்டிருக்கிறேன்*

*என்*

*கோயில் வெளியின்*

*மணலில்*

*அமைதியாய்ச்*

*சருகுதிர்க்கும்*

*ஆலமரங்களின் அருகில்*

*ஆர்ப்பரித்துச் சலசலக்கும் அரசுக்கு இப்பால்*

*நிலவைப் பார்த்து*

*நிலவற்ற நட்சத்திர மங்கலைப் பார்த்து*

*அதுவுமற்ற*

*இருளுக்குள்*

*இருளாய்*

*மரியாத உயிர்ச்சுவடாய்*

*எந்த மாற்றமும் இன்றி*

*எந்த illusion உம்*

*இன்றி.*

நண்பர் சிவலிங்கம் தன் கவிதைகள் சிலவற்றில் என்னை மையப்படுத்தியிருக்கிறார். அவர் உணர்வுகளில், அவர் நினைவுகளில் நானும் ஆழப் பதிந்திருந்தேன் என்பது எனக்கு மன நிறைவைத் தருகிறது. அவருடைய 'உறவும் நினைவும் ஒரு பாலைவனத்தின் குரலும்' என்னைப் பற்றியதுதான். அக்கவிதை பின்வருமாறு :

*உன்னைப் பற்றியே உன்னைப் பற்றியே*

*இன்னமும் இந்தப் பாலையின் குரல் !*

*உறவும் பிரிவும் தந்த உவப்பு*

*மழை நாட்கள் வரும் நினைவில்*

வந்த மகிழ்ச்சி
என்னைப் பகிர்ந்துகொள்ள
என்னை நான் புரிந்துகொள்ள
என்னோடு வந்த
எனது அழியா நிழல்
கவிதையின் மென்மை அழகை
என் கண்ணுக்குள் தேக்கிய
வைகறை நிலவு
என்னைச் சகித்து
என் ஊஞ்சல் கயிறுகள் தொய்யும்
உயரத்துக்கு உந்தி
உலகப் பரப்பின் ஒவ்வொருகணமும் காட்டி
வொல்காவிலிருந்து கங்கைவரையும் சென்று
கங்கை இருந்து நாஸா வரையிலும் கடந்து
என்னை ஆதரித்த அதிமானுடன்
நீதான், நீதான்
எனினும் நேர்ந்ததென்ன?
இருளிலும் ஒளிரும் சர்ப்ப மணிமகுடத்தின்
அழகிய தீமை
தனிப்பட்ட தர்மமென
மரப்பசு நாயகியின்
கலாசொரூபத்தில் மயங்கினையே,
ஏரோதின் வாளால்

*தலையை இழந்த இந்தப்*
*பாலை வனத்தின் குரல்*
*இன்னமும் இன்னமும்*
*உன்னைப் பற்றியே!*
*உன்னைப் பற்றியே!*

இக்கவிதையில் இடம்பெறும் உறவும் பிரிவும், மழைநாட்கள் வரும், அழியா நிழல்கள், வைகறை நிலவு, உலகப்பரப்பின் ஒவ்வொரு கணமும், அதிமானுடன் என்பன சிவலிங்கத்துக்கு மிகவும் பிடித்தமான எனது கவிதைகள் என்பதை நான் இங்கு குறிப்பிடவேண்டும்.

இந்தக் கவிதையில் தன்னை ஒரு பாலைவனமாக உருவகிக்கும் இந்த மன உணர்வு அவருக்கு எவ்வாறு ஏன் வந்தது என்று தெரியவில்லை. சிலவேளை அவரது பிற்காலத் தனிமையின் விளைவாக இருக்கலாம்.

என்னைப் பற்றிய சசியின் கவிதைகளைப் படிக்கும்போது ஒரு ஆற்றாமையும் வெப்புசாரமும் என்னுள் கிளர்வதைத் தவிர்க்க முடியவில்லை. என் அருமை நண்பரே, நீங்கள் ஒரு *living fossil* அல்ல, எப்போதும் கொழுந்துவிட்டெரியும் உயிர்ச் சுடர்தான், ஏரோதின் வாளால் தலை இழந்த பாலை அல்ல, பாலைவனத்துப் பசுஞ்சோலைதான் என்று குரல் எடுத்துக் கூவத் தோன்றுகின்றது எனக்கு. என் அருமை நண்பரே, உங்கள் கவிதைகளில் எனக்கு ஒரு நிலையான இடத்தைத் தந்து சென்றீர்கள், என் கவிதைகளில் உங்கள் நிழலைக்கூட நான் பதிவு செய்யவில்லையே, உங்களைப் போன்ற மென் உணர்வு எனக்கு வாய்க்கவில்லையே என்று என்னுள் கழிவிரக்கம் சுரக்கின்றது.

எல்லோரையும் போல கடந்த முப்பது ஆண்டுகால யுத்தம் அவரையும் அலைக்கழித்தது. அவரது ஒரு மகனையும் பலிகொண்டது. அவரை அகதியாக ஓடி ஒளியவைத்தது. யுத்தத்தின் கோர முகத்தை அவரது கவிதைகள் பலவற்றில் காணலாம். அதில் ஒரு கவிதையுடன் அவர் பற்றிய இச்சிறு குறிப்பை முடித்துக் கொள்கிறேன். 'வீழ்ச்சி' என்பது கவிதையின் தலைப்பு. யுத்தம் பற்றி எழுதப்பட்ட மிகச் சிறந்த கவிதைகளுள் இதுவும் ஒன்று என்பது என் கருத்து. ஆயுதப் போராட்டம் மனிதனை ஒரு மண்புழுவாக வீழ்ச்சியடையவைத்த வரலாற்றை உருவகமாகக் கூறுகின்றது இக்கவிதை. மனிதனை மண்புழுவாகக் காணும் சசியின் இந்தப் படிமம் நம் உள்ளுணர்வை உலுப்பவேண்டும்.

*காய்ந்த சருகுபோல் ஒரு மண்புழு*
*ஊர்ந்துகொண்டிருந்தது படியோரம்*
*நான் மனிதன் என்ற இரக்கம் மீதூர*
*அதனைப் பார்த்துவிட்டுப்போனேன் ஒருகணம்.*
*சுர் என்று சருகு இரைதல்போல் கேட்டது.*
*திரும்பிப் பார்த்தேன்–*
*மண்புழு வாலில் நின்றது....*

*வாயைத் திறந்தது கூரிய பல்தெரிய.*
*நாக்கு எங்கே என நினைக்கையில்,*
*நாக்கிலிருந்து தீச்சுவாலை பறந்தது.*
*மண்புழுவுக்குப் பல் ஏது? நாக்கு ஏது?*

நினைக்கையில் தெரிந்தது மண்புழு
உருமாறிவிட்டதென்று
எனினும் அஞ்சவில்லை.

குனிந்தேன் தடி எடுக்க.
நிமிரும்போது
மண்புழுவின் கையில் துப்பாக்கி இருந்தது.
அல்ல,
ஒரு பாம்பின்கைத் துப்பாக்கி.
அதுவும் அல்ல,
ஒரு சிப்பாயின் கைத் துப்பாக்கி.
நான் குனிந்து,
பாம்பாய் நெளிந்து
காய்ந்த சருகின் மண்புழு ஆகி
ஊர்ந்துகொண்டிருக்கிறேன் படியோரம்.

□

# மறக்கமுடியாத மகத்தான மனிதர்

• க. இரத்தினவேல்

*''நான் மறைந்து விடுவேன்*

*நான் இருந்தேன் என்பதற்கு*

*எந்த தடயமும் இருக்காது*

*ஆனால் எனது இருப்பு*

*காற்றுக்குள் ஊதியிருக்கும்''* – என்ற

என் மதிப்புக்குரிய கவிஞரின் வரிகள் யதார்த்தமானவை. என் ஆளுமையின் சிருஷ்டிக்கு இளமைக்காலம் முதல் துணைநின்ற அந்த மாமனிதனின் இழப்பை எவராலும் ஈடு செய்ய முடியாது. சிவலிங்கம் மாஸ்ரர், ஸ்டீபன் மாஸ்ரர், சசி என்றெல்லாம் ஊர்மக்களால் உரிமையோடு அழைக்கப்பட்ட சண்முகம் சிவலிங்கம் இன்று எம்மோடு இல்லை. நான் ஊருக்கு வரும்போதெல்லாம், முதலில் எனது தாய் அடுத்து சந்திக்கும் ஒருவராக அவர்தான் இருந்தார். அவரின் நினைவின் வலி நெஞ்சை உறுத்துகிறது. சில மாலை நேரங்களில் கடற்கரை ஓலைக் கூடாரங்களில் கழித்த நாட்களில், தமிழர்களின் அரசியல் போக்கு, சமூகம், கலை இலக்கியம், பற்றி பல புதிய கருத்துக்களை புரிய வைத்ததை நினைத்துப்பார்க்கிறேன். முதலில் ஒரு மாணவனாக, பின் சக ஆசிரியனாக, நண்பனாக என்னை ஏற்றுக்கொண்ட மனப்பக்குவம் யாருக்கு வரும். கிராமத்தின் மறுமலர்ச்சிக்காக இலக்கிய மன்றங்கள், வாசக சாலைகள், சந்தை, விளையாட்டு போட்டிகள் என எத்தனை விழாக்கள், எத்தனை செயற்பாடுகள். அளவற்ற மனிதநேயம், எப்போதும்

கருணை உள்ளம் கொண்ட மனம், பிறருக்கு உதவும் மனப்பாங்கு, அநீதியை எதிர்த்து நிற்றல் இப்படி எத்தனை மனித விழுமியங்களை உன்னில் கண்டேன். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் இலக்கிய உலகில் உன்னத படைப்பாற்றல் மிக்க ஒரு எழுத்தாளனாக, கவிஞனாக, விமர்சகனாக, சிறுகதை ஆசிரியனாக, நடிகராக, இனம்காணப்பட்ட ஒரு சிருஷ்டிகர்த்தா, அளவற்ற ஆங்கிலப் புலமையின் மூலம் தமிழ் இலக்கியத்திற்கு செழுமையூட்டிய வித்தகன். புகழுக்கு தலைவணங்காத புதுமையாளன், இப்படியொரு மனிதருடன் வாழக் கிடைத்ததை பெரும் பேறாக கருதுகிறேன். அவரின் இருப்பானது என்றும் என்னுள் வாழ்ந்துகொண்டிருக்கும். இவர் நினைவுத்துயரில் வாழும் சகலருக்கும் என் அனுதாபங்கள்.

□

# ஓர் ஏகலைவக் குறிப்பு

• இளவாலை விஜயேந்திரன்

*01*

இலக்கிய உலகில் ஒருவகையான வனவாசம், அஞ்ஞாதவாசம் என்று தலைமறைவாய் இருக்கிற என்னை, அவ்வப்போது அலைக்கழிக்கிற நண்பர்களிற் பத்மநாப அய்யருக்குத் தனியிடமுண்டு. ஓரளவுக்கு அந்த இடத்துக்கு அருகில் வரத்தக்க குறிகளைச் சண்முகம் சிவலிங்கத்தின் மகன் வித்யானியிடமும் காண்கிறேன். பல்வேறு காரணங்களால் இந்தக் குறிப்பை எழுதாமற் போய் விடலாம் என்றசெய்தியைத் தொலைபேசியில் கூறி, அவரிடம் மன்னிப்புக்கேட்க எடுத்த முயற்சி தோல்வியிலேயே முடிந்தது. இன்னும் பல நாட்கள் காத்திருக்கவும் அவர் ஆயத்தமாக இருக்கிறபோது எழுதாதிருப்பது ஒரு பாவச் செயல் என்றே தோன்றுகிறது. ஏற்கனவே பல பாவச் சுமைகளில் அல்லோலகல்லோலப்படுகிற எனக்கு, இன்னொரு பாவம் வேண்டாமென்ற எச்சரிக்கையால் இந்தக் குறிப்பை வித்தியானியின் கால்களிற் சமர்ப்பித்துவிடுகிறேன்.

*02*

என்னை உள்ளும், புறமும் அறிந்த ஒரு படைப்பாளி வடகோவை வரதராஜன். ''படைப்பாளிகளை அவர்களது படைப்புகளூடு பார்ப்பதுதான் நல்லது. அவர்களை நேரிற் சந்தித்தால் அவர்களைப் பற்றி நாம் கொண்டுள்ள பிம்பம் உடைந்து விடும்'' என்று ஒரு தடவை பேச்சின் இடையிற் குறிப்பிட்டான். ஏதோ பேச்சில் சொல்கிறான் என்று பேசாமல் இருந்துவிட்டேன். பிறகொருநாள் திரும்பவும் அவன் இதைக் குறிப்பிட்டபோது ''இவன் என்னைச்

சந்தித்தபிறகே இப்படியொரு முடிவுக்கு வந்திருக்கிறான்'' என்ற எண்ணம் ஓடியது. பிறகு யோசித்துப் பார்த்ததில் அவனது கூற்றில் உண்மை இருப்பதாகவும் பட்டது. என்னை அறிமுகம் செய்கிற சங்கடத்தாலேயே சில சந்தர்ப்பங்களில் இலக்கியவாதிகளைத் தேடிச் சந்திப்பதைத் தவிர்த்திருக்கிறேன். இயல்பாகவே நான் கதை குறைவு (மனைவியைக் கேட்டுப் பாருங்கள்). ஒரு கட்டத்துக்குமேல் கதைவற்றி, போலியாகத்தான் கதைக்கிறோமோ என்று எனக்கே சந்தேகம் வருவதுண்டு. ஒரே ஒரு தடவை கல்முனைக்கு வந்திருக்கிறேன் (அல்லது போயிருக்கிறேன்). அதுவோர் இலக்கியப் பயணம் கிடையாது – நண்பனின் திருமணம். கடற்காற்றுத் தாலாட்ட இரவுபகலாய்ப் பெண்கள் ஆண்களெனப் பேசிக் கழித்த அந்த நாட்களில் சண்முகம் சிவலிங்கத்தைச் சந்திக்க ஏதோவொரு மனத்தடை (தலைமுறை இடைவெளியோ) இருந்தது உண்மை. உமா வரதராஜனைச் சந்தித்துப் பேசியதோடு சரி. முட்டாள்தனமான காரியம் செய்துவிட்டதாய் முப்பது வருடங்களின்பின் தோன்றுகிறது.

சண்முகம் சிவலிங்கம் என்கிற மனிதன் குறிலா, நெடிலா – என்னைவிட மெல்லியவரா (அதற்கான சாத்தியம் குறைவு) என்பது தெரியாது. அவரது குரலில் கவிதையொன்றை வாசித்துக் காட்டினால் அந்த நிமிடங்கள் மனதைக் கனதியாக்குமா அல்லது இறகுபோல் ஆக்குமா-தெரியாது.

*03*

இலக்கிய ஆர்வமுடைய எவருக்கும், தன் ஆயுளில் பல ஆயிரம் கவிதைகளை (அந்தப் பெயரில் வரும் துணுக்குகள் உட்பட) வாசிக்கச் சந்தர்ப்பம் கிட்டும்.

ஒவ்வொருவரது ரசனைக்குட்பட்டு நூறு கவிதைகளை நினைவு கூர்ந்தாலே அதிகபட்சம்.

நல்ல கவிதைகளில் சில, மற்றோரால் அடையாளங்காட்டப்படுபவை. வேறு சில, ஒருவகைச் சுயம்புத்தன்மை கொண்டு, படிக்கிறபோதே மனதிற் பதிந்துவிடுபவை 'இது சொற்களின் மாய வித்தை.' அப்படிச் சுயம்புவாய் எனக்குப் பிடித்த கவிதைகளில் சண்முகம் சிவலிங்கத்தின் எகிப்தின் தெருக்களிலே, வெளியார் வருகை, ஆக்காண்டி, பிரியாவிடை போன்றவற்றுக்கு இடமுண்டு.

இவற்றில் முதல் மூன்றும் அரசியற் கவிதைகள்தாம்— அவற்றின் தளங்கள் வேறுவேறாயினும். வெவ்வேறு காரணங்களால் என்னை ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியவை இவை. எகிப்தின் தெருக்களில் மக்கள் எழுச்சி பெற்றதைக் கவிஞர் படைத்து இத்தனை வருடங்களின்பின் அந்த கவிதை அப்படியே பொருந்துவது ஆச்சரியம். எந்த மாற்றமும் இன்றி, நாங்கள் உணர்ச்சியற்று இருக்கிற துக்கத்தை யாரிடம் சொல்லியழுவோம்?

அந்தக் கவிதை வேறொரு காரணத்தாலும் எனது கவனத்தை ஈர்த்தது. என்னதான் பாதி நூறாண்டு வாழ்ந்து முடித்தாலும், ஆண்குறி என்ற சொல்லைக் கவிதையில் பாவிக்கிற 'துணிச்சல்' எனக்கில்லை (யோனியைப் பாடும் பெண்களே வந்துவிட்டாலும்).

நோர்வேயில் இலக்கியம் பேசும் மாதாந்த ஒன்று கூடலில் இந்தக் கவிதை பற்றி ஒரு தடவை உரையாடி, மேலும் நாலு பேரிடம் இந்தக் கவிதையைக் கொண்டு சென்றது மகிழ்ச்சி.

'வெளியார் வருகை'யை அழகாய்ப் பதிவுசெய்த கவிதைகளில் (நான் படித்தவற்றில்) 'வெளியார் வருகை' மிக அழகானது. இந்த விடயத்தைக் கையாண்ட எண்ணற்ற

கவிதைகளில் இது மூத்தது – இன ஒடுக்குமுறை கூர்மையுறத் தொடங்குமுன் எழுதப்பட்டது இது. ‘கவிஞர்கள் தீர்க்கதரிசிகள்’ என்ற கூற்றை நான் நம்புவதில்லை. அந்த நம்பிக்கையீனத்தை இந்தக் கவிதை சற்றே தகர்க்கப் பார்க்கிறது – அதுவோர் அதிகாலைக் கனவாய் இருப்பினும், காலம் கடந்தும் கவிதையின் பொருத்தப்பாடு சற்றே அதிசயிக்க வைக்கிறது.

கவிஞரது படைப்புகள் பற்றி நுஃமான் ஓரிடத்தில் “Plain ஆகத் தோன்றினாலும் போலியாகப் பிரதிபண்ணமுடியாதது” எனக் குறிப்பிடுகிறார். அந்தக் குறிப்பு ‘ஆக்காண்டி’ கவிதைக்காய் எழுதப்பட்டது போலும். ஒரு நாட்டார் பாடலின் தோற்றத்தில் எளிமையாய் மிக ஆழமான அர்த்தங்களோடு எழுதப்பட்ட அதன் வீச்சும் ஓசையும் யாரையும் எளிதில் ஈர்க்கவல்லவை.

*04*

தமிழ் இலக்கியப் பரப்பில், கவிதைக்கு ஈழத்தவரது பங்கு மகத்தானதென்பதை மறுப்பதற்கில்லை. நல்ல பல கவிதைகளால் சண்முகம் சிவலிங்கமும் அப்பணியிற் தனது பங்களிப்பை வழங்கியிருக்கிறார். அவரது இயல்பு தன்னை விளம்பரப்படுத்துவதல்ல. பல நல்ல படைப்பாளிகள் அப்படித்தான் இருக்கிறார்கள் (சருகுகளின் சத்தம்தான் அதிகம்). அவரது இயல்பு அவரது படைப்புகளை வாசகனிடம் கொண்டு செல்லவும் தடையாய் இருந்திருக்கிறது. நல்லவேளையாய் அவற்றை வாசகப் பரப்பிற்குக் கொண்டு செல்ல நுஃமான், பத்மநாப அய்யர் போன்றோர் உதவியிருக்கிறார்கள். மற்றப் படைப்பாளிகள் மீது வெளிச்சம் படாது காப்பதையே

தொழிலாய்க் கொண்ட சிலரிடையே இப்படியும் சிலரதுபணி அமைந்திருப்பது நன்றியோடு நினைவு கூரப்படவேண்டியது.

*05*

தனக்குமுன்னே எழுதியவர்களது சொற்களைத்தான், தான் பட்டை தீட்டித் தருவதாக சுந்தர ராமசாமி எழுதிய ஞாபகம். நானும் என்போற் பலரும் கவிஞரது படைப்புகளை வாசிப்பதன் மூலம் எமது படைப்பாற்றலைச் செழுமைப்படுத்தியிருப்போம். எம்மை அறியாது நிகழ்வது அது எமக்கு முன் எழுதியபோது எழுத்திற்தான் – அவர்கள் இட்டபாதையிற்தான் – நாம் படைக்கிறோம், பயணிக்கிறோம் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

நல்ல படைப்பாளியின் வாசகன், தானே படைப்பாளியாய் மாறும் வாய்ப்புகள் அதிகம். நல்ல படைப்புகள் ஏனைய படைப்பாளிகளையும் வாசகநிலைக்கு மாற்றும் திறன் கொண்டவை. கவிஞரது பல படைப்புகள் இந்த ரசவாதத்தை நிகழ்த்தவல்லன.

*06*

கவிதைமூலம் சேரன் கவிஞருக்குச் செலுத்திய அஞ்சலியில் சற்றே சாராய வாடை அடித்தது. கல்முனையில் உமா வரதராஜனைச் சந்தித்ததுபோல, கவிஞரையும் சந்தித்திருக்கலாமோ? ஒரு சாராயப் போத்தல் மூடியாவது அவரோடு சேர்ந்து திறந்திருக்கலாமோ? இப்போது ஒன்றும் கெட்டுப்போய் விடவில்லை நண்பர்களே. நான் இப்போது என்ன செய்கிறேனென நினைக்கிறீர்கள்? (கவிஞரது நினைவாய் பியர் மூடி திறந்த சத்தமுமா கேட்கவில்லை உங்களுக்கு).

□

# இன்று மிகத் துயருற்றேன்

• மு. புஷ்பராஜன்

பொதுவாக, மனதை அதிர வைக்கும் செய்தி எதுவென்றால், அது நம் பிரியத்துக்குரியவரின் மரணச் செய்திதான். சண்முகம் சிவலிங்கம் காலமான செய்தி எனக்கு ஏற்படுத்திய உணர்வும் அதுதான். என் மனம் இந்த வரிகளை மீட்டிக் கொண்டது.

*இன்று மிகத் துயருற்றேன்.*

*என் இனிய நண்பா,*

*இவ்விரவின் நிலவொளியில் என்னுடன் நீ இருந்தால்*

*வெண்பனியின் துளிசொட்டும்*

*பூங்கொத்தைப் போன்று விம்முகிற என்நெஞ்சில்*

*ஆறுதல்கள் தருவாய்.*

சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைகளில் ஈடுபாடு கொண்டவர்கள், அவரவர் மனநிலைக்கு ஏற்ற விதமாக வேறு வரிகளை நினைவு கொள்ளலாம். சண்முகம் சிவலிங்கத்தின் இந்த கவித்துவ வரிகள், அவரது நண்பர் எம்.ஏ. நுஃமானை நினைத்து எழுதியவையே. அதில், 'என் இனிய அன்பே' என்றுதான் இருந்தது. சண்முகம் சிவலிங்கத்திற்கும் எனக்குமான நட்பில் அன்பே என்ற சொற்பிரயோகம் பொருத்தமற்றதனால் நண்பா என மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

இந்த 'நீர்வளையங்கள்' என்ற கவிதை என்னால் தொகுக்கப்பட்ட 'நெய்தல்' என்ற சிறப்பு மலரில் வெளிவந்ததே. சண்முகம் சிவலிங்கத்தை அவர்களது (நுஃமானையும் இணைத்து) 'கவிஞன்' இதழிலிருந்து அறிந்து கொண்டாலும் அவர் தனது கவித்துவம் செறிந்த கவிதைகள், மொழிபெயர்ப்புக் கவிதைகள், விமர்சனங்கள் ஆகியவைகள் மூலம் வியப்பையும் விருப்பையும் ஏற்படுத்தினார். பின்னர் எங்களது 'அலை' இதழ் மூலம் ஏற்பட்ட தொடர்பு மேலும் மனரீதியான நெருக்கத்தை ஏற்படுத்தியது. ஆயினும், அவரைச் சந்தித்துக் கொண்டது நிர்மலா, நித்தியானந்தன் ஆகியோர்கள் வாழ்ந்த மாமரங்களின் நிழல் கவிந்த வீட்டில்தான். அந்நாட்களில், ஒரு மத்தியான வெய்யிலில் அவர் சைக்கிளில் என் வீடுதேடி வந்ததும் இன்றும் நினைவில் உண்டு.

தன் கவிதைகள் மூலம், எழுபதுகளில் இயங்கிக்கொண்டிருந்த படைப்பாளிகள் மத்தியில் மிகுந்த பாதிப்பினை ஏற்படுத்தியவர் சண்முகம் சிவலிங்கம். அவருடைய 'காற்றிடையே', 'ஆக்காண்டி, ஆக்காண்டி', 'வெளியார் வருகை' போன்ற கவிதைகளை வியந்த நவீன இலக்கிய படைப்பாளிகள் அநேகர். அவரது காற்றிடையே, ஆக்காண்டி, ஆக்காண்டி ஆகிய கவிதைகளின் பாதிப்பை பல நவீன கவிஞர்களின் கவிதைகளில் இலகுவாகக் கண்டுகொள்ளலாம். மார்க்சியக் கருத்துக்களை உள்ளடக்கமாகக் கொண்ட கவிதைகள், பிரச்சாரமின்றிக் கவித்துவம் வாய்ந்த கவிதையாக இருக்கவேண்டும் என்பதற்கு இவரது ஆக்காண்டி, ஆக்காண்டி கவிதையே ஒரு அசலான எடுத்துக்காட்டு.

இன்று தலைமுறை தாண்டியும் பேசப்படும் 'மரணத்துள் வாழ்வோம்' என்ற கவிதைத் தொகுப்பின் தலைப்பு. இவரது வெளியார் வருகை கவிதையில் இருந்தே எடுத்தாளப்பட்டது. அவரது வெளியார் வருகை கவிதை இன்றும் காலச் சூழலுக்குப் பொருத்தமாகப் புதிய அர்த்தத்தைத் தன்னுள் கொண்டு நிற்கின்றது. சண்முகம் சிவலிங்கம் மார்க்சியத்தில் நம்பிக்கை கொண்டிருந்தவர். அக்கால மார்க்சியப் 'பிதாப்பிதாக்களுக்கு' புதுக்கவிதை வெறுப்புக்குரியவையாக இருந்தபொழுதும் இவர் புதுக்கவிதையில் பெரிதும் ஈடுபாடு காட்டினார். இவரது அக்காலக் கவிதைகள் மரபுவழிக் கவிதைக்கும் புதுக்கவிதைப் போக்கிற்கும் இடைப்பட்ட இருகரையும் தழுவி வழியும் போக்கினைக் கொண்டிருந்தது. அவரது பிற்காலக் கவிதைகள், அதாவது 'சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்' தொகுப்பின் கவிதைகள் மரபுக்கவிதையில் இருந்து விலகி விட்டதை உணர்த்துகிறது.

சண்முகம் சிவலிங்கம் மார்க்சிய ஈடுபாடு கொண்டிருந்தாலும் படைப்புத் தளத்தில் தமது பிதாப்பிதாக்களின் இறுகிய கோட்பாட்டு நிலையினை வழிபாடு செய்யாமல், தனது சுய அறிவுசார்ந்து மீறிக்கொண்டே இருந்தார். நுஃமானும் அவ்வாறே. மஹாகவியை மார்க்சிய கடும் விமர்சனக் காவலர்களின் புறக்கணிப்புச் சிறையில் இருந்து, அவரை மகிமை ஒளியோடு மீட்டுக்கொண்டு வந்தவர்கள் இந்த கிழக்கு மாகாண இலக்கிய இரட்டையர்கள்தான். மஹாகவியின் கவிதையை விரும்பி இருந்தவர்களும் இந்த விமர்சனக் காவலர்களின் கோபப் பார்வைக்கு அஞ்சி மௌன விரதம் இருந்தவேளை, மஹாகவியின் கவிதையின் பல்வேறு

பரிமாணங்களை வெளிப்படுத்தி வந்தவர்கள் இவர்கள்தான்.

மஹாகவி பற்றிச் சண்முகம் சிவலிங்கம் அக்காலத்தில் எழுதிய கட்டுரைதான் கடும் கோட்பாடு விமர்சன நிலையைத் தகர்த்தது. இன்றைய வளர்ச்சிப்போக்கில் அக்கட்டுரை கருத்து மாறுபாடுகளுக்கு இடமளிக்கக்கூடியதாகவும் இருக்கலாம். இவரது தனித்துவமான கவிதைகளைப் போலவே சிறுகதைகளும் தனித்துவமானது. கேரளாவில் உயர் கல்வி கற்ற காலத்தை பின்னணியாகக் கொண்ட ஒரு நாவல் எழுதியிருப்பதாகவும் அறிந்திருந்தேன். படைப்பின் முழுமைமீது தீராத காதல் கொண்ட படைப்பாளி தன் படைப்புக்களை மீண்டும் மீண்டும் படித்து, மீண்டும் மீண்டும் திருத்தங்கள் செய்தபடியிருக்கும் திருப்தியுறாத மனமுடையவனாகவே இருப்பார். அவ்வாறே அவர் காலத்தை தள்ளிப்போட்டுக் கொண்டு வந்த அதிருப்தி எனக்கும் பலருக்கும் உண்டு.

சண்முகம் சிவலிங்கம் மேலைத்தேசய சிந்தனைகளை அப்படியே வெளியே கொட்டுபவரல்ல. எதையும் தனது ஆழ்ந்த கிரகிப்பிலும் சுய சிந்தனை வெளிச்சத்திலும் எளிமையாக விளங்கக்கூடியவரே. அதற்கு உதாரணமாக 'அலை'யில் வெளிவந்த 'இருப்பியல்வாதம்' பற்றிய கட்டுரையைக் கொள்ளலாம்.

ஒருமுறை தொலைபேசியில் அவருடன் உரையாடியபோது, மிகுந்த உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் உரையாடினார். 'பின் நவீனத்துவம்'

பற்றி எழுதப்போவதாகவும் அதுபற்றி வந்த நூல்களை பத்மநாப ஐயரிடம் கேட்டிருப்பதாகவும் கூறினார். சிறிது காலத்தின் பின்னர் மீண்டும் அவருடன் தொலைபேசியில் உரையாடியபோது அந்த உரையாடல் சுமுகமாக இருக்கவில்லை.

இரண்டு கவிதைத் தொகுதிகளுக்குப்பின், அவரது சிறுகதைகளையும் நாவலையும் நூலுருவாக்க பத்மநாப ஐயர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். அவரது எழுத்து முயற்சிக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் சில ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தார். ஆனால் அவர் அம்முயற்சி பூரணமாவதற்குரிய பொறுப்புக்களில் ஆர்வமாக இருக்கவில்லை.

*அற்ப நிகழ்வும்*

*அர்த்தம் அற்றதும்*

*என்னுடன் வருக*

எனப் பரபரப்புக்களுக்கும் முக்கியத்துவங்களுக்கும் நடுவில் நசிந்து முகமழிந்து போகும் அற்ப நிகழ்வுகளில் கவனம் குவிக்கும் இக்கலைஞன் 'கானகத்தில் எங்கோ கண்மலரும் ஒரு பூவில்' கவனம் கொண்ட இவர், தனது பணித்துறையில் இருந்து ஓய்வு பெற்றபோதும் படைப்புத் துறையில் இருந்து ஓய்வு பெறாமலே இருந்தார். சிறுகதை, நேர்காணல் ஆகியவைகள் அருந்தலாக வெளிவந்து கொண்டுதான் இருந்தது. பின்னர், அவரது இறுதி ஆண்டுகள் படைப்புத் துறையில் இருந்து ஓய்வு பெற்றவராகவே அறியப்பட்டார். இக்காலங்களில்

தனக்கான பொழுதுகளை அவர் கழித்தவிதம் அவருக்கு மகிழ்ச்சி அளிப்பதாக இருந்திருக்கலாம். ஆனால் அவரது படைப்புத் திறனை அறிந்தவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கவில்லை.

மனித மனம் எந்த அறிவுசார்ந்த விடயங்களின் வரைவுகளுக்கும் ஏற்ப இயங்குவதில்லை. அறிவை மறுதலிக்கும் உணர்வுகள் மனதின் எங்கோ ஒரு புள்ளியில் உயிரோடு உறைந்திருக்கும். அந்த உறைவு அசைகையில் மனிதமனம் எடுக்கும் முடிவுகள் விசித்திரமானவையே. போராட்டக் களத்தில் மகனை இழந்த துயரின் வலி அவரை சதா வாட்டியபடியே இருந்தது. 'பூமிக்கடியில் பொந்து கிண்டி உன்னை என் சிறகுத் தோலுக்குள் போர்த்திய தூக்கணாங்குருவி நான்' என பாடிய அவர், தன் மகனை இழந்து விட்டார் என்ற நிஜத்தை தரிசிக்க வேண்டிவந்தது.

*துன்பம் என்னும் சூனியத்துள்*

*உன் இன்மையும்*

*உன் இன்மை மூலம்*

*என் இன்மையும்*

*இதைத் தவிர வேறென்ன?*

என்ற சோகத்தை காலம் ஆற்ற முடியாவிட்டால் சூழலைத் தன் காலுக்குள் போட்டும் மிதிக்கும் நிலை அவருக்கு மகிழ்ச்சியை அளித்திருக்கக்கூடும்.

இன்று அவர் இல்லாவிடினும் என்றும் நான் அவரை அழைப்பதைப்போல் அவரை அழைக்கவே விரும்புகிறேன். ''ஸ்ரிபன் மாஸ்டர்! நீங்கள் பாடியதைப்போல் 'துயர்களை தோசைக் கல்லில் தெறித்துவிட்டு' அமைதியாக உறங்குங்கள். உறங்குவீர்களா?''

நன்றி— பொங்கு தமிழ் இணையம்

□

# நீர் வளையங்கள் – நினைவு வளையங்கள்

• கருணாகரன்

*20.04.2012* அன்று பின்னேரம் ரமேஸின் தொலைபேசி அழைப்பு வந்தது. ஏதாவது இலக்கிய விசயங்கள் அல்லது யாராவது படைப்பாளிகளைப் பற்றி பேசுவதற்காக, அல்லது இலக்கியக் கூட்டங்கள், புத்தக வெளியீடுகளைப் பற்றிய தகவல்களைச் சொல்வதற்காகவே ரமேஸின் தொலைபேசி அழைப்புகள் பெரும்பாலும் வரும். சில நாட்களுக்கு முன்னர் ரமேஸின் கட்டுரை ஒன்றை பௌசருக்கு அனுப்பியிருந்தேன். ஆனால், அந்தக் கட்டுரை இன்னொரு இதழில் பிரசுரமாகிவிட்டது. இதைக் குறித்து ரமேசுடன் கதைத்திருந்தேன். ஆகவே, அதைப் பற்றித்தான் ஏதாவது பேசப் போகிறாரோ என்று நினைத்தபடி அழைப்பை உள்வாங்கினேன்.

எடுத்தவுடனேயே ரமேஸ் கேட்டார். ''உங்களுக்குச் சங்கதி ஏதாவது தெரியுமா?'' என்று.

''என்ன சங்கதி? எனக்கொன்றும் தெரியாது. நீங்கள் எதைப் பற்றிக் கேட்கிறீர்கள்?'' என்று பதிலுக்குக் கேட்டேன்.

''சண்முகம் சிவலிங்கம் மறைந்து விட்டார். யேசுராசா சொன்னார். யேசுராசாவுக்கு உமா வரதராஜன் சொன்னாராம்'' என்றார் ரமேஸ். குரல் துயரத்தில் ஆழ்ந்திருந்தது.

காலையில் சோலைக்கிளி என்னுடன் கதைத்திருந்தார். கல்முனையில் இருந்து கிளிநொச்சிக்கு வரும் ஒரு நண்பரிடம் தன்னுடைய புத்தகங்களைக் கொடுத்திருந்த சோலைக்கிளி, அந்தப் புத்தகங்கள் கிடைத்தனவா என்று கேட்டார். ஆனால், அவர் சண்முகம் சிவலிங்கத்தைப்

பற்றிப் பேசவில்லை. அந்த நேரத்தில் 'இந்தச் சேதி' யைச் சோலைக்கிளி அறிந்திருக்கவில்லை என்று நினைக்கிறேன்.

சண்முகம் சிவலிங்கம் நோயாளியாக இருந்து நான் அறிந்ததில்லை. அப்படியானால், எவ்வாறு இந்த மரணம் நிகழ்ந்தது? என்று மனம் கேட்டது.

''ஏன் என்ன நடந்தது?'' என்று கேட்டேன்.

''இரவு படுத்தவர் காலையில் எழுந்திருக்கவில்லை என்று சொல்கிறார்கள்'' என்றார் ரமேஸ். அதற்கு மேல் பேசத் தோன்றவில்லை இருவருக்கும். பேசத் தோன்றவில்லை என்பதற்கும் அப்பால் பேசமுடியவில்லை என்பதே உண்மை. சில நொடிகள் நீடித்த மௌனம்.

துக்கத்தையும் அந்தரிப்பையும் தரும் எதிர்பாராத செய்தி. யுத்தச் சூழலிற் சிக்கியிருந்த நாட்களில் எத்தனையோ சாவுகளைப் பார்த்திருக்கிறேன். காலடியில், கையருகில், கண்முன்னே என்று சாவுகளுடன் வாழ்ந்திருக்கிறேன். அந்த நாட்களில் இதயம் தாங்கவே முடியாத அளவுக்குத் தவித்திருக்கிறது. அதையெல்லாம் கடந்து வந்திருக்கிறேன். ஆனால், இன்று இந்தச் சாவுச் செய்தியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இவ்வளவுக்கும் இது இயற்கை மரணம். ஏறக்குறைய 70 வயதைக் கடந்த நிலையில் சம்பவித்த சாவு. என்றாலும் இதைத் தாங்கிக் கொள்வதற்குக் கடினமாகவே இருக்கிறது. அகால மரணங்களற்ற ஒரு சூழல் மெல்லமெல்ல விரிந்து உருவாக்கியிருக்கும் புதிய மனநிலையா இப்படி இந்தச் சாவுச் செய்தியைப் பெரிதாக உணர வைக்கிறது? அல்லது சண்முகம் சிவலிங்கம் என்ற இழக்கக் கடினமான ஒரு ஆளுமை குறித்த உள்ளுணர்வா இந்தச் செய்தியின் கனதியை உணர வைக்கிறது? அந்தக் கணத்திலேயே அலைகள் குமுறத் தொடங்கி விட்டன.

துக்கத்தைக் கொண்டு வந்த அந்த அழைப்பைச் சபித்தேன். மறுவார்த்தை எதுவும் அக்கணத்தில் தோன்றவில்லை. 'சசி'யின் முகமே நினைவில் எழுந்தது. அவருடைய கம்பீரமான உருவம், அளவான பேச்சு, நிமிர்ந்த நடை, ஏதேச்சையான நடவடிக்கைகள் எல்லாம் இணைந்த நினைவுகள்... சசியின் வயதைப் பற்றி நான் ஒருபோதுமே நினைத்ததில்லை. அவர் வயதைக் கடந்த தோற்றத்திலேயே எப்போதுமிருந்தார். அவருடைய எழுத்துகளும் அப்படியே இருந்தன. இளமை குன்றாதவர் அவர்.

"எப்போது இறுதி நிகழ்வுகள் நடக்கின்றன? யாராவது யாழ்ப்பாணத்திலிருந்து போகிறார்களா?" என்று ரமேஸைக் கேட்டபோது 'பெரும்பாலும் சித்தாந்தன் போகக் கூடும்' என்று சொன்னார்.

அதற்கு மேல் எதுவும் பேசத் தோன்றவில்லை. தொலைபேசியைத் துண்டித்து விட்டு சற்று நேரம் அமைதியாக இருந்தேன். சசியைப் பற்றியே நினைவுகள் ஓடிக்கொண்டிருந்தன.

00

சண்முகம் சிவலிங்கத்துடன் நான் நேரில் அறிமுகமாகியது மிகப்பிந்தியே. ஆனால், அவருடைய கவிதைகள் எண்பதுகளின் முற்பகுதியில் பரிச்சயமாகியிருந்தன. முற்றிலும் மாறுபட்ட வெளிப்படுத்தலைக் கொண்ட கவிதைகளாக அவை இருந்தன. 'நண்டும் முள்முருக்கம் பூவும்', 'வெளியார் வருகை', 'ஆக்காண்டி, ஆக்காண்டி', 'நிலவும் வழிப்போக்கனும்', 'மறுதலை' போன்ற கவிதைகள் திரும்பத்திரும்ப அந்த நாட்களில் வாசிக்கப்பட்டவை. ஏறக்குறைய மனப்பாடம் என்ற அளவுக்குப் பல தடவைகள். அதிலும்—

*''எங்கள் இமைகள் கவிந்துள்ளன.*
*எங்கள் உதடுகள் அண்டியுள்ளன.*
*எங்கள் பற்களும் கண்டிப்போய் உள்ளன.*
*நாங்கள் குனிந்தே நடந்து செல்கிறோம்.*

*எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக.*
*எங்களை நீங்கள் வண்டியிற் பூட்டுக.*
*எங்கள் முதுகில் கசையால் அடிக்குக.*
*எங்கள் முதுகுத்தோல் பியந்தூந்து போகட்டும்.*

*தாழ்ந்த புருவங்கள் ஒருநாள் நிமிரும்.*
*கவிந்த இமைகள் ஒருநாள் உயரும்.*
*இறுகிய உதடுகள் ஒருநாள் துடிதுடிக்கும்.*
*கண்டிய பற்கள் ஒருநாள் நறநறக்கும்.*

*அதுவரை நீங்கள் எங்களை ஆள்க.*
*அதுவரை உங்கள் வல்லபம் ஓங்குக .... ''*

... என்ற வரிகள் தொடர்ச்சியாகப் பல இடங்களிலும் பலராலும் எடுத்தாளப்பட்டதால் அந்த வரிகள் நல்ல மனப்பாடம். இந்த வரிகளை மணிரத்தினம் கூட தன்னுடைய ''கன்னத்தில் முத்தமிட்டால்'' என்ற படத்தில் எடுத்தாண்டிருந்தார். உக்கிரம் தொனிக்கும் குரலில் ஒலிக்கும் இந்த கவிதை வரிகளுக்கேற்ற காட்சி அமையவில்லை என்ற குறை இன்றும் இருக்கிறது. சசிக்கு

இந்தக் கவிதைகள் படத்திற் பயன்படுத்தப் பட்ட பின்னரே தெரியும் என்று ஒரு தடவை சொன்னார்.

''சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைகள் முக்கியமானவை. ஈழக்கவிதைகளில் அவை ஒரு தனியான அடையாளத்துக்கும் வகைக்கும் உரியவை'' என்று யேசுராசா அடிக்கடி சொல்வார். ஈழக்கவிதைகளைப் பற்றி அல்லது தமிழ்க் கவிதைகளைப் பற்றிப் பேச்சு வரும்போது சசியின் கவிதைகளைப் பற்றிப் பேசாமல் யேசுராசா அந்த உரையாடலை நிறைவு செய்யவே மாட்டார்.

'நீர் வளையங்கள்' என்ற அவருடைய கவிதைத் தொகுதியைத் தந்தது கூட யேசுராசாதான். ''மிக முக்கியமான கவிதை நூல்'' என்று சொல்லி தந்திருந்தார். சசியைப் பற்றிய விமர்சனங்களும் யேசுராசாவிற்கு இருந்தன. யேசுராசா சொன்னதையும் விட ''நீர் வளையங்கள்'' முக்கியமான கவிதைத் தொகுதியாகவே இருந்தது. பின்னாட்களில் சண்முகம் சிவலிங்கத்தையும் அவருடைய கவிதைகளையும் பலரும் தங்களின் கவனப்பரப்பில் வைத்து சிறப்படையாளப்படுத்தி வந்தனர்.

இதற்கு பல காரணங்கள் இருந்தன. அதில் முக்கியமானவை, சசியின் கவிதைகள் பிற ஈழக் கவிஞர்கள், தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளில் இருந்து தனித்து வேறுபட்ட நிலையில் தனி அடையாளத்தைக் கொண்டிருப்பதுடன், மரபார்ந்த முறையின் சாயலில் நவீன வெளிப்பாட்டு முறையைக் கொண்டவையாகவும்

அவை இருந்தமையே. கூடவே சசியின் வாழ்க்கை மற்றும் சிந்தனைப் போக்கின் அடையாளத்தை அவை அடிப்படையாகக் கொண்டிருந்தமையுமாகும். இதை அவருடைய "நீர் வளையங்கள்" தொகுதியின் முன்னுரையில் அவருடைய நெருங்கிய சகாவும் – சக பயணியுமாகிய எம்.ஏ.நுஃமான் குறிப்பிட்டுள்ளார். சசியையும் அவருடைய கவிதைகளையும் மிக நுட்பமாக வாசகருக்கு இடையூறும் திசைமாற்றலும் இல்லாத வகையில் வெளிப்படுத்தும் முன்னுரை அது.

இன்னொரு காரணம் சசி என்றும் எதற்கும் தயங்காமல், மற்றவர்கள் கூச்சப்படும் பொருட்பரப்பில் இளமை குன்றாமல் எழுதி வந்தமை. முக்கியமாகப் பால்நிலை மற்றும் பாலியல் தொடர்பான விசயங்களில் அவர் பல சிறுகதைகளை எழுதினார். ஆனால் அவை விரச நோக்கத்துக்காக எழுதப்பட்டவையல்ல. வாழ்வின் அடிப்படைகளை நோக்கிய பார்வையும் பயணமுமே சசியின் எழுத்துலகம் என்பதால் அதை மையப்படுத்தியே அவர் எழுதினார். அதைச் சாராம்சப்படுத்தியே அவர் இயங்கினார்.

சசியின் படைப்பியக்கத்திலும் வாழ்வியக்கத்திலும் கூடுதற் பங்கேற்பாளராக இருந்தவர் கலாநிதி எம்.ஏ.நுஃமான். இது சசிக்கு இன்னும் அதிக வளத்தையும் பலத்தையும் வாய்ப்புகளையும் கொடுத்தது. பின்னாட்களில் சற்று விலகல்கள் இருந்தபோதும் அடியோட்டமாக இருந்த நெருக்கங்கள் குறைந்ததில்லை என்பது என்னுடைய அவதானிப்பு. நுஃமானை விலக்கிவிட்டு சசியைப் பற்றிச் சிந்திக்க முடியாது. அல்லது சசியை விலக்கி விட்டு நாம் நுஃமானைப் பற்றி

எண்ண முடியாது என்ற அளவுக்கான நட்பும் நெருக்கமும் உறவும் பங்கேற்பும் செயற்பாடுகளும் இருவருக்குமிடையில். பின்னாட்களில் எம்.ஐ.றவுப் சசியுடன் நெருக்கமாக இருந்தார் என்று சொல்லப்படுகிறது.

சண்முகம் சிவலிங்கத்தைப் பற்றி அதிகமாகச் சொன்னவர் சு.மகேந்திரன். பல சுவாரஷ்யமான கதைகள், சுவாரஷ்யமான நிகழ்ச்சிகள். எளிதில் மறக்க முடியாதவை அவை. மகேந்திரனுக்கூடாக ஒரு வேறுபட்ட – வித்தியாசமான சித்திரம் சசியைப் பற்றி அப்போது உருவாகியிருந்தது.

மகேந்திரன் கல்முனையிலும் அக்கரைப்பற்றிலும் படிப்பித்த காலத்தில் சண்முகம் சிவலிங்கத்துடன் உறவாகியிருந்தார். அந்த உறவின் தொடக்கத்துக்குக் காரணம் உமா வரதராஜன் என்று மகேந்திரன் சொன்னதாக நினைவு. ஒரு சமயம் இருவரும் ஒரே கல்லூரியிற் படிப்பித்திருக்கிறார்கள். மகேந்திரன் தங்கிய விடுதியில் சசியும் சில நாட்களில் தங்கியிருக்கிறார். சசி தன் இஸ்ரப்படி வாழும் இயல்புள்ள ஒருவர், ஒரு தாராளி, கட்டற்ற—தாராள சுதந்திரத்தன்மை வாய்ந்த வாழ்க்கை அவருடையது என்பது மகேந்திரனின் அனுபவமும் அபிப்பிராயமும். இதைப் பின்னாளில் வேறு பலரும் சொன்னார்கள்.

வீட்டில் ஏதாவது தகராறு என்றால் அல்லது வீட்டில் இருப்புக் கொள்ள முடியாத உணர்வு அவருக்கு ஏற்பட்டிருந்தால், இரவு எந்த வேளையிலும் – இரவு 12

மணிக்கோ 2 மணிக்கோ கூட வந்து கதவைத் தட்டுவாராம். அந்த நேரத்தில் வீட்டை விட்டு வெளியேறலாமா அல்லது அந்த நேரத்திற் போய் யாரையாவது எழுப்பலாமா, எழுப்பி அவர்களுடன் தங்கக் கேட்கலாமா அல்லது அவர்களைக் கொண்டே தனக்கான உதவிகளைச் செய்விக்கலாமா, அது அவர்களுக்குச் சிரமத்தை அளிக்குமா என்றெல்லாம் அவர் யோசிப்பதில்லை. இதைக்குறித்து அவர் எதற்கும் தயங்குவதுமில்லை.

அவரைப் பொறுத்தவரை தன்னுடைய நெருக்கடிகளிலிருந்து அவர் விலக்கிக் கொள்வதற்கே அதிகமும் அந்தக் கணங்களில் விரும்பியிருக்கிறார். அது அவருக்குத் தவிர்க்க முடியாதது. இதேவேளை மற்றவர்களுக்கும் தனக்கும் இடையில் அவர் எந்த விதமான திரைகளையும் ஆடவிடவில்லை. வெளிப்படையாக செயற்பட்டு – அந்த வெளிப்படையில் தன்னியல்பை முன்னிறுத்தி, அவர் கொண்டிருந்த உறவை நம்பி அல்லது அதை வலியுறுத்தி அவர் வாழ்ந்தார். ஆகவே அவர் நண்பர்களிடத்தில் அதிக உரிமையைக் கொண்டாடினார். சிலவேளை இந்த அதீத உறவினாலும் உரிமை பாராட்டலினாலும் சில நண்பர்கள் அவரையிட்டுக் குறைபட்டதுண்டு. ஆனாலும் யாரும் அவரைத் தூர விலக்கி வைக்கவில்லை. ஏனெனில் அவர் அடிப்படையில் மனிதாபிமானத்தையும் நல்லியல்புகளையும் பேணினார். அதற்கு மாறாக அவர் விலகிச் செல்லவில்லை. ஆகவே என்னதானிருந்தாலும் சசியுடன் அவர்களால் தங்கள் நெருக்கத்தைக் குறைத்துக் கொள்ள முடியவேயில்லை.

''சண்முகம் சிவலிங்கம் கல்முனையில் கொடிகட்டிப் பறந்த ஒரு ஆள். அவரை எதிர்த்து ஒரு பயல் மறுபேச்சுப் பேசமாட்டான். அவரிட்டப் படிச்சவனும் கதை கேட்டவனுந்தான் கல்முனையில் அநேகம்பேர்'' என்று ஒரு தடவை நற்பிட்டிமுனை பளீல் என்னிடம் சொன்னார்.

சண்முகம் சிவலிங்கத்திடம் படிக்காதவர்களே கல்முனையில் இல்லை என்ற அளவுக்கு ஒரு காலத்தில் நிலைமை இருந்தது என்று பெரும்பாலான கல்முனைவாசிகள் சொல்வார்கள். தமிழர்கள், முஸ்லிம்கள் என்று இரண்டு தரப்பிலும் ஏராளமானவர்கள் அவரிடம் படித்திருந்தார்கள். அல்லது பழகியிருந்தார்கள். பின்னர் கிழக்கில் இலக்கியத்தில் ஈடுபட்டவர்களிற் பெரும்பாலானவர்கள் சண்முகம் சிவலிங்கத்தை ஆதர்சமாகக் கொண்டிருக்கிறார்கள்.

அண்மையில் றஷ்மியின் கவிதைகளைப் பற்றி நான் எழுதிய கட்டுரையைக் குறித்து அவருடன் கதைத்தபோது றஷ்மி சொன்னார். ''ஒரு காலத்தில் சண்முகம் சிவலிங்கத்தை மிகத் தீவிரமாக வாசித்திருக்கிறேன். சில கவிதைகள் மனப்பாடமாகும் அளவுக்குத் திரும்பத்திரும்ப வாசித்திருக்கிறேன்'' என்று. இப்படித்தான் பெரும்பாலான கிழக்குப் படைப்பாளிகள் சசியுடன் இருந்திருக்கிறார்கள். அவரைப் படித்தும் பழகியும் அவருடன் வாழ்ந்தும்.

இந்த மாதிரியான காரணங்களினால், சண்முகம் சிவலிங்கம் தமிழர்களாலும் விரும்பப்பட்டார், மதிக்கப்பட்டார். முஸ்லிம்களாலும் விரும்பப்பட்டார்.

மதிக்கப்பட்டார். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மனிதராக – ஒரு கவிஞராக அவர் இருந்தார்.

இவ்வளவுக்கும் சசியின் ஒரு மகன் 1985 காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினராக இருந்து இறந்தவர். இந்த இழப்பையிட்டுச் சசி அடைந்த மனப் பாதிப்பு மிகப் பெரிது. ஆனால், இந்த நிகழ்ச்சியையிட்டு சசியை எல்லோரும் நெருக்கத்தோடும் அனுதாபத்தோடும் அணுகினார்களே தவிர, மகனின் அடையாளத்தை வைத்து யாரும் பழகவில்லை. பின்னாட்களில் துயரந்தோய்ந்த விதமாக கிழக்கிலும் உருவாகிய தமிழ் – முஸ்லிம் இடைவெளி நிலைகளில்கூட சசி நெருக்கடியற்றே இருந்தார். எந்தக் கொந்தளிப்பான நிலைமையிலும் அவர் இரண்டு சமூகங்களிடையேயும் ஊடாடக்கூடிய ஒருவராக—ஊடாடும் ஒருவராக இருந்தார் என்று அவரை எப்போதும் பெருமையோடு நினைவு கூர்வர் பல நண்பர்கள்.

இதெல்லாம் அவருக்கு அந்தப் பகுதியில் மிகப் பெரிய செல்வாக்கும் மரியாதையும் தந்திருந்தது. இன்றைக்கும் இந்த மதிப்புண்டு. ஆனால், சசி இதையெல்லாம் முதலீடாக்கித் தன்னுடைய காரியங்களைப் பார்த்துத் தன்னை முன்னோக்கித் தள்ளுவதற்குப் பயன்படுத்தவில்லை. பதிலாக அவர் இறுதிவரையில் ஒரு பழைய சைக்கிளிலேயே கல்முனையின் தெருக்களில் அமைதியாகத் திரிந்திருக்கிறார். அவருடைய மறைவுக்குப் பிறகு எழுதப்பட்ட இரண்டு குறிப்புகள் இதைச் சான்றாக்குகின்றன.

**சசிக்கு**

சீரற்றுக் குலைந்த இதயத்தின் பெருந்துடிப்பு
மூன்றாம் யாமத்தில் என்னை எழுப்பியபோது
முகமும் நினைவும் வியர்வையில் நனைய
தலைமாட்டில் எப்போதும் இருக்கும்
நைட்ரோகிளிசரீனைப் பற்றுகிறேன்
அது சிவப்பு நிறம்
சசி,
உன்னுடையதும் சிவப்பு நிறமா?

நேற்றிரவு
தூரத்தில் இரைகிற கடல் இல்லை
வியப்பு இல்லை
பரல் கற்களின் மீது சொற்களற்றுப் புரண்டு செல்லும்
சிற்றாறு இல்லை

கலவி முடிந்த பின்
தூக்கத்தில் துவண்டிருக்கும் அவள் மீது
நீ வீசியெறிந்த சாரம்
கவிதைக்குள் ஒளிந்து விட்டது
மகனின் இருமல் நின்றுபோய்
நீண்ட நாளாகி விட்டது
அவனைக் கொண்டுபோன காற்றும் நெருப்பும்

உன் வாயிலுக்கு வராது.

படையினர் மட்டுமே கேலிச் சிரிப்புடன்

அலையும் நடு இரவில்

மெல்லிய சாராய மணத்துடன்

தெருவில் இருந்து ஒழுங்கைக்குள் திரும்புகிறது

ஒரு சைக்கிள்

அதில் நீ இல்லை.

- சேரன், *20.04.2012*

**தெருவிளக்கின் மங்கலான வெளிச்சத்தில்**

இரவு எட்டு மணியளவில்

பழைய ஒரு சைக்கிளில் இருக்கும் உடலொன்று

தீவிரமான சிந்தனையுடன் என் வீட்டை, என்னைக் கடந்து செல்லும்.

அதன் 'உயிர்' வாசம் கழித்ததெல்லாம் முற்று முழுக்க கவிதையின் அடர் காட்டில்,

இனி எங்கே காண்பேன் அதை?

- உமா வரதராஜன்

நன்றி— பொங்கு தமிழ் இணையம்

□

# கிளர்த்தும் நினைவுகள்

• சு. குணேஸ்வரன்(துவாரகன்)

சண்முகம் சிவலிங்கம் என்றாலே 'ஆக்காண்டிப் பாடல்' தான் ஞாபகம் வரும். 'ஆக்காண்டி' என்ற நாட்டார் பாடலில் தனது குஞ்சுகளை ஒவ்வொன்றாக இழந்த தாய்ப்பறவையின் சோகம் காற்றில் இழைந்து வருவதை எல்லோரும் அறிவர். அதே ஆக்காண்டிப் பாடலை அடிப்படையாக வைத்து சண்முகம் சிவலிங்கம் எழுதிய பாடலும் எங்கள் வாழ்க்கையைப் பாடும் பாடலாக அமைந்திருந்தது.

*1988* இல் வெளிவந்த 'நீர்வளையங்கள்' என்ற தொகுப்பினூடாக இலக்கிய உலகில் நிலையான இடத்தைப் பெற்றுவிட்டார். அதன்பிறகு *2010*இல் தான் அவருடைய இரண்டாவது தொகுதியான 'சிதைந்துபோன தேசமும் தூர்ந்து போன மனக்குகையும்' வெளிவந்தது. இந்த இரண்டாவது தொகுப்பு ஒரு காவியம்போலவே தொகுக்கப்பட்டுள்ளதை படிப்பவர் உணர்வர். அண்மைக்காலங்களில் அவர் எழுதிய கட்டுரைகள் முக்கியமானவை. விமர்சனத்தின் புதிய போக்குகளை அவை இனங்காட்டத்தக்கவை. கவிதைகளோடு சிறுகதை, நாவல், மொழிபெயர்ப்பு, விமர்சனம் ஆகியவற்றிலும் தன் ஆளுமையைச் செலுத்தி வந்துள்ளார். ஆனால் கவிதையே அவரை ஒரு அழியாக் கவிஞனாக நிலைநிறுத்தியுள்ளது.

கவிஞர் சண்முகம் சிவலிங்கம் பற்றி மூன்று ஞாபகங்கள் என்னிடம் உள்ளன.

அன்னாரை ஒரே ஒரு முறைதான் நேரில் காணக்கிடைத்தது. அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த 'தூண்டி' என்ற இலக்கிய இதழ் *2003* இல் யாழ்

பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் 3 நாள் ஆய்வரங்கை ஏற்பாடு செய்திருந்தது. அதில் கவிதை தொடர்பான அரங்கில் சண்முகம் சிவலிங்கம் வ.ஐ.ச.ஜெயபாலன், ஓட்டமாவடி அறபாத், மு.பொ. ஆகியோரின் கவிதைகள் பற்றி உரையாற்றினார். அவரை நேரில் கண்டிருக்கிறேன். ஆனால் உரை கேட்கக் கிடைக்கவில்லை.


மற்றும் ஒரு சந்தர்ப்பம் நான் அப்போது யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்தபோது (1999 ற்கு முன்னர்) 'நாட்டார் இசைமாலை' என்ற நிகழ்வினை யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகத்தினூடாக பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரின் வழிகாட்டலில் நண்பர்களுடன் பயின்று அதனை பல இடங்களில் நிகழ்த்தினோம். முக்கியமாக ஆக்காண்டிப்பாடல், பண்டிப்பள்ளுப்பாடல், முசுறுப்பாடல், தாலாட்டு முதல் வேடிக்கைப்பாடல் வரையான பலவகையான நாட்டார்பாடல்கள் அங்கு நிகழ்த்தப்பட்டன. ஆனால் ஆக்காண்டிப்பாடலை தனிக்குரலில் தற்போது யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருக்கும் நண்பி சுகன்யா தனியாக முதலில் பாட, நாங்கள் கோரஷாக பாடுவோம். அப்போது அந்தப் பாடலில் இழைந்து வரும் சோகம் வார்த்தைகளால் சொல்ல முடியாது. அந்த நேரங்களில் எல்லாம் சண்முகம் சிவலிங்கம் எழுதிய ஆக்காண்டிப்பாடல் பற்றியும் அறிந்திருந்தோம். அதன்பிறகு நான் பணியாற்றிய பாடசாலைகளில் வரும் கலை நிகழ்வுகளில் அந்தப்பாடலை மாணவர்களுக்கு பழக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தவறாமல் கவிஞர் சண்முகம் சிவலிங்கத்தின் பெயரும் எப்படியோ வந்துவிடும்.

இன்னொரு சந்தர்ப்பம் 2008 இல் எனது 'மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள்' தொகுப்பு வெளிவர முன்னர் அ.யேசுராசா அவர்களிடம் கவிதைகளில் இருக்கும் முரண்கள், தவறுகள், திருத்தங்கள் தொடர்பாக பேசிக்கொண்டிருந்தபோது 'முதுகுமுறிய பொதி சுமக்கும் ஒட்டகங்கள்' என்ற எனது கவிதையை சிலாகித்து சண்முகம் சிவலிங்கத்தின் கவிதை ஒன்றுடன் தொடர்புபடுத்தி உரையாடினார். அது எனக்கும் உற்சாகத்தைத் தருவதாக அமைந்திருந்தது. பல்கலைக்கழகத்தில் கற்கைநெறிக்காக நாங்கள் கவிதைகளை அறிந்து கொண்ட சந்தர்ப்பங்கள், மேலும் ஈடுபாட்டோடு பல கவிஞர்களைத் தேடிப்படிக்க வைத்தன. அப்போது மீண்டும் மீண்டும் வாசிக்க வேண்டியவராக சண்முகம் சிவலிங்கம் எங்கள் முன் இருந்தார்.

இந்த மூன்று ஞாபகங்களும் தவிர்க்க முடியாமல் சண்முகம் சிவலிங்கம் அவர்களின் மறைவின்போது முன்னால் வந்துவிடுகின்றன. ஈழத்துக் கவிதை வரலாற்றில் தவிர்க்கமுடியாத ஆளுமையாக என்றும் நிலைத்திருக்கும் பெருமைக்குரியவர் கவிஞர் சண்முகம் சிவலிங்கம்.

நன்றி— பொங்கு தமிழ் இணையம்

□



# அழைப்பு

**சண்முகம் சிவலிங்கம்**

தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்
பாதி இரவினிலும்
பட்டப்பகலின் அனலினிலும்
மோதித் தெறித்து
மெல்ல முனகி அழுவதுபோல்
தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்

பக்கத்தில் ஒரு கோயில்
அதன் பக்கத்தில் ஒரு அரசு-
சொர்க்கத்தின் வழிபோல
இலை சோவெனக் கலகலக்கும்.
சற்று அப்பால் ஆலைகளில்
சருகுதிரும்.
இடைவெளியில்
திக்கற்ற கன்றொன்று
தாயைத் தேடிவரும் – அப்போதும்,
தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்.

கடலருகே நிற்பேன்,
ஊரைக் காவலிடும் தென்னைகளில்
படரும் இருள் தூரத்தில்
அஞ்சிப் பறக்கும் சில பறவை
எங்கோ தூரத்தில் கேட்டது போல்
குரலும் அது கேட்கும்
என் குழந்தை நினைவெல்லாம்
தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்.

*1966*

*('நீர் வளையங்கள்' கவிதைத்தொகுப்பு - சசியின் முதல் பிரசுரிப்பு கவிதை )*



# ஆக்காண்டி

## சண்முகம் சிவலிங்கம்

ஆக்காண்டி, ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்-
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்.
வைத்ததுவோ அஞ்சு முட்டை

பொரித்ததுவோ நாலு குஞ்சு
நாலு குஞ்சுக் கிரை தேடி
நாலுமலை சுற்றி வந்தேன்,
மூன்று குஞ்சுக் கிரைதேடி
மூவுலகம் சுற்றி வந்தேன்,

ஆக்காண்டி, ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்?
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்.

குஞ்சு பசியோடு

கூட்டில் கிடந்த தென்று

இன்னும் இரைதேடி

ஏழுலகும் சுற்றி வந்தேன்.

கடலை இறைத்துக்

கடல் மடியை முத்தமிட்டேன்.

வயலை உழுது

வயல் மடியை முத்தமிட்டேன்.

கடலிலே கண்டதெல்லாம்

கைக்கு வரவில்லை.

வயலிலே கண்டதெல்லாம்

மடிக்கு வரவில்லை,

கண்ணீர் உகுத்தேன்

கடல் உப்பாய் மாறியதே,

விம்மி அழுதேன்

மலைகள் வெடித்தனவே

ஆக்காண்டி ஆக்காண்டி

எங்கெங்கே முட்டை வைத்தாய்

கல்லைக் குடைந்து

கடலோரம் முட்டை வைத்தேன்.

வண்டிகள் ஓட்டி

மனிதர்க் குழைத்து வந்தேன்

கையால் பிடித்துக்

கரைவலையை நானிழுத்தேன்

கொல்லன் உலையைக்

கொளுத்தி இரும்படித்தேன்

நெய்யும் தறியிலே

நின்று சமர் செய்தேன்

சீலை கழுவி

சிகையும் அலங்கரித்தேன்

வீதி சமைத்தேன்

விண்வெளியில் செல்லுதற்குப்

பாதை சமைக்கும்

பணியும் பல புரிந்தேன்.

ஆனாலும் குஞ்சுக்கு

அரை வயிறு போதவில்லை.

காதல் உருகக்

கதறி அழுது நின்றேன்.

கதறி அழுகையிலே

கடல் இரத்தம் ஆயினதே.

விம்மி அழுகையிலே

வீடெல்லாம் பற்றியதே.

கடல் இரத்தம் ஆகுமென்று

கதறி அழவில்லை

வீடுகள் பற்றுமென்று

விம்மி அழவில்லை.

ஆக்காண்டி, ஆக்காண்டி

எங்கெங்கே முட்டை வைத்தாய்

கல்லைக் குடைந்து

கடலோரம் முட்டை வைத்தேன்

குஞ்சு வளர்ந்தும்

குடல் சுருங்கி நின்றார்கள்

பசியைத் தணிக்கப்

பல கதைகள் சொல்லி வந்தேன்

கடலை இறைத்துக்

களைத்த கதை சொல்லி வந்தேன்.

வயலை உழுது

மடிந்த கதை சொல்லி வந்தேன்.

கொல்லன் உலையும்
கொடுந் தொழிற் சாலையதும்
எல்லா இடமும்
இளைத்த கதை சொல்லி வந்தேன்.

சொல்லி முடிவதற்குள்
துடித்தே எழுந்து விட்டார் -
பொல்லாத கோபங்கள்
பொங்கி வரப் பேசுகின்றார்

''கடலும் நமதே அன்னை
கழனியும் நமதே அன்னை
கொல்லன் உலையும்
கொடுந் தொழிற்சாலையதும்
எல்லாம் நமதே'' என்றார்
எழுந்து தடி எடுத்தார்
கத்தி எடுத்தார்
கடப்பாரையும் எடுத்தார்
யுத்தம் எனச் சென்றார்
யுகம் மாறும் என்றுரைத்தார்.
எங்கும் புயலும்
எரிமலையும் பொங்கி வரச்
சென்றவரைக் காணேன்
செத்து மடிந்தாரோ?

வைத்ததுவோ அஞ்சு முட்டை
பொரித்ததுவோ நாலு குஞ்சு

நாலு குஞ்சும் போர் புரிய
நடந்து விட்டார் என்ன செய்வேன்
ஆனவரைக்கும்,
அந்த மலைக் கப்பாலே
போனவரைக் காணேன்,
போனவரைக் காண்கிலேன்

ஆக்காண்டி, ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்

*1968*

*('நீர் வளையங்கள்' கவிதைத்தொகுப்பு)*

# இருப்பியல்வாதம் பற்றிய ஒரு சிறு விளக்கம்

• சண்முகம் சிவலிங்கம்

## முகவுரை

இன்றையக் காலகட்டத்தில், இலக்கியப் பரிச்சயம் உள்ள ஏறக்குறைய எல்லோருமே *Existentialism*/ இருப்பியல்வாதம் எனச் சொல்லப்படுவதைப் பற்றிக் கேட்டிருப்போம். எம்மில் பலர், இருப்பியல்வாதம் சார்பான கட்டுரைகளையோ, நூல்களையோ ஆங்கிலத்தில் படித்திருக்கவும் கூடும். தமிழிலும் எஸ்.வி.ராஜதுரை இதுபற்றி ஒரு நூல் எழுதியுள்ளதாகக் கேள்வி. படிக்கும் போது இருப்பியல்வாதம் புரிகிறது போலவும் தோன்றும் ஆனால் பின்னர் யாராவது ஒருவர் அல்லது நாங்களே இருப்பியல்வாதம் என்றால் என்ன என்று எம்மைக் கேட்டால் ஒழுங்காகச் சொல்லத் தெரியாது திண்டாடுவோம். இதற்கு ஒரு காரணம், இருப்பியல்வாதம் பற்றி எமக்குக் கிடைக்கும் நூல்கள், அதனை எமக்கு, எமது தரத்தில் அறிமுகம் செய்யக்கூடியனவாக அல்லாமல், அந்தத் தத்துவத்தைப் பல கோணங்களிலிருந்தும் விமர்சனம் செய்வனவாகவும், அவைகளை ஆதரிப்பனவாகவும், கண்டிப்பனவாகவும், வளர்ப்பனவாகவும், பலவிதமான கருத்துப் பின்னல்களையும், உதாவுதல்களையும் உடையனவாகவும் இருத்தலேயாகும். இந்தப் பின்னல்களிலிருந்து நீங்கி இருப்பியல்வாதம் பற்றி திட்டவட்டமாக முழுமையாக ஆனால் சுருக்கமாகச் சொல்லவும் நினைக்கவும் தக்க ஒரு வடிவத்தில் அதனைப் பரிச்சயப்படுத்திக் கொள்ளவும் வேண்டும் என்று நான் நினைத்தேன். அதுபற்றி ஏற்கனவே

எனக்குத் தெரிந்த சில அம்சங்களுடன், அதன் தொடர்வாதத்தை அல்லது கண்ணிகளை இணைத்து அறிய முயன்றேன். அதனை எழுத்தில் கொணர்ந்தால்தான், அதுபற்றித் திடமாக இருக்க முடியும் என்றும் பட்டது. அத்தகைய ஒரு சிறிய குறிப்பைத்தான் நீங்கள் கீழே காண்கிறீர்கள். அவை பற்றிய நுட்பமான, உயிர்ப்பான உள்நுழைவுகளை நான் வேண்டுமென்றே தவிர்த்துள்ளேன். இருப்பியல்வாதம் பற்றிய ஒரு சட்டகத்தை, எலும்புக்கூட்டை எனக்கு நானே ஆக்கிக் கொண்டு, பின்னர் அதற்குச் சதையும் குருதியும் ஊட்டி, எனது அறிவை விசாலித்துக் கொள்ளலாம் என்பது நோக்கம்.

என்னைப் போன்றே இருப்பியல்வாதத்தை அறிவதில் பலருக்குச் சில தடங்கல்கள் ஏற்பட்டிருக்கக் கூடுமென்பதால் எனது முயற்சியை அனைவருக்கும் பந்தி வைக்கலாம் என எண்ணினேன். இது தொடர்பான இலக்கியப் பிரயோகம் பற்றிச் சிந்தித்தபோது, எனது சில கதைகளையே உதாரணமாகச் சுட்டிக் காட்ட நேர்ந்த குற்றத்திற்குள்ளானேன். எனினும் இருப்பியல்வாதம் பற்றி எமது இலக்கியவாதிகள் அறியவேண்டும் என்ற எனது கோரிக்கை சுத்தமானது என நம்புகிறேன்.

***EXISTENTIALISM***

1. *Existentialism* என்பதைப் புரிந்து கொள்ள முதற்படியாக இரண்டு வார்த்தைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒன்று *Existence* மற்றது *Essence.* தமிழில் இவைகளுக்கு நேரான சொற்களைக் காண்பது அரிதல்ல. *Essence* என்பதற்குச் சாரம் என்று ஒரு சொல்லைத் தரக்கூடும். அது போல் *Existence* என்பதற்கு இருப்பு எனச் சொல்லக்கூடும். எனினும் தமிழில் இச் சொற்களுக்கு உள்ள பொருள், அதன் சாதாரண புளக்கத்தில் *Existentialism* சார்பான

பொருளைத் தருகின்றதா என்பது சந்தேகம், *Existentialism* சார்பான பொருளை இனித்தான் இச் சொற்கள் ஏற்க வேண்டும்.

*Existence, Essence* என்பன ஒரு பொருளின் இரு பண்புப் பரப்புகளைக் குறிக்கின்றன எனக் கூறலாம். ஒன்று அப்பொருளின் தனித்துவமான, அப்பொருளை எந்த ஒரு பொருளிலிருந்தும் பிரித்துக் காட்டுகின்ற, அப்பொருளுக்கென்று அங்கலட்சணத்தைக் கொடுக்கின்ற பண்பு. இதுவே அப்பொருளின் Existence அல்லது இருப்பு எனப்படுவது. மற்றது அப்பொருளுக்கும் அது போன்ற பொருளுக்குமுள்ள பொதுப் பண்புகள், பொதுப் பண்பின் அடிப்படையில் இப்பொருள் ஒரு வகையாக ஆகிறதே ஒழிய ஒரு தனிப்பொருள் ஆவதில்லை. பொதுப் பண்புகளின் அடிப்படையில் அதனை அடையாளம் காண்பது அதன் இருத்தலை மறப்பதாகும் அல்லது மறுத்தலாகும். ஒரு பொருளின் தனிப் பண்பை, அல்லது இருத்தலை மூடுகின்ற அதன் பொதுப் பண்புகளே Essence அல்லது சாரம் எனப்படுவது.

ஓர் உதாரணத்தின் மூலமாக இதனை விளக்கலாம். எனது ஜன்னலின் வெளியே இதோ ஒரு முள்முருக்க மரத்தைக் காண்கிறேன். இதே போல முள்முருக்க மரங்கள் அடுத்த வீட்டு வேலிகளில் உண்டு. எங்கள் வீட்டின் பின் வேலிகளில் கூட இது போன்ற மரங்கள் உண்டு. ஒரே பார்வையில் இவையெல்லாம் முள்முருக்க மரங்களே. முள்ளையுடைய தண்டும், இலையின் வடிவமும் . . . . பூவின் நிறம் வடிவம், முதலியன இவைகளை ஒரு வகையாக ஆக்குகின்றன. இது முள்முருக்கின் *Essence*. ஆனால் இதோ ஜன்னலுக்கு வெளியே தெரிகிறதே இந்த முள்முருக்கு –

இதற்கு முள் உள்ள தண்டும், குறித்த வடிவமுள்ள இலை முதலியன இருந்தாலும் இது தண்டின் வளைவு நெளிவில், இலையின் பருமனில், எண்ணிக்கையில், அடர்த்தியில், உயரத்தில், தனக்கே உரித்தான தன்மைகளைக் கொண்டுள்ளது. தவிர இதனுடைய இந்த தனித்தன்மைகள், இதற்கேற்பட்ட குறித்த அகப் புறச் சூழலால் ஏற்பட்டது. இதனைப் போல் இன்னொன்று, இதன் தனித்தன்மைகளில் இராது. இதுவே இதன் *Existence* – இருத்தல் ஆகும். (முள்முருக்கின் இந்த இருத்தல் அல்லது ஒரு கல்லின் இருத்தல் அல்லது விலங்கின் இருத்தல், அல்லது இன்னொரு மனிதனின் இருத்தல், எனது பிரக்ஞையில் *(Consciousness)* தங்கியுள்ளது என்பதும் இருத்தல் பற்றிய இருப்பியல்வாத நிலை நோக்கமாகும் – இது பின்னர் விளங்கிக் கொள்ளக்கூடியது.)

2. ஆகவே ஒவ்வொரு பொருளுக்கும் (மனிதனின் பிரஞ்ஞைவழி நோக்கில்) ஓர் இருத்தலும் உண்டு ஒரு *Essence* உம் உண்டு. ஒரு பொருளின் இருத்தலுக்கும் அதன் *Essence*க்கும் என்ன சம்மந்தம், என்பதே அறிந்து கொள்ள வேண்டிய அடுத்த விடயமாகும். சுருக்கமாகச் சொன்னால், இருத்தல் முந்தியதா *Essence* முந்தியதா என்று ஒரு கேள்வி உள்ளது. *Essence* முந்தியது என்பது பிளேற்றோ முதல் ஹெகல் வரையிலான மெஞ்ஞானிகளின் முடிவு. *Essence* இலிருந்தே இருத்தல் விகர்சிக்கிறது என்பது இவர்களது உட்கிடக்கை. பொது இயல்புகள் உண்டெனின் அப்பொதுமைக்கு அமையவே தனியன்கள் தோற்றம் கொள்கின்றன. ஆகவே தனியன்களின் தோற்றத்திற்கு முந்தியே அவற்றிற்கான பொதுமை உள்ளது என்பது இதன் பொருள். இதற்கு மாறாக, இப்படி முந்தியது என இருப்பியல்வாதிகள் கூறுகின்றனர்.

இருப்பிலிருந்தே *Essence* பரிமளிக்கிறது என இவர்கள் சாதிக்கின்றார்கள். தனி இயல்புகளின் அல்லது தனியன்களின் தோற்றத்திலிருந்துதான் அவற்றிற்கிடையிலான பொதுத் தன்மைகள் காணப்பட முடியும் என இவர்கள் விளக்குகின்றார்கள்.

3. அடுத்ததாக இருத்தலின் அகவயத் தன்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். வழக்கமான கருத்துப்படி நிசமாக, எது உள்ளதோ அது இருத்தல் உடையதாகின்றது. அதாவது *Essence* என்ற கருத்து நிலையிலிருந்து இருத்தலும் உருப்பெற்றது, இருத்தல் உடையது என, விளங்கிக் கொள்ளப்பட்டது. இருப்பியல்வாத நோக்கில் இருத்தல் என்பது இது அல்ல.

இருப்பியல்வாதத்தின்படி, இருத்தலென்பது இத்தகைய ஒரு நிலை அல்ல. இங்கு இருத்தல் என்பது, மனிதனின் பிரக்ஞைக்கு அப்பாற்பட்டதாக எதுவும் இருக்க முடியாது. இதோ இங்கே நான் இல்லாவிட்டால் இந்த முள்முருக்கிற்கு இருத்தல் இல்லை. அதன் இருத்தல் என்பது, அதுபற்றிய எனது அகக்காட்சியே. இது போலவே, எனது சகாக்கள், ஏனைய மனிதர்களும் எனது பிரக்ஞை நிலைக்கப்பால் இருத்தல் உடையவர்களல்ல. நானே அவர்களுக்கு இருத்தலை அளிக்கிறேன். நான் கூட எனது பிரக்ஞைக்கு அப்பால் எதுவும் இல்லை. எனது பிரக்ஞையினாலேயே எனது இருத்தலைப் பெறுகின்றேன். ஆகவே இருத்தல் என்பது ஒரு இடையறாத செயல் என்பதுடன் ஒவ்வொரு மனிதனின் இருத்தலையும் அவனவனே சிருஷ்டித்துக் கொள்கின்றான்.

ஆகவே மனிதனது இருத்தலுக்குக் காரணமானது அவனது பிரக்ஞை. இந்தப் பிரக்ஞை என்பது என்ன? உயிரியில் ரீதியாய் பிரக்ஞை என்பது புலன் உணர்வுகளின் கூட்டுமொத்தம் என்றோ, மையம் என்றோ, மூளையத்தின் ஓர் ஆற்றல் என்றோ சொல்லக் கூடும். எவ்விதமாயினும் பிரக்ஞை என்பது, மனிதனது அகத்தில் உள்ள ஒரு மூடிய தொகுதி அல்ல. பிரக்ஞை என்று தனிநிலையில், தூய நிலையில் எதுவும் இல்லை. பிரக்ஞை என்பது ஏதோ ஒன்றைச் சார்ந்து நிற்பது. அதாவது பிரக்ஞை என்பது புற உலகைச் சார்ந்து நிற்பது. எனக்கு வெறும் பிரக்ஞை என்பது இல்லை. நான் எப்போதும் ஏதோ ஒன்று பற்றித்தான் பிரக்ஞையுடயவனாய் இருக்க முடியும். அகக் காட்சி *(Perception)* எடமன் ஹஸ்எர்ல் *(Edman Husserl)* இன் சிந்தனையிலேயே, பிரக்ஞையின் இந்தச் சார்புத் தன்மை தெளிவானது. இதன்படி, மனிதனுக்கு இந்தப் புற உலகம், அவனது மனத்திரையில் சதா ஓடிக்கொண்டிருக்கும் விம்பங்களே – அதாவது காட்சி உருக்களே. புற உலகம் எதார்த்தமாக, திட்டமாக, தெளிவாக, சதைப்பிடிப்பாக, பற்றுறுதியாக உள்ளது என்பதை ஹஸ்எர்ல் பலமாகச் சந்தேகித்தார் என்பதில்லை. ஆனால் மனிதனைப் பொறுத்தவரை புற உலகம், அவன் மனத்திரையில் சதா பிரசன்னமாகிக் கொண்டிருக்கும் ஒரு தோற்றப்பாடே. ஹஸ்எர்லின் இந்த தோற்றப்பாட்டியலிலிருந்தே ஹைடெக்கர் *(Helddeger)* பிரக்ஞையைப் பற்றிய ஒரு முடிவுக்கு வந்தார். பிரக்ஞை என்பது, ஏதோ ஒன்றைப் பற்றியதாக இருக்குமெனின், அந்த ஒன்றை நீக்கிவிடின் பிரக்ஞை வெறுமையாகிறது. அதாவது பிரக்ஞை என்பது சூன்யம் என்று அவர் கூறினார். பிரக்ஞை என்பது சூன்யம் என்னும் கருத்தில் எல்லா இருப்பியல்வாதிகளுக்கும் அக்கறை இல்லை. கடவுள் மறுப்புடைய

இருப்பியல்வாதிகள் இதனை வற்புறுத்துகின்றனர். கடவுளை மறுக்காத இருப்பியல்வாதிகளும் உண்டு.

4. மனிதனின் பிரக்ஞையின் சார்பிலேயே இருத்தல் உண்டு என்பதே இருப்பியல்வாதத்தின் அடிநாதமாகத் தெரிகிறது. மனிதனின் பிரக்ஞையின் சார்பிலே அவன் இருத்தலைப் பெறுவதனால், அவனுடைய இருத்தலின் சிருஷ்டி கர்த்தா அவனே என்பது, இருப்பியல்வாதத்தின் அடுத்தபடியாகத் தெரிகிறது. நானே எனது இருத்தலின் நாயகன்; நானே எனது வாழ்க்கைக்குப் பொறுப்பானவன். ஆகவே எனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும், அல்லது அதனைத் தெரிவு செய்து கொள்ளும் உரிமையும், சுதந்திரமும் எனக்கு உண்டு என்பதே இருப்பியல்வாதத்தின் நடைமுறைத் தத்துவமாக உள்ளது. தன்னைத்தானே ஆக்கிக் கொள்ளல், அதற்கான சுயதெரிவு *(Choice)*, அதற்கான சுதந்திரம் ஆகியவற்றை விபரித்தலும், அவற்றிற்காக வாதாடலும், அவற்றின் அடிப்படையில் மனித மனத்தின் உள் இயக்கங்களில் வெளிச்சம் காட்டுவதுமே, இருப்பியல்வாதத்தின் விளக்கங்களாகவும், படைப்புகளாகவும் உள்ளன.

உதாரணமாகத் தன்னைத்தானே ஆக்கிக்கொள்ளல் என்ற இருப்பியல்வாதத்தின் அடி நிலையான விளக்கத்தின்படி, மனிதரின் இரு வகையான இருத்தலை இனம் காட்டுகிறார்கள். எவன் தன்னைப் பிரக்ஞைபூர்வமாக ஒரு நிலைக்கு ஆக்கிக் கொள்கிறானோ, அவனே 'மெய்மையான இருத்தல்' உடையவன் என்றும், மற்றவன் 'போலி இருத்தல்' உடையவன் என்றும் சொல்கிறார்கள். தன் மனதை அல்லது சித்தத்தைச் சாராத வேறொரு காரணியால்

ஏற்படும் எந்த மாற்றமும் மெய்மையான இருத்தலைக் குறிக்காது. தன்னுடைய சுயசித்தத்தால், அதன் முனைவால் ஒருவன் தன்னை ஆக்கிக்கொள்ளும் இருத்தலே நம்பகமான இருத்தல். இவ்வித 'சுயசித்தம்' இருப்பியல்வாதத்தில் மிக அழுத்தம் பெறுகின்றது. விதிப்புகளை *(Determinations)* இருப்பியல்வாதம் உடைப்பதுடன், விதிப்புகளுக்கு உட்பட்ட இயற்கை நிகழ்ச்சிகளையும், இருத்தல் என்ற உன்னத யதார்த்தத்திற்குக் கீழ்ப்பட்டதாகவே அது கருதுகின்றது.

தன்னைத்தானே ஆக்கிக்கொள்ளும் மனிதனுக்குச் சுயதெரிவு இன்றிமையாதது. இந்த தெரிவைச் செய்துகொள்ள மனிதனுக்கு எந்த ஒரு வழிகாட்டியும் இல்லை என்பது, இருப்பியல்வாதத்தின் சிக்கலான, அழுத்தம் மிக்க ஒப்புதலாகும். எந்த வழிகாட்டியும் சாத்தியம் இல்லை. ஏனெனில் வழிகாட்டி போன்ற ஒரு புறத்தூண்டுதலினால் ஒருவனது வாழ்க்கை அமையுமெனின் அவனது இருத்தல் மெய்மையான, ஆட்சியுடைய இருத்தல் அல்ல. (தவிர வழிகாட்டிகள் வாழ்க்கை அனுபவத்தின் சாராம்சங்களாக *Essence* இருப்பதனால், அவை இருத்தலை முன் வைத்துச் சொல்ல முடியாது). ஆகவே தனது இருத்தலில், மனிதன் வழிகாட்டியில்லாத, பிறருடைய ஆலோசனை இல்லாத – இருக்க முடியாத, தர்க்கநியாயம் இல்லாத *(Irrational)* தெரிவுகளையே மேற்கொள்கிறான். யாரேனும் ஒருவன் போதுமான காரணங்களின் அல்லது நியாயங்களின் அடிப்படையில்தான் தனது முடிவுகளை மேற்கொள்கின்றான் என்பதுபோல அவருக்குத் தோன்றினாலும், உண்மையில் அவர் கருதும் காரணங்கள், அவர் ஏற்கனவே காரணமில்லாது மேற்கொண்ட முடிவுக்குக் கற்பிக்கும் காரணங்களும்

நியாயங்களுமாகவே இருக்கும் என இருப்பியல்வாதிகள் திடமாகக் கூறுகின்றனர். ஆகவேதான் இருத்தல் ஓர் அபத்தம் *(absurd)* என்ற கருத்தும் உண்டாகியுள்ளது.

தெரிவைப் பற்றியுள்ள இந்த அபத்தத்தையும்—குருட்டாட்டத்தையும் விட இன்னுமொரு வகையில் அது திகைப்பூட்டுவதாக உள்ளது. வழிகாட்டியில்லாத, முன்னுதாரணம் இல்லாத –திசையறியாத தெரிவு மிகவும் சிரமமானது. அதுவும் ஒருவனது தெரிவுக்கு அவனே பொறுப்பாக உள்ள போது, அந்த தெரிவே பெரிய இடர்ப்பாடாய், அதுவா இதுவா என்று நிச்சயிக்கமுடியாத பரிதவிப்பில், நிச்சயமின்மையில் நிர்க்கதியில், *risk* எடுத்தலில் கொண்டு விடுகின்றது. எனினும், ஒருவன் தன்னை ஆக்கிக் கொள்ளுதலில் ஏதேனும் ஒருவழியைத் தெரிவு செய்து கொண்டேயாக வேண்டும். இந்த வகையில் ஒவ்வொருவனுடைய மனதிலும் நிரந்தரமான ஒரு நிர்ப்பந்த உணர்வும், ஊசலாட்டமும், பயமும் உண்டு என இருப்பியல்வாதம் கூறுகின்றது.

இருப்பியல்வாதம் புலப்படுத்துகின்ற இந்த உண்மையின் காரணமாக, அதனை சோர்வு வாதம் என்றும், அவநம்பிக்கையூட்டுவதென்றும் குறைகூறப்படுகின்றது. எனினும் இருப்பியல்வாதிகள் இத்தகைய குற்றச்சாட்டுக்கு தகுந்த பதில்களை அளித்துள்ளார்கள். இருப்பியல்வாதத்தின்பால் கூறப்படும் பிறகுறைகள், அது புற உலகத்தின் புலனுக்குத் தெளிவான பருப்படியான யதார்த்தத்தை மறுதலிக்கிறது என்பதும், தனிமனிதக் கூண்டுக்குள் எப்பொருளையும் சிறைவைக்கிறதென்பதும், இருத்தல் பற்றிய இதன் விளக்கமுறையில் தன்னையே இருத்தலுக்கு உதவாததாக்குகின்ற முரண்வாதம்

என்பதும், இவைபோன்ற பிறவுமாகும். இந்தக் குற்றச் சாட்டுகளுக்கும் இருப்பியல்வாதிகள் விரிவான பதில்களை அளித்துள்ளார்கள்.

5. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கப்பால் இருப்பியல்வாதம், பிளேற்றோ தொடக்கம் உள்ள மேற்குலக அறிவு வாதத்தையும் விஞ்ஞானத்தின் அணுகுமுறைகளையும், மனிதனது மொழியையும் சிந்தனை அமைப்பையுமே, சண்டைக்கு அழைப்பதாக உள்ளது. பொதுவாக மனிதகுலம் புறவயமான சிந்தனைக்கே பழக்கப் பட்டுள்ளது. பொது இயல்புகளின் அல்லது *Essence* அடிப்படையில், கருத்துருவங்கள் கொள்ளப் படுகின்றன. கருத்துருவ ஆக்கம் *(concept formation)* மனித மனதின் சிறப்பான ஆற்றல் என்றும், விலங்குகளுக்குச் சாத்தியமில்லாத மனிதனின் மொழியின் அடிப்படை என்றும் சொல்கிறோம். விஞ்ஞானம், பொது இயல்புகளையும் பொது விதிகளையும் பற்றியதான ஒன்றே, தனியான இருத்தல் பற்றி விஞ்ஞானம் ஒன்றும் அறியாதது போல, மனித மொழியும் சிந்தனை முறையும் கூட தனி இயல்பை, இருத்தலைப் புரிந்து கொள்ளக்கூடியதாய் இல்லை. அதனால் இருப்பியல்வாதம் ஒரு 'புது சிந்தனை முறையையும்', உண்மையில் ஒரு புதுக் கலாசாரத்தையும் வேண்டிநிற்கிறது. காரணகாரிய சிந்தனை தரும் பதிலாக காரணகாரியத் தொடர்பு முறையில் அல்லாத உள் நோக்கிய ஒரு புரிதலை 'முகர்ந்து' பார்த்து அதன்வழியே ஊடுருவ முனைகிறது. *Intution/* அகக்கோடல் / உள்ளுணர்வு என்ற சொற்கள் இந்தப் புரிதலைக் குறிப்பதற்குப் பயன்படுகின்றன. இத்தகைய 'புரிதல் திறன்' மூளையின் ஏதோ ஒரு பகுதியில் விருத்தியடையா

நிலையில் அரும்புதலாக உள்ளதா, அல்லது மேற்கூறிய இருப்பியல் சிந்தனையாளர்களின் கூர்ப்பின் விகாரபப்பண்பாய் ஏற்பட்டு, இனி மேல் மனிதகுலத்தில் நிலைபெறப் போகிறதா, அல்லது உதிர்ந்துவிடப் போகிறதா என்பதை இனிமேல்தான் அறிய வேண்டும். அல்லது மார்க்சியவாதிகள் சொல்ல முனைவது போல், இது ஒரு குறித்த வரலாற்றுச் சூழ்நிலையில், ஒரு குறித்த சமூக பொருளாதார அரசியல் சூழ்நிலையில் உண்டான சிந்தனை, இன்னுமொரு வரலாற்றுச் சூழ்நிலையில் இன்னுமொரு சமூக பொருளாதார அரசியல் சூழ்நிலையில் இந்தச் சிந்தனைகள் போய்விடும் என்பதா என்பதையும் பொறுத்துத் தான் பார்க்க வேண்டும்.

## முடிவுரை

எப்படியிருப்பினும் இருப்பியல்வாதிகளின் சில அவதானங்களாவது நம் அன்றாட அனுபவத்திற்கு உட்பட்டனவாகவே உள்ளன. வாழ்தலின் செயன்முறையிலேயே, அல்லது வாழ் நிலை அடியாயே இருப்பியல் உண்மைகள் புலப்படக் கூடுமென்பதால், இருப்பியல்வாதிகள் தங்கள் தரிசனங்களைப் புலப்படுத்துவதற்கு இலக்கிய வடிவங்களையே தெரிந்தெடுத்துள்ளனர். கெகாட் தொடக்கம் சாத்ரே, காமுஸ் வரையிலான இருப்பியல்வாதிகளின் படைப்புகளை உலகம் அறியும். தமிழ் இலக்கியத்திலும் — இன்றைய ஈழத்துத் தமிழ் இலக்கியத்திலும் கூட, இருப்பியல்வாதத்தின் புலப்பாடுகள் ஆங்காங்கே பளிச்சிடுகின்றன. அசோகமித்திரன் புத்திபூர்வமாக இருப்பியல்வாதத்தைத் தழுவி நிற்பவர், ‘தண்ணீர்’ நாவலில் அவரவருடைய இருத்தலை அவரவரே ஆக்கிக் கொள்ள முடியும் என்ற இருப்பியல் உண்மைக்கு

அழுத்தம் கொடுக்கின்றார். ஈழத்தின் மஹாகவியின் இருப்பியல் சார்புகளை நான் ஏற்கனவே, சுட்டிக் காட்டியுள்ளேன். மஹாகவியின் 'ஒரு சாதாரண மனிதனது சரித்திரத்தில்' மாத்திரம் அல்லாமல் ஏனைய பல கவிதைகளிலும் காணப்படும் முனைவும், உழலவும், சகிப்பும் இருத்தலின் நித்திய நிலையே. எனது சில கதைகளிலும், கவிதைகளிலும்கூட இருப்பியல் புலப்பாடுகளைக் காணலாம். (இருப்பியல் கருத்துக்களை தமிழ் வாசகர் மத்தியில் நான் அறிமுகப்படுத்த முனைகிறேன் என்பதாலும், இருப்பியலின் கொள்கை இலக்கியப் படைப்புகள் மூலமாகவே நன்கு வெளிப்படுகின்றது என்பதாலும், எனது சில கதைகளில் காணப்படும் இருப்பியல் புலப்பாட்டை நானே வெளிப்படுத்துவது தவறல்ல என்று நினைக்கிறேன்.) 'மல்லிகை'யில் வெளியான எனது 'மழை' 1968ல் சாத்ரேயின் சில கட்டுரைகள் வாசித்ததின் பின்னர், மழையுடன் விடிந்த ஒருநாட் காலைப் பொழுதின் அனுபவத்தைக் கொண்டது. தெரிவு தர்க்க நியாயங்களுக்கு அப்பால் முன்கூட்டியே நடைபெறுகிறது என்பதையும், முன்கூட்டி எடுக்கப்படும் தீர்மானத்திற்குக் காரணங்களைக் கண்டுபிடித்து நியாயங்காண முற்படுகிறோம் என்பதையும், தெரிவின் இறுதிக் கட்டத்தில் பெரும் தவிப்பும், பச்சாத்தாபமும் ஏற்படுகிறது என்பதையும் அந்தச் சிறு பொழுதின் சிறு நிகழ்வு ஒன்றின் மூலம் அறிந்து கொண்டேன். அந்த உண்மை அனுபவத்தையே ஆழ்ந்து ஓர்ந்து 'மழை' சிறுகதையில் எழுதியுள்ளேன். இதில் மழை, புறவியமான காரணகாரிய நியாயத்தின் குறியீடாக உள்ளது. மழைக்கும் அப்பால்தான் அவன் அன்று பாடசாலை போகாத காரணம் உள்ளது. அந்தக் காரணத்துக்கு காரணம் இல்லை. அது *irrational*. இதுபோலவே வில்லியம் பாறெற்றின் *Man is*

*irrational* என்ற நுலைப் படித்துக் கொண்டிருக்கும் போதே ஏற்பட்ட ஒரு நிகழ்வை 'உங்களுக்குப் பைத்தியமா?' என்னும் கதையில் விபரித்துள்ளேன். 'உங்களுக்குப் பைத்தியமா?' என்பது எனது மனைவி ஒரு கட்டத்தில் என்னைப் பார்த்துக் கேட்ட கேள்வி. எனது *irrationality*யை, நான் தரிசித்த இனிய நினைவுடன் கதை முடிகிறது. இந்தக் கதையைப் புரிந்து கொண்டோ புரிந்து கொள்ளாமலோ மல்லிகை ஆசிரியர், அதனை எனக்குத் திருப்பி அனுப்பி வைத்தார் என்பதையும் குறிப்பிட வேண்டும். இது பின்னர், 'அது வேறு ஆள்' என்ற தலைப்பில் கீற்று – இதழ் 2ல் வெளி வந்தது. அலையில் வெளியான எனது 'நீக்கம்' கதைகூட இருப்பியல் சார்பு உடையதென்றே நினைக்கிறேன். தனக்குத் திடீரென ஏற்பட்டதென ஒருவன் நினைக்கின்ற தனது ஆனந்தமான, சலனமற்ற நிலைக்கான காரண காரியத்தை அவன் பின்னோக்கி ஆராய்வதே கதை. ஏதோ ஒரு காரணத்தை கண்டுபிடித்தது போலவும் தோன்றுகிறது. அதே சமயம் அது நழுவிப் போகிறது போலவும் உள்ளது. மனித இருத்தலுக்கும் தர்க்கநியாயத் தொடர்புகளுக்கும் உள்ள பிளவைத்தான் இக்கதை காட்டுகிறது என நினைக்கிறேன். 'அலை' யில் வெளியான எனது 'வெளியார் வருகை' யிலும் இது போன்ற இருப்பியல் சார்பு புலப்படுகிறதென்றும் நினைக்கிறேன்.

''... ... ... ...

பெண்டு

பிள்ளை யாவரையும்

பொலிசில் ஒப்படைத்து

வந்து நீர் வீட்டுக்குக் காவல் இரும்'' என்றார்.

சிந்தித்தேன்,

நாங்கள் ஒருவனைத் தீர்த்துவிட்டோம்.

நாங்களேதான்

இந்த நமனைப் பலிகொண்டோம்.

வந்தால்,

இனியும் அவர்களை மாய்ப்போம் நாம்.

''குத்துவோம், வெட்டுவோம்,

கொத்தி விழுத்துவோம்.

இந்த வழியே,

இனி மரணத்துள் வாழ்வோம்''

என்றேன்,

விழித்தேன்... ...

இதில் இரண்டு *alternatives* இல் ஒன்று தீர்மானிக்கப்படுவதையும், இந்த தீர்மானத்தின் பேரிலேயே அவர்களின் இருத்தல் நிர்ணயிக்கப்படுவதையும், அந்த இருத்தல் 'மரணத்துள் வாழ்வு' என்ற தவிப்புமிக்க, ஆனால் வீரமான ஒன்றாக இருப்பதையும் காணலாம். தீர்மானத்தின் உறுதியும், அதனால் ஏற்படும் இருத்தலின் *Full commitment* உம் கவிதையின் வீச்சத்தில் நன்கு புலனாவது போலவே எனக்குத் தோன்றுகிறது.

இவை போலவே, ஏனைய பல எழுத்தாளர்களின் படைப்புகளிலும் இருப்பியல் அம்சங்களைக் காணமுடியும். எமது இலக்கிய விமர்சனமும் சரி, இலக்கிய விமர்சனங்களால் விகாரப்படுத்தப்பட்ட எமது இலக்கியப் படைப்புக்களும் சரி, ஒடுங்கிய ஒரு வழிப் பாதையால் போய்க் கொண்டிருக்கின்றன. இன்று எமது இலக்கிய

விமர்சனம் வெறும் நயப்பாக அமையும், அல்லது மார்க்சிய பிளாஸ்ரிக் சேஜரி செய்யப்பட்டதாய் இருக்கும். இந்த வரட்டுத் தனத்துக்கெதிராகக் கனகாலமாகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மார்க்சிய மெஞ்ஞானத்தின் வெளிச்சத்தில் நாம் பல உண்மைகளை அறிந்துள்ளோம். ஆனால் எல்லா உண்மைகளும் மார்க்சிய மெஞ்ஞானத்தினுள் அடங்கியுள்ளது என்றோ, மார்க்சிய மெஞ்ஞானம் தவிர்த்த ஏனையவை எல்லாம் உண்மையற்றவை என்றோ கருதுதல், சுத்தப் பாமரத்தனமாகும், அறியப்பட்ட தத்துவங்கள் அனைத்தையும் நாம் அறிந்தாக வேண்டும். அவற்றின் உண்மை பொய்களை நிறுத்தாக வேண்டும். அவற்றின் உண்மையிலும் பொய்யிலும் நடக்கின்ற இலக்கியப் படைப்புக்களை நாம் இனங்கண்டு, பெயர் சுட்டிச் சொல்ல வேண்டும். அப்போதுதான் நமது இலக்கிய விமர்சனம் வளம்பெறும் என்பதுடன், சிருஷ்டிக்கப்படும் ஒவ்வொரு இலக்கியப்படைப்பும், கணிக்கப்படுகின்ற இலக்கிய ஜனநாயகம் உருவாகும். அல்லது, காட்டில் எறித்த நிலாவாக, பாதையில் உதிர்ந்த காட்டுப் பூக்களாக, எத்தனையோ படைப்புகளின் உண்மைப் பொருளை நாம் இழந்து விடுவோம்.

குறைந்தபட்சம் இந்த இலக்கிய நோக்கிலாவது, எமது இலக்கிய விமர்சகர்களாவது இருப்பியல்வாதத்தைப் புரிந்து பிரயோகிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*நன்றி - அலை 1980*

□

# வரைபடங்களும் அடையாளங்களும்

## சண்முகம் சிவலிங்கம்

நண்பனே,

உனது வீட்டைக் கட்டிக்கொள்வது

உனது பொறுப்பு.

எனது வீட்டின் வரைபடத்தை

நீ ஏற்கவேணும் என்று

நான் என்றும் சொன்னதில்லை.

எனது வீட்டின் வரைபடத்தைக் கூட

நான் எத்தனையோ முறை

மாற்றியிருக்கிறேன்.

இதுதான் வரைபடம்

என்ற நியதி

எனக்குக் கிடையாது.

''யார் எமக்கு அரசர்,

இங்கு யார் இடல் நியமம்''

என்பதே

எனது தாரக மந்தரம்

இடித்து இடித்து
என் வீட்டை நான்
புதுப்பித்துக் கொண்டுதான்
இருக்கிறேன், இன்னமும்.

கட்டுப்பெட்டித்தனமான
கலாச்சாரம் அல்ல
என்னுடையது.
அது உலகம் பரந்தது.
எதிர்படுகின்ற
மாற்றுக் கலாச்சாரர்களை
செமித்துக்கொள்கின்ற
சீரான தேகமுடையது.

உனது வீட்டின் வரைபடம்
என்னை
உறுத்தப் போவதில்லை.

எனது வீட்டின் வரைபடத்திற்கு
எதிர் எதிராகத்தான்
நீ இயங்குவாய்,
என
நீ

முழங்குகிற தர்க்கத்தில்
முயங்கி அதை ரசிக்கிறேன்.

அனுதாபம் என்னை விட்டு
என்றும் அகன்றதில்லை.

உனது அடையாளத்தை
இன்னொருவரின் சார்பாக அல்ல ,
எதிராக
நீ தேடுவது
எனக்குப் புரிகிறது.
உன்
சுயமான சொந்த அடையாளம்
எங்கு தொலைந்தது
என்று நான்
சிந்திப்பதையிட்டு
தயவு செய்து சீற்றம் கொள்ளாதே.

புதிய அடையாளங்களை
நீ புனைவது பற்றி
ஒலி பெருக்கியில் ஊதுகிறாய்,
அதுவும்
உன் அடையாளமே.

என்னை,

மாறி மாறி வளரும்

என் வீட்டின் வரைபடத்தை

நீ

முளிவது ஒன்றுதான்

பாவம் போல் படுகிறது

எனக்கு.

*04.05.2007*

# கார்த்திகைப் பூ!

## சண்முகம் சிவலிங்கம்

கன்னி கட்டிப் பூத்தாளே
என் கார்த்திகை பூ!
கன்னி கட்டிப் பூத்தாளே
என் கார்த்திகை பூ!

நீலவண்ணனின் நிறத்தில் பூக்கும்
காயான் காடுகள் கபளிகரமானபின்,
''வெண்பனியின் தலை சொட்டி'' விம்முகிற
வெள்ளைப் பூங்கொத்துக்கள் துடிதுடிக்க
பாவட்டைகள் துண்டாடப்பட்ட பின்
மண்ணுக்குள் இருந்த கார்த்திகைப் பூ மங்கை
மூச்சடைத்துச் சாக
மூச்சடைத்தும் சாக முடியாத என் சிறுவயது
நினைவுகளில் மட்டும்
நின்றாளே கார்த்திகைப் பூ!

கடந்தவருடம் கிடைத்தது
கார்த்திகைப் பூ கன்னியின் ஒருகால் விரல்.
நட்டேன்,... முளைத்தாள் அக்கன்னி

நாம்பன் நாகமாய்,
நீண்டு கறுத்த தண்டின் நிமிர்வாய் -

நீண்டு கறுத்த தண்டின் நிமிர்வில்
செதில் மடல் நீக்கி, தெரிந்த முறையில்
பச்சை அரும்புகளை விசிறிப் படர்ந்தாள்.

கொழுகொம்பு கொடுக்க
கொடிகட்டும் உயரத்தில்
ஒருநாள் கன்னிகட்டி, உதயசூரியனாய்
மறுநாள் பூத்தாள்.

கெட்டு வெடித்துக் கெட்டு வெடித்துக்
கிளைத்துக் கிளைத்து,
ஆயிரம் தலை சூரிய நாகமாய்
அடர்ந்து படர்ந்து பூத்தாள்!
சிவப்பும் மஞ்சளும் ஆரஞ்சும் சேர்ந்து
நடுங்கும் சுவாலையின் நளினம் காட்டிப்பூத்தாள்.
அடியில் வளைந்த ஆறு கோரங்களில்
மணிப் பாதமாக மகரந்த கூடுகளூன்றிப் பூத்தாள்.

''நஞ்சு'' என்றார் பார்த்தோர்

''நஞ்சே அமுதம்'' என விழுங்கிய

நஞ்சுண்ட கண்டனாய்

நான் கத்தினேன்,

கன்னிக் கட்டிப்பூத்தாளே

என் கார்த்திகைப் பூ

கன்னிக் கட்டிப்பூத்தாளே

என் கார்த்திகைப் பூ.

*01.01.2010*

# விட்டில் பூச்சிகள்

## சண்முகம் சிவலிங்கம்

விட்டில் பூச்சிகள் நாங்கள்
விளக்கில் வீழ்கிறோம்.
விளக்கின் கவர்ச்சியை என்றும்
மீறாத நாங்கள்.

அழியத்தான் பிறந்தோம் என்ரீரா!
எவ்வளவு அழிந்தாலும்
விளக்கைவிட்டு இன்னும்
விலகா திருக்கின்றோம்.

போகமாய் வாழ்தலா இருப்பு?
பொரிந்து பொரிந்து என்றும்
புத்துயிர்ப்பது அன்றோ இருப்பு!

விட்டில் பூச்சிகள் நாங்கள்
விளக்கில் வீழ்கிறோம்
வீழ்ந்து வீழ்ந்து விளக்கின் திரியாய்
வெஞ்சுடராகி, வெம்மை உமிழ்கிறோம்.

விளக்கில் வீழ வேறெவர்க்கு ஏலும்?
தீயில் வீழ்ந்து
தீயில் வீழ்ந்து கருகும்
திராணி வேறெவரைச் சேரும்?

முதுகில் முள்ளை குத்துபவர்கள் நாங்கள்.
நாவில் வேலை நடுகிறவர்கள் நாங்கள்
கன்னத்தில் பாச்சும் வேலினை காதலிப்பவர் நாங்கள்
நாங்கள் சுமந்த சிலுவையில் நாங்களே ஏறி
நாங்களே எங்களை அறைந்து கொள்பவர் நாங்கள்
நஞ்சுண்ட கண்டனின் நகல்கள் நாங்கள்,
விட்டில் பூச்சிகள் நாங்கள்
விளக்கில் வீழ்கிறோம்.

*01.01.2010*

# பிரகஷ்த்தம் (சிறுகதை)

• சண்முகம் சிவலிங்கம்

நான் நடந்தேன். நான் நடந்து கொண்டிருந்தேன். கையில் உருவிய கட்டாரியுடன் எங்கே என்று அறியாது நான் நடந்து கொண்டிருந்தேன். என் வீடு நெருங்கிக் கொண்டிருந்தது. என் வீட்டையும் கடந்து நடந்தேன். ஊரெல்லாம் நடந்தேன். எனக்கு எந்த இடத்திலும் தரிக்க முடியாமல் இருந்தது. எவரையும் பார்த்துப் பேச முடியும் என்று தோன்றவில்லை.

யாரோ என்னைத் தொடர்ந்து வருவது போலிருந்தது. மகன் தொடர்ந்து வருகிறானா? அல்லது மாகு தொடர்ந்து வருகிறானா? இருவரையும் காண நான் அஞ்சினேன். மாகு வந்தால் என் கையிலிருந்த கட்டாரி மறுபடியும் பதில் சொல்லி இருக்கும். மகன் வந்தால் என்ன செய்வேன்? அவன் பின்னாலும் வருவான், முன்னாலும் வருவான். மகனே நீ என் முன் இப்போது தோன்றாதே, போ!

நீ விழுந்த நாள் முதல் நான் உருவாக்கிக் கொண்டது இந்தக் கட்டாரி, இந்தக் கட்டாரியைப் போல்தான் என் உள்ளத்தையும் உருமாற்றிக் கொண்டேன். அந்தக் கடைசி நாள் அணுங்குப் பிடிக்காக என் உடலையும் தயார் செய்து கொண்டேன். உன்னைக் காட்டிக் கொடுத்தவனை பழி வாங்குவதற்கு என் உள்ளத்தில் உள்ளும் உடலின் அணு எங்கும் வைராக்கியம் தினவு எடுத்திருந்தது.

உன்னைக் காட்டிக் கொடுத்த ஒருவன் பற்றிய கதை ஆரம்பத்தில் இருந்தே இருந்தது. ஆள் முகம் மறையும் அந்தக் கருக்கலில், வானம் வாயூறும் அந்த மழைத் தூற்றலிடையே, கட்டைக் காற்சட்டை போட்ட ஒரு கறுத்த முண்டம் இந்தியப் படைகளுக்கு முன்னால் சென்றான் என்றும், அர்ச்சுனர் வீதியைக் காட்டி விட்டு சனங்களுக்குள்

ஓடி மறைந்தான் என்றும் பரவலாகப் பேசப்பட்டது. அந்தத் துரோகி யார் என்று இயக்கம் கண்டு பிடித்து தக்க தண்டனை வழங்கும் என்ற எதிர்பார்ப்பு பிசுபிசுத்த வேளையில் காட்டிக் கொடுப்பு நடைபெறவில்லை என்ற முடிவுக்கு நான் வந்து கொண்டிருந்த வேளையில் உபியுடனான அந்தச் சந்திப்பு எனக்கு ஏற்பட்டது.

உபியை உனக்குத் தெரியும். அந்த மெலிந்த வெளியல் எலும்புக் கூடுதானே என்று கேட்பாய். அந்த எலும்புக் கூடுதான். ஆனால் அவனுடைய கண்களை நீ கவனித்திருக்கிறாயா? கனவு காண்பது போல் இருக்கும். அல்லது எங்கோ தூரத்துச் சிந்தனை ஒன்றில் மொய்த்த சிறிய சாம்பல் நிற அந்திப் பூச்சி போல் இருக்கும். திடீர் என அந்தப் பூச்சியின் சிறகுகள் படபடக்கும். அந்தச் சிறகுகள் விலகிய நிலையில் அவனுடைய கட்குழியில் ஒரு ஒளி மின்னும். இன்னும் அந்தத் தூரத்துப் பார்வையுடனேயே அவன் வாய் உதிரும்—

"வானத்துக்கு நிறமில்லை"

உரத்த சிந்தனையுள் உதிர்க்கின்ற இந்த உதயப் பிரகாசத்தனத்தினால்தான் உபி என்ற பெயர் கிடைத்தது.

உபி இடையிடையேதான் ஊருக்கு வருவான். அவன் கருங்கொடித் தீவுக்கு அருகில் கலியாணம் செய்திருந்தான். அவனுடைய மகன் மாற்று இயக்கத்தில் இருந்து மாண்டு போனவன் என்பது எனக்கு அப்போது தெரியாது. உபிக்கும் மாற்று இயக்க அனுதாபம் இருந்தது என்பதும் எனக்குத் தெரியாது அப்போது. எந்த இயக்கச் சாயல்களையும் அவன் வெளிக் காட்டியவனாகவும் இல்லை. திடீரென நம்முடைய சம்பவத்தை நினைவு கூர்ந்தான்.

"உங்கட மகனும் அதில . . . .அதே இடத்தை காட்டி தலைவீங்கிதான் காட்டிக் கொடுத்தவன்"

"இருக்காது. உனக்கு எப்படித் தெரியும்?"

"அன்று இரவே என் வீட்டுக்குத்தான் வந்தவன். அடுத்த நாள் கொழும்புக்குப் போனவன்"

உபியின் செய்தியை நான் உடனே நம்பவில்லை. உதயப் பிரகாசம் அல்லவா அவன். நேரடியாக என்னுடன் பேசும் போது கூட அந்த இழப்புப் பற்றிய போலித்தனமான சோகம் கூட அவனுடைய குரலில் இல்லை. மகிழ்ச்சி கலந்த குரலில் தான் அதைச் சொன்னான். தலைவீங்கியுடன் மிகவும் நட்புடைய அவன் அவனை என்னிடம் மூட்டுவதற்கு சற்றேதும் தயங்கவில்லை. சம்பந்தப்பட்டவர்களை மறந்த நிலையில் ஒரு வெறும் செய்தியாகவே அவன் என்னிடம் அதைச் சொன்னான். உபியின் அந்த உதயப் பிரகாசத்தனத்தை நான் விளங்கிக் கொண்டாலும் முழுதுமாக அவனை நம்ப முடியவில்லை. எனினும் அதை ஒரு எடுகோளாக வைத்து சான்றுகளைப் பெறுவதற்கு மும்முரமாய் இருந்தேன்.

ஒரு முன்னிரவில் கேட்ட அந்த துப்பாக்கி வேட்டுகள்! தொடர்ந்த அந்தத் துப்பாக்கி வேட்டுகள் கேட்டு முடிந்ததும் என் நெஞ்சு பிராண்டியது உண்மைதான். ஆனால் என்னையே நான் தேற்றிக் கொண்டது எப்படி என்றுதான் இன்னமும் யோசிக்கிறேன். உன் உயிர் அறுந்ததும் எங்களுக்கும் ஏதோ அறுந்திருக்க வேணுமே. அது ஏன் நடைபெறவில்லை என்றுதான் இன்றுவரை யோசிக்கிறேன். உன் மீது எங்களுக்கு உள்ள பாசம் அந்த அளவுக்கு இருக்கவில்லையா? கோயில் திருவிழாவின் ஓசைகளில் எங்கள் உள்ளங்கள் இழுபட்டு போயினவா? கோயில் வெளிச்சங்கள் ஊடறுத்த அந்த முன்னிரவில் நான் சற்று வெளியிறங்கி சிறிது நடந்து போயிருந்தால் எனக்கு ஏதேனும் விளங்கி இருக்குமா?

எனக்கு எதுவும் விளங்காமலே போயிருக்கலாம். ஏனென்றால் அல்லை அயலில் இருந்தவர்களுக்கே என்ன நடந்தது என்று அடுத்த நாள் விடியும் வரை தெரியவில்லையே. திசைகள் தோறும் சிதறிப் போனவர்கள் நள்ளிரவிக்குப் பிறகு சந்தித்த போதுதான் சந்தித்தவரிடையே நீ இல்லையே என்று கண்டு பிடிக்கப் பட்டது.

விடிந்தவுடன்தான் என் கேற்றில் குரல் கேட்டது. எதிரே வந்தவர்கள் எல்லாம் என்னை விறைத்துப் பார்க்க, அந்த நான்கு தெருக்களையும் கடந்து அருச்சினர் வீதியில் ஓர் ஐம்பது யார் போனதும் உன் இடத்தைக் காட்டினார்கள். குருதி தேங்கி காய்ந்து போன மணட் குழிகளில் எது உன்னுடையதாக இருக்கும் என ஒருவன் அதைக் காட்டினான். அது சற்றுப் பெரிய குழியாக இருந்தது. ஏனைய குழிகளில் தேங்கி காய்ந்து போனவை இந்திய இரத்தமா? வீட்டு மதில் சுவர்களைக் காட்டினார்கள். எண்ணற்ற துப்பாக்கிச் சூடுகள்! உன்துப்பாக்கி ரவைகள் தீர்ந்த பிறகுதான் அந்த கௌரவர்கள் உன்னைச் சூழ்ந்து கொண்டார்கள். என் அபிமன்யுவே அன்று காலையில்தான் நான் அர்ஜ்ஜுனனானேன். ஆனால் இந்த அர்ஜ்ஜுனனுக்கு வரலாற்றிலும் இதிகாசத்திலும் ஒப்புமை இல்லை. அந்த ரத்தம் தோய்ந்த மணலை தொட்டுக் கொஞ்சினேன். அந்தச் சுவரில் இருந்த துப்பாக்கிக் காயங்களும் உன்னுடையவையல்லவா- எவை எவை உன்னுடையதாக இருக்கும் என எண்ணிப் பார்த்தேன். அந்த ரத்தச் சுவட்டையும் துப்பாக்கிக் காயங்களையும் மனதில் சுமந்து கொண்டு போகும் போது என்னை நான் வேறொரு மனிதனாகவேதான் உணர்ந்தேன். அந்த மேத்தாக்களினதும், தாசுகளினதும் வாகனத்துக்கு ஒரு கிரனேட் வீசும் திரானி எனக்கு இல்லாமல் போகுமா?

காட்டிக் கொடுத்தவன் என்று ஒருவனைப் பற்றிக் கேள்விப் பட்டதுமே என் இதயப் பீரங்கி அவனை நோக்கித்தான் திரும்பியது. அந்த மேஜர்கள் எனக்கு நீர்த்துப் போனார்கள். காட்டிக் கொடுத்தவனை தீர்த்துக் கட்ட நான் தீட்டிய திட்டங்களை நான் இப்போது சிந்திக்கும் போது, அந்த மேஜர்களையோ அவர்களுக்கு அடுத்தவர்களையோ நான் மாட்டியிருப்பேன் என்றுதான் நம்புகிறேன்.

என் திட்டம் பாதியில் இருக்கும் போதுதான் நீ அந்த மாலைக் கருக்கலில் உருக்கொண்டாய். உனக்குத் தெரியும். உன்னைக் காட்டிக் கொடுத்தவனை என் மூளைக்குள் போட்டு மறமறத்துக் கொண்டு மெல்லிய போட்டிக்கோ வெளிச்சத்தில் பூந்தோட்டத்திற்கு தண்ணீர் நனைக்கும் போதுதான் நீ முதலில் உன் புகைப்படம் ஒன்றில் உள்ளது போல் தெரிந்தாய்.

இதே தோட்டந்தானோ அந்தப் புகைப் படத்தில்? இந்தத் தோட்டத்திற்குள் இருந்துதானோ நீ அந்தப் புகைப்படம் எடுத்தாய்?

உன் முழுநீள உருவமும் தெரிந்தது. ஏ.கே.47ஐ கையில் வைத்திருந்தாய். ட்டௌசருக்கு மேல் வெளியில் விட்ட சேட்டின் கைகளை முழங்கை வரையிலும் மடித்து விட்டிருந்தாய். முன் தலைமயிர் வழமை போல் நெற்றியில் படிந்து கிடந்தது. ட்டௌசர் கால் மடிப்புகளின் கீழ் பாட்டா செருப்பு அணிந்திருந்தாய். வழமையிலும் விட சற்றுப் பிரகாசமாய் தெரிந்தாய் .....

நான் நின்று சில வினாடிகள் உன்னைப் பார்த்தேன். வீரமரணம் அடைந்த நீ எப்படி இந்த வேளையில் என் முன் நிற்கலாம்? நான் பயந்தது உனக்குத் தெரியும். இரண்டு எட்டுப் பின் வாங்கினேன். உன் குரல் எனக்குக் கேட்டது.

"அப்பா, பயப்பிடாதிங்க ...."

நான் மேலும் பயந்தேன். திடீரென நாம் இருவரும் மிக அருகருகாக நிற்கக் கண்டேன். என் உடல் பஞ்சு போல் மாறி இருந்தது. நாம் பாதம் படாத நிலத்தில் பறந்து கொண்டிருப்பது போலிருந்தது. எனினும் நான் நிலத்திலேயே நின்று கொண்டிருந்தேன். உன் பாதங்கள் நிலத்தில் படாததை அவதானித்தேன். நீ அருபமானதால்தான், உன் பாதங்கள் நிலத்தில் படவில்லை என்று அனுமானித்தேன். நீ மீண்டும் சொன்னாய்,

"அப்பா, பயப்பிடாதிங்க ..."

"என்ன நடக்க வேணுமோ அது நடந்தது.... நான் எழுதிய வரிகள் நினைவிருக்கும். போருக்கு போனவர்கள் தோற்பதும் இல்லை. அவர்கள் வீடு திரும்புவதுமில்லை. ஆனால் வீட்டைப் பற்றி அறவே சிந்திக்காமல் இருக்க என்னால் முடியவில்லை...."

நீ சிறிது தரித்து தென்னை மரத்தில் சாய்ந்தாய். மீண்டும் தொடர்ந்தாய்..

"ஓம் அப்பா, வீட்டைப் பற்றிச் சிந்திக்காமல் இருக்க என்னால் முடியவில்லை, ஏனென்றால் வரப் போகின்ற கால ஓட்டம் முழுதும் எனக்குத் தெரிந்தது. இந்தியனுகள் போவது நிச்சயமாயிற்று. இந்தியனுகள் போன பின் ஸ்ரீலங்காவுக்கு எங்களுடன் இருந்த தந்திரோபாயமான உறவும், எங்களுக்கு ஸ்ரீலங்காவுடன் இருந்த தந்திரோபாயமான உறவும் முடிந்து விடும். அப்போது எதிர் நிலைகளை எடுப்போம். ஆறுகள் பின்னோக்கிப் பாய்வதில்லை. எரிமலை குழம்புகளும் எரிமலையின் உதரத்துள் அடங்குவதில்லை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கட்டம். ஒரு கட்டம் மற்றக் கட்டத்தினின்று வேறு பட்டதுவே. மேலும் மேலும் உக்கிரமாகிற கட்டங்களின் எரிமலைகளும் உதிரக் கடல்களுமே என்முன் விரிந்தது.

இந்த நிலையில் உங்களைப் பற்றி எண்ணினேன். என் உடன் பிறந்த சகோதரர்களை எண்ணினேன்....''

''தென்னை மரத்தில் சாய்ந்திருந்த நீ பழைய போட்டிக்கோ படிக் கட்டுகளுக்கு வந்தாய். அப்போது உன் இடுப்புக்கு மேலான பகுதி மட்டுந்தான் யன்னல் மட்டத்தில் தெரிந்தது. நீ தொடர்ந்து சொன்னாய்..''

''வரப்போகின்ற கொடிய யுத்தத்தில் நீங்கள் என் நிமித்தம் படப் போகின்ற ஆக்கினைகளை யோசித்தேன். இந்தியனுகளிடமிருந்து மயிரிழையில் தப்பினீர்கள். வரப் போகின்ற ஸ்ரீலங்காப் படை என் நிமித்தம் உங்களை குடும்பத்தோடு கொல்லும் என்பது நிச்சயமாகி விட்டது. ஆகவே நான் ஒருவன் இல்லாது போனால், என்னால் உங்களுக்கு ஏற்படக் கூடிய கஷ்ட்டம் இருக்காதே என்று என் சின்ன அறிவுக்குப் பட்டது. இதைத்தான் அந்த நாட்களில் நான் சிலந்தி வலை பின்னிக் கொண்டிருந்தேன்...''

இப்போது உன் உருவம் சற்று உயரத்தில் ஓடுகளுக்கு மேலாகத் தெரிந்தது. அங்கிருந்து நீ சொல்வதை நான் அண்ணார்ந்து பார்த்துக் கேட்டுக் கொண்டு நின்றேன்...

''இந்த சிலந்தி வலையினூடுதான் அன்று மாலை அந்த இந்தியச் சிப்பாய்களை நான் எதிர்கொண்டேன். தெருவிளக்கற்ற அந்தத் தெருவில் முன்னிருட்டுக் குறுக்கிடைகளில் பலரின் சந்திப்புகளும் பலருடைய விசாரணைகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. எனக்கு ஏற்பட்டது ஒரு சந்தேகம்தான். கேற்றின் இடுக்கால் தெருவைப் பார்த்தேன். தெருவின்கருக்கலுக்குள் கருக்கலாக உருவங்கள் தெரிந்தன. நான் நினைத்திருந்தால் மரங்களில் ஒட்டி, வீட்டுச் சுவரில் மறைப்பெடுத்து மற்றவர்களுக்கும் சமிக்கை செய்து விட்டு பின் வேலியால் கிளம்பிப் போய் இருக்கலாம். ஆனால் எதுவோ என்னை

உந்தியது. ஆபத்தை அறை கூவி அழைப்பது போல் நான் வெளிப்பட்டேன். வெளிப்பட்டதும் தெரிந்தது. தாமதிப்பதற்கு ஒரு ஷணமும் இல்லை என்று படபடவென்று தீப்பொறி கக்கினேன்., சுழன்று சுழன்று வாணவேடிக்கை செய்தேன். அந்தச் சுழற்சியினுள் ஒரு குண்டு என்னைத் துளைக்கும் என்பது என் பிரக்ஞையை ஊடுருவிய பொட்டாக இருந்தது நினைவிருக்கு. எனினும் என் தீரச் செயலில் எனக்கு திருப்தி இருந்தது. என் தோழர்கள் தப்பிப் போகக் கூடும். என் துப்பாக்கிதான் வெடித்துக் கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருந்தால் அவர்கள் என் துணைக்கு வந்திருப்பார்கள். எதிரிதான் இருட்டில் தீர்க்கிறான் என்று எண்ணித்தான் அவர்கள் இடம் பெயர்ந்திருப்பார்கள். ஆனால் எதிரி வேலிகளுக்குள், பொந்துகளுக்குள் வீழ்ந்து பதுங்கிக் கொண்டார்கள். என் துப்பாக்கி ரவைகள் தீர்ந்ததும் நான் நிமிர்ந்தேன். எதிரிகள் ஓடி விட்டார்கள் என்றுதான் எண்ணினேன். எண்ணிய மாத்திரத்திலேயே என் இடது விலாவை பொத்தி வீழ்ந்தேன். எழுவதற்கிடையில் இன்னுமொரு குண்டு என்னைத் துளைத்தது. கழுத்தில் கிடந்ததை வாயில் கடித்தேன். கை கூப்பி என் மண்ணை நான் முத்தமிட்டதும் உங்கள் எல்லோரையும் எண்ணிக் கொண்டதும்தான் எனக்கு நினைவு. . . ஒரு திருப்தி இருந்தது முடிவில்.

ஆகவே என் மரணத்துக்கு நானே நிமித்த காரணம். என் மரணத்துக்குள் என்ன உந்தியது என்ன? எது என்னை உந்த வேண்டுமோ, அது என்னை உந்தியது ....”

உருவம் இன்னும் உயரத்துக்குப் போனது. வேப்ப மரத்தின் உச்சிக்கு போனது. வார்த்தைகள் தூரத்து ஒலியாக எனக்கு கேட்டது.

''நான் எதிர்பார்த்த அகோரம் உருவாகிக் கொண்டிருக்கிறது . . . . நாகாசூரன் படை எடுக்கிறான், நாகாசூரன் படை எடுக்கிறான்....''

உன் உருவம் வேப்ப மரத்துக்கு அப்பால் வானத்து வெளியில் கலந்தது. நான் நீண்ட நேரம் ஸ்தம்பித்துப் போய் நின்றேன்.

சுய நினைவுக்கு வந்த பின் நான் வேறு விதமாக எண்ணினேன். எவருக்கும் இதைச் சொல்லவில்லை. ஒரு உருவெளித் தோற்றம் என்று எல்லோரும் நகைத்திருக்க மாட்டார்களா?

ஆனால் நீ சொன்னபடி நாகாசூரன் படை எடுத்தான். நாகாசூரன் படை எடுத்து நாங்கள் ஓடும் போதெல்லாம் உன் தோற்றரவு நினைவுக்கு வரவே செய்தது. எனினும் கால ஓட்டத்தைக் கணிப்பவர்களுக்கு தானாகத் தெரியக் கூடியன அல்லவா இவையெல்லாம். எனக்கு ஒரு அகக் காட்சியாக தெரிந்தது, தெரிந்திருக்கலாம் என்றே நினைத்தேன்.

நாகாசூரன் படை எடுப்புக்கு நாலு மாதம் ஈடு கொடுத்து விட்டு மீண்டும் ஊருக்கு வந்தோம். அடுத்த மாதங்களில், ஒரு ஆண்டுத் தொடக்கத்தில், என் அருமை நண்பனும் என் சகோதரருமாக இருந்தவன் திரு.மாற்கு என்றுதான் சொல்லுவேன். சில நேரங்களில் ''ற்'' ஐ விழுங்கி விடுவேன். சில வேளைகளில் அவனுடைய முழுப் பெயரையும் சொல்லி விடுவேன்.

அவனை உனக்கு சற்று முன்புதான் தெரியும். இடையில் எப்போதாவது நீ அவனைக் கண்டிருப்பாயோ தெரியவில்லை. அநேகமாகக் கண்டிருக்க மாட்டாய். கொஞ்சம் தலை விறைத்தவன்.

மாற்கும் நானும் இந்தக் கோயில் வெளியிலே எத்தனை கீற்றுப் பிறைகளைக் கண்டிருப்போம்! அவனும் நானும் இந்தக் கோயில் வெளியில் எத்தனை அரை மதிகளைக் கண்டிருப்போம், எத்தனை முக்கால் மதிகளைப் பார்த்திருப்போம்! எத்தனை பொங்கி வரும் பூரணைகளைப் பார்த்திருப்போம்! நிலவில் மட்டுமல்ல, இருளிலும் வெள்ளி மங்கலிலும் எங்கள் மூச்சுகள் அந்தக் கோயில் வெளியெல்லாம் ஊரும். எத்தனை லட்சியக் கனவுகள்! எத்தனை அறிவார்த்த உரையாடல்கள்!

எங்களது காயான் வெம்புக் காட்டுக்குள்ளிருந்துதான் நான் உருவானேன். அதே காயான் வெம்புக் காட்டுக்குள் இருந்துதான் அவனும் உருவானான். நான் பல்கலைக் கழகத்துக்கு போய் கற்றுக் கொண்டவன், அவன் தானே ஒரு பல்கலைக் கழகமாகக் கற்றுக் கொண்டவன். அவனுடைய வீடே ஒரு பல்கலைக் கழகம். நூல் நிலையத்தில் இல்லாத நூல்களும் அவனுடைய நாக்கு நுனியில் இருக்கும். அந்தக் கர்வந்தான் அவனுக்கு.

விடுமுறை நாட்களில் காலை முதல் மாலை வரை என்னுடன்தான் இருப்பான். ஒரே கட்டிலில் கிடப்போம். ஒரே கோப்பையில் சாப்பிடுவோம். ஒட்டிப் பிறவா இரட்டையர் என்றே ஊரில் அந்தக் காலம் அழைத்தார்கள். என் அன்பு நண்பனை நான் பிரிந்தது என் கலியாணத்துக்குப் பிறகுதான். நாகாசூரனின் படை எடுப்புக்குப் பிறகு நான் அவனை ஊரில் கண்டது எனக்கு அளவிலா ஆனந்தம்.

நாகாசூரனின் படை எடுப்புக்குப் பிறகு அவன் வந்ததை அறிந்து அவனுடைய வீட்டுக்குப் போனேன். உன்னுடைய மரணம் பற்றியும் நீ எனக்கு அளித்த தோற்றரவு பற்றியும் கூட நான் அவனிடம் சொல்ல திட்டமிட்டிருந்தேன்....

நான் போன போது அவன் அங்கு இருக்கவில்லை. கூடத்தை மிக அழகு செய்து, பூக்கும் பூஞ்செடிகளை முன்பு வைத்திருந்தான்..

மாற்கு வரும் வரையில் நான் கூடத்தில் சஞ்சிகைகளைப் புரட்டிக் கொண்டிருந்தேன். மாற்கு வந்த போது நான் திடுக்கிட்டேன். அவனுடைய கறுப்பு நிறத்தைக் காணவில்லை. நீண்ட நேரான தலை முடியையும் காணவில்லை. எல்லாம் சுருள் முடியாக இருந்தது.

"என்ன ஆளே மாறிப் போய் இருக்கிறாய்?" என்றேன்.

"என் முரட்டுத் தோற்றத்தை இப்படியாவது போக்கலாமா என்று யோசித்தேன். எப்படி இருக்கிறேன் இப்போது?"

"அப்போதைய அழகில்தானே நாம் ஆளை ஆள் மயக்கினோம்"

"அது சரி. இந்த கிளினிக் றிமேக் எப்படி இருக்கிறது?"

"ஏன் இப்படி வேஷம் மாற்றினாய்? ஏதாவது கொலை செய்து விட்டு வந்தாயா?"

"இன்னும் இல்லை. இனி மேல்தான் ஒன்று செய்ய வேண்டும்...."

"உபியை சந்தித்தாயா?"

"நீ சந்தித்தாயா?"

"ஓம்"

"எப்போது?"

"ரொம்பக் காலம்"

"ரொம்பக் காலத்துக்கு முன்பு நானுந்தான் சந்தித்தேன்"

"அதைத்தான் கேட்டேன். உபி இருந்தால்தானே நமக்குள் சுவை கூடும்."

"அவன் இல்லாவிட்டால் நமக்குள் சுவை இல்லையா? அருமையான ஒரு வெளிநாட்டுச் சாமான் கொண்டு வந்திருக்கிறேன்."

மாற்கு உள்ளே போய் அழகான ஆடம்பரமான ஒரு கிறிம்சன் கலர் போத்தல் ஒன்றைக் கொண்டு வந்தான். நான் மிக்க அவதானமானேன்.

அன்று மாலை முதல் முன்னிரவு வரையும் குடித்தோம். முடிவில் அவனுடைய வீட்டை விட்டு வெளியேறி கோயில்வெளிக்கு வந்தோம். நிலவு சுடர்ந்து கொண்டிருந்தது.

மாற்கு திடீரென இளைஞன் ஆகி விட்டான். கவிந்திருந்த ஆலமரக் கிளைகளைப் பற்றி தொங்கத் தொடங்கினான்.

"சதீ, உனக்கு நினைவிருக்கா நம்முடைய ரீன் ஏஜ் காலத்தை? எவ்வளவு உற்சாகமாக இந்தக் கிளைகளில் தொங்கிக் குதித்து விளையாடினோம்! உனக்கு நினைவிருக்கா, ஒரு கிளையில் தொங்கி ஏறி அடுத்தடுத்த மரக்கிளைகளிலும் தொற்றி அந்தக் கிளைகளில் எல்லாம் நிமிர்ந்து நடந்து திரிந்ததை? வா, வா, ஒரு கிளையில் தொங்கி ஏறு, எல்லா மரங்களிலும் தொற்றி தொடர்ந்து நடந்து வருவோம்...."

"நாம் இப்போது நடுத்தர மனிதர்கள்..."

"இல்லை இல்லை நான் இப்போதும் இளைஞன்தான். நான் பழைய மாங்குட்டி அல்ல. நீ கூப்பிடுவது போன்று வேதாகமத்து மாற்கும் அல்ல. நான் இப்போது ஜைனேந்திரியன். இந்த இடைக்காலத்தில் பெயரைக் கூட மாற்றிக் கொண்டேன். பழைய காலத்துடன் எனக்கு எல்லாத் தொடர்பும் அற்றுப் போய் விட்டது. எனது புதிய பெயர் என்ன?..."

"ஜைனேந்திரியன்"

"எப்படி என் புதிய பெயர், ஜைனேந்திரியன்! நான் ஜைன இந்திரியன்...."

பெயர்த்து வந்தான்.

"வா, சதீ, நம் பழைய கோயில் வெளியில், நம் பழைய நாட்களை நினைவு கூர்தலில் நம் பழைய விளையாட்டு இன்னொன்றையும் விளையாடுவோம். பொல்லிழுப்போம்."

நேருக்கு நேர் நிலவில் உட்கார்ந்து கொண்டோம். இருவரும் எதிரெதிரே கால்களை முன் நீட்டி, ஒருவருடைய காற்பாதம் மற்றவரின் காற்பாதத்தில் படுமாறு அமர்ந்து கொண்டோம் குனிந்து மடிந்து கால் விரல்களுக்கு மேல் பொல்லை வைத்துப் பிடித்தோம். இவருடைய பிடியினுள்ளும் பொல் இம் இம் என்று இருந்தது.

ரெடி? என்று கேட்டான் மாற்கு. ம் என்றேன் ஸ்ற்றாட்டையும் அவனே கொடுத்தான்.

"உவொண், ரூ, த்திரி!..."

முழங்கால் எழும்பாமல் பாதத்தோடு பாதத்தை முட்டி தோணியில் சவள் போட்டு உறைந்து போன பாவணையில் நெடுநேரம் இருவரும். சங்கிலியில் போட்ட யானை பாறையை இழுத்தது ... இழுத்தது. அதனுடைய புடைகள் வீங்கின. அதன் கழுத்துச் சதைகள் நெரிந்தன. அதனுடைய பற்கள் நறநறத்தன. பாறைக்கு சிரிப்பு வந்தது. சற்றே புன்னகைத்தது. அப்படியே விட்டுக் கொடுத்தது. யானை துதிக்கையை உயர்த்தி எக்காளமிட்டுப் பிளிறியது. பாறையும் அதைப் பாராட்டியது!

கோயில் வெளியின் நிலவு மேகங்களுள் மறைந்தும் வெளிப் பட்டும் தெரியத் தெரிய அவன் இளைத்து இளைத்து எனக்கு சொன்னான்.

"இதெல்லாம் பால்ய விளையாட்டுகள். கராட்டியும் சீனடி சிலம்படியும் கூட நான் பழகி இருக்கிறேன். கத்திக் குத்துக்கு எப்படி மாறுவதென்றும், கட்டாரியை எப்படி நேராக இதயத்தில் பாச்சுவதென்றும் நான் பயின்றிருக்கின்றேன். துப்பாக்கிச் சமர் கூட எனக்கு தெரியும். அனுமதியற்ற கைத்துப்பாக்கி ஒன்றும் வைத்திருக்கிறேன். குறி தவறாமல் எப்படி சுடுவதென்று உனக்கு ஒரு நாளைக்கு காட்டித் தருகிறேன்..."

பாரப்பட்ட மனிதனாக என் முன் உயர்ந்து நின்றான் மாற்கு. அவனுடைய சுருட்டிய தலைமயிர்கள் குழம்பிப் பரந்து நிலவில் அழகாய் தெரிந்தன. ஒரு மாமனிதனைப் பார்க்கின்ற மதிப்போடு அவன் முன் நின்றேன் நான். அவனுடன் முற்றும் லயித்த நிலையில் அவனிடம் ஏதேனும் பரிந்து பவ்வியமாகப் பேசி அவனுடைய முகபாவங்களின் அற்புதங்களைத் தரிசிக்க வேண்டும் போல் இருந்தது.

என் மகனின் தோற்றரவு காட்சி பற்றிச் சொல்ல அதுவே தகுந்த தருணம் என்று பட்டது.

நிலவில் அவனது முகபாவம் எனக்கு நன்கு தெரியும் ஒரு நிலையில் எப்போதும் என்னைச் சதா அமைத்துக் கொண்டிருந்தேன்.

தோற்றனி முழுவதையும் விலாவாரியாக சொல்லி அவனுடைய முக மாற்றங்களை அவதானித்தேன் கடைசியாக எனது மகனுடைய ஆவி சொன்னது போலவே இந்தியனுகளை அவன் எதிர் கொண்டதையும் சொன்னேன். அவன் என் ஆருயிர் நண்பன் அல்லவா!

"என் மனைவிக்குக் கூட என் மகனுடைய இந்த தோற்றரவு பற்றிச் சொல்லவில்லை. உனக்கு சொல்லாமல் இருக்க முடியவில்லை.."

"உன் மனைவியிடம் சொல்லவில்லையா? தாய்க்கு இல்லாத பிள்ளையா? உன் மனைவிக்கும் அவன் தரிசனம் கொடுத்திருப்பான். அவள் உன்னிடம் சொல்லாமல் இருந்திருப்பாள், நீ அவளுக்கு சொல்லாதது போல். உன் மனைவிக்கு அவன் தரிசனம் கொடுத்திரா விட்டால் உனக்கு தரிசனம் தந்தான் என்று நீ சொல்வதை நான் நம்ப மாட்டேன்..."

எனக்கு பொறியில் அடித்தது போல் இருந்தது. உடனடியாக ஓடோடிப் போய்ச் சுவர்ணாவைக் கேட்டு விடத்தான் தோன்றியது.

அர்த்த ராத்திரியில் சுவர்ணாவை எழுப்பி இவைகளைப் பேச எனக்கு பயமாக இருந்தது. அடுத்த நாள் காலையிலும் பேசக் கிடைக்கவில்லை. மாலையில் பூந்தோட்டங்களுக்கு தண்ணீர் வார்த்து முடிந்த முன்னிரவில் தான் அவளும் நானும் தனியாக இருக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

நேரடியாக அவளிடம் நான் பேச்சைத் தொடங்க வில்லை. ஃபோட்டோ அல்பங்களைக் கொண்டு வரச் சொல்லி ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டிருந்தோம். யதேச்சையாக அகப்பட்டது போல் நான் பிரகஸ்த்தனின் அல்பத்தை எடுத்தேன்.

வரிசையாக அவனுடைய வாழ்க்கைக் கதையை அந்த அல்பம் கூறியது. பிறந்து இரண்டோரு நாட்களில் தொட்டிலுக்குள் அவன் கிடந்த போது எடுத்த படம், பல நிலைகளில் தாயும் சகோதரிகளும் மாமன்மாரும் நானும் அந்தக் குழந்தையை வைத்திருந்த படங்கள், ஞானஸ்தானத்தின் போது எடுத்த படம், நற்கருவணையின் போது எடுத்த படங்கள், முச்சக்கர வண்டியில் வைத்து

அவனை எடுத்த படம். . . அந்தப் படத்தை நான் முத்தி செய்து கொண்டேன், . . . அந்தப் படங்களில் அதுதான் அவனுக்கு மிகவும் பிடித்த படம், அதுதான் அவனுடையதில் எனக்கு மிகவும் பிடித்த படம். . . .அப்படி ஒரு படம் அண்ணன்மார்களைப் போல் தானும் எடுக்க வேணும் என அவன் ஆசைப் பட்டு எடுத்த படம். . . இப்படியே பல படங்கள். அவனுடைய கிரிக்கெட் படங்களும் அலாதியானவை. பந்து வீச்சுகளின் போதும், துடுப்பாட்டங்களின் போதும் கிண்ணங்கள் பெற்ற போதும், கடைசியாக இளம் ஆட்டக்காரர்களின் கப்டனாய் அந்த அணியுடன் எடுத்த படம் . .. கிரிக்கெட்டுக்கு அடுத்ததாக அவனுடைய துப்பாக்கிகள் மீசை சற்றுக் கறுத்த தோற்றத்தில் . . . அதில் ஒரு படம் சுள்ளாய்ப்பாய் பட்டது எனக்கு. நானும் சுவர்ணாவும் அமர்ந்திருந்த அதே வரவேற்பறையில் எடுத்த படம் அது. அந்த மூன்று இருக்கைகளும் எங்களுக்கு முன் அதே நிலையில் அப்போதும் இருந்தது. அந்த ஆசனங்களில் பிரகஷ்த்தனும் அவனுடைய இரண்டு போராளித் தோழர்களும் துப்பாக்கிகளுடன் அமர்ந்து எடுத்த படந்தான் அது. நடுவில் பிரகஷ்த்தன், இரண்டு பக்கமும் இரண்டு தோழர்கள் - போஸ் கார்ட் சைஸ் படம், சட்டென சற்றுப் பெரிதாக எனக்குத் தெரிந்தது.

"இதென்ன, இவ்வளவு பெரிதா இந்தப் படம்?"

"ஓமோம் பெரிதாகத்தான் தெரியுது ---"

உருவங்கள் சற்றுப் பெரிதானது போலும் தெரிந்தது. நானும் சுவர்ணாவும் ஒரவரை ஒருவர் பார்த்தோம். சுவர்ணா உறிப்நொட்டைஸ் பண்ணப் பட்டவள் போல் கூந்தலை விரித்துக் கொண்டு நேரே பார்த்தாள். அவளுடைய மயங்கலான பார்வை எனக்கும் தொற்றியது போல் இருந்தது. எங்களுக்கு நேரே இருந்த மூன்று

கதிரைகளிலும் பிரமாண்டமாக அந்தப் படம் மாறி இருந்தது. அந்த மூவரும் அந்தக் கதிரையில் நிஜமாக அமர்ந்திருப்பது போலும், நாங்கள் அவர்களுடன் நீண்ட நேரமாக பேசிக் கொண்டிருப்பது போலும் இருந்தது. எங்களை அறியாமலே தோழர்கள் மங்கலாகி, மேலும் மங்கலாகி ஃபேட் அவுட் ஆனார்கள். பிரகஷ்த்தன் எழுந்து எங்களை நோக்கி வந்து அல்பத்தை வாங்கிய படி எங்கள் இருவருக்கும் இடையில் அமர்ந்தான்.

"எங்கே என் மீன் தொட்டிகளைக் காணவில்லையே. பளபளக்கும் என் மீன்களை எவ்வளவு அழகாக படம் எடுத்து வைத்திருந்தேன். . எங்கே என் சிவப்புக் கண் வெள்ளை முயல்களைக் காணவில்லையே . . . அவைகளுக்கு நான் எட்டு ஒன்பது வயதாக இருக்கும் போது அடம்பன் கொடி பிய்த்து வந்த பொழுது பட்ட நேரத்தில் அல்லவா அந்த குட்டி பிரதர் என்னைக் கோழிக் கூட்டுக்குள் அடைத்தவன் . . . ."

அல்பத்தை மூடி வைத்து விட்டு எழுந்தான் பிரகஷ்த்தன். எதிரே இருந்த சுவரை அண்ணார்ந்து பார்த்தான்.

"என் அழகான பெரிய படம் இருந்த இடத்தில் யேசுவின் படத்தை வைத்திருக்கிறீர்களே "

தாய் எழுந்து போய் அவனுடைய தலையை தடவிக் கொண்டே சொன்னாள்,

"மகனே, நாங்கள் உன்ர முப்பத்தியோராம் நாளுக்கு உன்ர ஒரு படத்தை பெருப்பித்து எடுத்தனாங்கள். அப்பா மினக்கெட்டு எல்லாம் செய்தவர். அந்தா சிவப்பாய் ஒளிருதே வோல்ற்லெஸ் லேம், அதெல்லாம் உனக்கு நாங்க இட்ட தீபந்தான் . . . ."

"அதெல்லாம் தெரியாமலா கேட்கிறேன்!"

"பின்ன?"

நான் இருந்த இடத்தில் யேசுவை நீங்கள் வைத்தால், "யேசுவுக்கு நீங்கள் என்னை இணை வைக்கிரீகள் என்றல்லவா அர்த்தம்..."

நான் குறுக்கிட்டேன்.

"அது கொஞ்சம் இசகு பிசகாகத் தெரிந்தாலும் என்னுடைய எண்ணம் அதுதான் மகனே. உனது 41-ம் நாள் அழைப்பு இந்தா, அல்பத்தில் இருக்கிறது பார். என்ன தெரியுமா? சிலுவை. சிலுவையில் தலை வைக்கும் இடத்தில் முள்முடி அந்த முள் முடியைத் தாங்குவது போல் யார் இருக்கிறார்? யேசு அல்ல. நீதான். நீதான் யேசு. சிலுவையில் அறையப்பட்ட யேசு. இதனை நான் ஒரு கவிதையிலும் எழுதி இருக்கிறேனே,"



"ஓ, யேசுவே!,

உனது பாடுகள்

இந்த உலகத்தை இரட்சிக்க

வல்லவை என்றால்,

எங்கள் பாடுகள்

எத்தனை உலகத்தை இரட்சிக்க வல்லவை' என்று"

தாய் சொன்னாள்.

"மகனே, சகல ஆன்மாக்களின் தினத்திலும் ஒவ்வொரு முறையும் நம்ம சவக்காலையில் உனக்கு மலர் சார்த்தி ஒளி ஏற்றுவோம். ஆனால் மகனே உனக்கு இன்னும் கல்லால் நினைவுச் சின்னம் எழுப்பவில்லை. காலம் கொஞ்சம் மாறட்டும் என்றுதான் இருக்கிறம் மகனே..."

"அதெல்லாம் தேவையில்லை அம்மா. சவக்காலையில் முள்ளுக்கும் புதருக்குமிடையில் எனக்கு எழுப்பப் படப்

போகிற நினைவுச் சின்னத்தை விட நீங்க இப்போ எனக்கு தந்திருக்கின்ற நினைவுச் சின்னம் எவ்வளவோ மேலானது. நீங்கள் இந்த வீட்டையே அல்லவா எனக்கு தந்திருக்கிறீர்கள். இந்த வீட்டுக்கு 'பிரகஷ்த்தம்' என்றல்லவா பெயரிட்டு இருக்கிறீர்கள். இது என் வீடு. இந்த வீட்டில்தான் நான் இப்போது இருக்கிறேன்.




"ஆ!"

"ஏன் அந்தரப் படுகிறீர்கள்? உங்களோடு நான் இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?"

"இவ்வளவு காலமும் எங்களுக்குத் தெரியாமல் நீ இந்த வீட்டில் இருந்திருக்கிறாயே என்றுதான் ஆச்சரியப் படுகிறோம் மகனே ..." தாய் தான் சொன்னாள்.

"நீங்கள் அகதிகளாய் போயிருந்த சமயம் நான் அங்கும் இங்குமாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பா துணிச்சலாக தடை முகாம்களைத் தவிர்க்கும் பொருட்டு பல மைல் ஆபத்தான காட்டுப் பாதையில் பயணம் செய்து, எத்தனையோ நுணுக்கமான முடுக்குகளுள் புகுந்து கடைசியாக இந்த வீட்டுக்குள் வந்து ஆச்சரியப் பட்டார். ஏனென்றால் எல்லாம் ஒழுங்காக நீங்கள் விட்டுச் சென்ற மாதிரியே இருந்தது. அவர் செய்த முதல் காரியம் இந்த சுவிச்சைப் போட்டுப் பார்த்தார்.

உடனே மின் குமிழ் ஒளிர்ந்தது. அவருடைய முகம் எவ்வளவு பரவசப்பட்டது! நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தேன்..."

"மகன்!" தாயார் உன்னுடைய வலது கரத்தைப் பற்றினாள்.

"என்ன, இது மகனே, உனது வலது கையில் பெருவிரல் ஓரமாய் இருந்த ஆறாவது விரலை எவ்வளவு சிரமப் பட்டு டொக்ரர் சின்னத்தம்பி ஒரு விக்கினமும் இல்லாமல், எந்த விகாரமும் இல்லாமல் ஓப்பரேஷன் செய்தவர். வெட்டி எறியப் பட்ட அந்த ஆறாவது விரல் திரும்பவும் உனது வலது பெருவிரலில் ஒட்டி இருக்கிறதே...."

"நான் இப்போது உங்களுடன் இருக்கும் தோற்றம் என்றென்றும் ஆதியிலே பொழியப் பட்டது. இடையில் வரும் மாற்றங்கள் மூல கதிர் துகள் படிவத்தில் பதிவாவதில்லை அம்மா..."

மகனே, அப்போதுதான் எனக்கு அந்த ஆறாவது விரல் பற்றிய ஐதீகங்கள் எல்லாம் நினைவுக்கு வந்தன. உனது ஆறாவது விரலை அகற்றுவதற்கு நாங்கள் முருகேசுப் பிள்ளை டொக்டரிடம் ஆலோசனை கேட்ட போது டொக்டர் ஜெமீலும் இருந்தார். "அது அதிஷ்ட்ட விரல் ஏன் அகற்றப் போகிறீர்கள்?" என்று டொக்டர் முருகேசுப் பிள்ளை கேட்க, டொக்டர் ஜெமீல் சொன்னார்.

"அவன் அதிசயப் பிறவி. அருங்காரியங்களைச் செய்ய இருக்கிறான். நீங்கள் அவனுடைய அரிதான அந்த விரலை அகற்ற வேண்டாம்."

அந்த டொக்டர்களின் வார்த்தைகளை நாங்கள் புறக்கணித்தற்காக நானும் உன் தாயாரும் கவலையுறும் போது மீண்டும் உன் துப்பாக்கித் தோழர்கள் தோன்றினார்கள். முன் போலவே அந்த ஆசனங்களில் அமர்ந்தார்கள். நீயும் போய் உன் ஆசனத்தில் அமர்ந்தாய். நீ

எங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்து விட்டது என்று உணர்ந்தோம். இந்த நேரத்தில் சுவர்ணாவும் நானும் ஒரே கூட்டு உணர்வினால் இயக்கப் படுவதை உணர்ந்தோம். இந்த கூட்டு உணர்வில் உங்களுடைய தோற்றத்தைச் சுற்றி ஒரு ஃபிரேம் விழுந்தது. நீங்கள் உறை நிலைக்கு உள்ளாகிறீர்கள் என்று நாங்கள் உணர்ந்தோம். உங்கள் மூவரினது உருவங்களும் ஒரு கபினெட் சைஸ் போட்டோவின் அளவுக்கு சுருங்கியது. பின் போஸ்கார்ட் சைஸ் அளவுக்கு சுருங்கியது. நாங்கள் அந்த போஸ்ட் காட் சைஸ் படத்தை எங்கள் கைகளில் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தோம். பின் வார்தை எதுவும் பேசாது எழுந்த தவித்த உணர்வில் என் காரியங்களைப் பார்க்கத் தொடங்கினேன். சுவர்ணா அல்பங்களைக் கொண்டு போய் வைத்துவிட்டு தன் காரியங்களை பார்க்க தொடங்கினாள் என்று நினைத்தேன்.

உனது இந்த இரண்டாவது தரிசனத்திற்குப் பிறகு தீபம் ஒளிர்ந்த யேசுவின் படத்தை நான் அடிக்கடி பார்த்தேன். யேசுவின் இடத்தில் நீயே இருந்தாய். நீதான் சுவாலை விட்டெரியும் உன் இதயத்தை தொட்டுக் காட்டிக் கொண்டிருந்தாய்.

யேசுவின் படத்தை எடுத்து விட்டு உனது படத்தை பழையபடி மாட்டுவதற்கு தருணம் வந்து விட்டது என்பதை உணர்ந்தேன். ஊரை விட்டு ஓடும் போது நிலத்துக்குள் புதைத்த உன் பெரிய படத்தின் கண்ணாடி மட்டும்தான் மிஞ்சி இருந்தது. 41-ம் நாள் அழைப்பிலிருந்த முள்முடி தரித்த சிலுவைடன் இருந்த உன் படத்தையே பெருப்பிக்கக் கொடுத்திருந்தேன்.

சிலுவையும் நீயும்! உனது பாடுகளை நினைவூட்டும் சிலுவை! உனது பாதையை நினைவூட்டும் முள்முடி! உனது தியாகங்களை நினைவூட்டும் காயங்கள்!

உன் மறைவு அவர்களுக்கு பெரிய வெற்றி. அன்று இரவு முழுக்க கொண்டாடினார்களாமே.

அடுத்த நாள் உன் கட்டை கிடக்கிறது நம் மண்டபத்துள். வீழ்த்தப் பட்டு சாம்சனாய் நீ கிடக்கின்றாய் மரணப் பேழைக்குள். உன் பாரிய உடலுக்கு அளவு தேடி கடைகடையாக அலைந்து பெற்ற லோங்சும் ஷேட்டும். வீரமரணத்தை தழுவிய பிறகும் உன்னை துளைத்த அந்தப் பொத்தல்களை காட்டும்படி கேட்கிறான் மேஜர் தாசும் மேஜர் மேத்தாவும் வந்து. ஷேட்டையும் ரையையும் களைய நான் மறுக்கிறேன். என்றோ நடந்த அந்த சூட்டுச் சம்பத்திற்கு தாங்கள் இப்போது பழி தீர்த்து விட்டதாக காட்ட விரும்பிய அந்த ஓநாய்கள்! உன் சவத்தை கொஞ்ச நேரம் வைத்திருக்க அனுமதித்தார்களா அந்த ஓநாய்கள்?

எனக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. எவ்வளவு அலங்காரமாக செய்திருக்க வேண்டிய உன் ஊர்வலத்தை எவ்வளவு கொச்சைப் படுத்தினார்கள்? சுடுபட்ட ஒரு காட்டெருமையை வண்டியில் ஏற்றிக் கொண்டு போவது போல் அல்லவா உன் கடைசிப் பயணத்தைக் காணச் செய்தார்கள். வேகா வெயில். சனம் இந்த துப்பாக்கிக்காரரின் அச்சத்தில் அமுங்கிப் போய் இருந்தது. தடை முகாம்களுக்கு ஊடான வழமையான பாதையில் செல்ல விடாது தடுத்து பிள்ளையார் கோயில் வீதி வழியாக குறுக்கி அல்லவா உன் பிரேதத்தைக் கொண்டு போக வைத்தார்கள்.

உன் இரண்டாவது தரிசனத்துக்கு பிறகு எனக்கு இந்த ஆத்திரம் அடிக்கடி குமுறிக் கொண்டிருந்தது. அந்தக் குமுறலின் போதெல்லாம் அந்தக் காட்டிக் கொடுத்தவனின் நினைவு வரும். பல இரவுகளை தூக்கமின்றிக் கழித்தேன். பல நாட்கள் பாதைகளில்

செல்லும் போதும் அலுவலகத்தில் அமரும் போதும் என்னை இழந்து நீண்ட நினைவுகளில் ஆழ்ந்திருக்கிறேன்.

முடிவாக இன்றிரவு எனக்கு பொறுக்க முடியாமல் போய் விட்டது. அழுத்துகின்ற இந்தத் துயரில் இருந்து விடுபட வேண்டும் என்றிருந்தது. என் துயருக்கு முடிவு கட்ட ஒருவரிடம் எல்லாவற்றையும் சொல்லித் தீர்க்க வேண்டும் போலிருந்தது. இரவுணவுக்கு முன்பாக நான் மாற்குவிற்கு ஃபோன் செய்தேன்.

"ஹலோ மாற்கு, ரொம்ப அழுத்தமாக இருக்கிறது ...."

"என்ன அழுத்தம்? இரத்த அழுத்தமா? மன அழுத்தமா?"

"மன அழுத்தந்தான்."

"மன அழுத்தத்திற்குத்தான் என்னிடம் மருந்து இருக்கிறதே ... வா, வீட்டில் ஒருத்தரும் இல்லை. எல்லோரும் ஒரு கலியாணத்துக்குப் போய் விட்டார்கள். நான் மட்டுந்தான். உனக்கு எந்த தயக்கமும் தேவை இல்லை. உடனே வா ..."

நள்ளிரவு வரையும் நானும் மாற்கும் குடித்தோம்.

எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேசினோம். சம்பந்தம் உள்ளதும், சம்பந்தம் இல்லாததும். எப்போதும் போல் இளமைக் காலத்துக்கே மாற்குவின் பேச்சுத் திரும்பியது. இளமைப் பேச்சு வந்ததும் மாற்கு வெளியில் போக தன் பாட்டா சிலிப்பர்களை மாட்டினான்.

"வா, சதீ, வெளியில் போவோம்"

"கோயில் வெளிக்கா?"

"இல்லை கடற்கரைக்கு ..."

நடந்தோம். மாற்குவின் வீட்டுக் குறுக்குப் பாதையிலிருந்து கோயிலுக்கு முன் கடற்கரையை நோக்கிச் செல்லும் பாதையில் ஏறினோம்.

''பார் உன் பைரன் மைதானத்தை!''

பைரன் மைதானம் முழுவதும் இப்போது வீடுகள் நிறைந்திருந்தன.

''அது ஒரு காலம் ....''

அந்தோணியார் கோயிலைக் கடக்க வரும் டானாவில் நடந்து பழைய வோக்கடிக்கு வந்தோம்.

''இங்கே இருந்துதானே நாம் பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்தோம்!....''

கடல் அலை கரையில் மோதிக் கேட்டது. இருவரும் ஒரே சமயத்தில் சவக்காலைப் பக்கம் பார்த்தோம்.

''ஓ! இருளில் எல்லாம் மங்கலாகவே இருக்க'' நான் சொன்னேன்.

''எவ்வளவு இருள் என்றாலும் உன் மகனின் சவப்புதையல் உனக்குத் தெரியாமல் இருக்குமா?''

''கல்லால் நாங்கள் இன்னும் கட்டவில்லை''

''அந்தச் சிலுவை ஒன்று போதுமே ....''

வீதியிலிருந்து மாற்கு கீழே சவக்காலைப் பக்கம் திரும்புவது மங்கலாகத் தெரிந்தது. நான் பின் தொடர்ந்தேன்.

''நீ முன்னுக்குப் போ. வழியைக் காட்டு. உன் மகனின் சவப் புதையலை நான் இன்று தரிசிக்க வேணும் ...''

நான் அவதானமானேன். கடைசியில் மகனின் சவப்புதையலுக்கு வந்தோம். இருளில் கண்கள் சற்று பழகி இருந்தன. சற்றுத் தெளிவாக எல்லாம் தெரிந்தன.


வானத்தை அண்ணாந்து பார்த்தேன். மாற்குவும் பார்த்தான். வானில் நிறைய வெள்ளி பூத்திருக்கு! மாற்கு சொன்னான்.

"இந்த வெள்ளிகள் தான் நாளைக்குச் சாட்சி ... "

"எதற்குச் சாட்சி ? ..."

"காலம் கழித்தேனும் நான் உன் மகனின் புதையலுக்கு அஞ்சலி செலுத்துகிறேன் என்பதற்கு ...."

மாற்கு சிலுவையை தலைமாடாகக் கொண்ட புதையலின் கால் மாட்டில் குந்தி உடலை முன்னோக்கி நீட்டி சாஷ்ட்டாங்கமாகி தலை குனிந்து முத்தினான். நான்



அவனுடைய நெஞ்சைப் புரட்டி ஏறி அமர்ந்து கட்டாரியால் சதக்குச் சதக்கு என்று பல முறை குத்தி விட்டுப் பார்த்தேன் - என் பையன் கிடந்தான், என் மகன் கிடந்தான், என் பிரகஷ்த்தன் கிடந்தான். அவன் தன் நெஞ்சிலிருந்த கட்டாரியை பிடுங்கி என் கையில் தந்தான்.. ..

"எங்கே என் மகனை காட்டிக் கொடுத்தவன்?"

"அது நான்தான் அப்பா. இனித்தான் எனக்கு விடுதலை."

நான் நடந்தேன். இருட்டுக்குள் நடந்தேன். மஞ்சள் குளித்து வரும் தேவாதியாக அந்த இருட்டுக்குள் நடந்தேன். இன்னும் வழி தெரியாத பாதையில் நடந்து கொண்டிருக்கிறேன்.

*(1992)*

□

## சண்முகம் சிவலிங்கத்தின் சில சிறுகதைகள்

- பூச்சியம் *(2000)*
- தொலைவும் மீட்பும்
- நீக்கம்
- காற்றில் தேய்ந்த் காலடிகள்
- மண் குவியல்
- மழை
- அது வேறு ஆள்
- கன்னிகா *(1988)*
- காட்டுப்பூச்சி
- கள்ளிப்பூ
- துருவப் பறவைகள் *(2000)*
- திருத்தப்பட்ட தேவாலயமும் காணாமல் போன சில ஆண்டுகளும் *(1980)*
- ஆட்டுக்குட்டிகள் *(1948)*
- திருத்தனி *(1980)*
- விலாங்கி *(1958)*
- சுதேசியின் மீள்கை
- பூனைச்சியக்கா *(1974)*
- பூர்வோத்திரம் *(1956)*
- திசை மாற்றம் *(1975)*
- காட்டுத்தோடை *(1987)*
- உட்சுழிகள் *(1988)*
- மரணப்பூட்டு *(1989)*
- வெளியேற்றம் *(1990)*
- படைகள் நகர்ந்த போது
- காலடி *(1997)*
- லூ - லூ *(1999)*
- காண்டாவனம் *(1985)*
- வாலியும் வானரச் சேனையும் *(1988)*
- உறவு *(1949)*
- மண்ணோடும் வேரோடும்
- ஓங்கிய கைகள்
- போருக்கு போனவர்கள் *(1984)*

# அப்பாவின் சைக்கிள்



*அற்ப சொற்ப சலுகைகளுக்கு விலை போகாத-*

*பட்டங்கள் பதவிகள் பொன்னாடைகளை*

*உதறித்தள்ளிய-*

*விடாப்பிடியான உங்கள் குணம் போல்-*

*கடைசிவரை*

*உங்கள் கூடவே இருந்தது*

*இந்தச் சைக்கிள் தானே அப்பா!*



சண்முகம் சிவலிங்கம் (12/19/1936 - 04/20/012, பாண்டிருப்பு) ஈழத்தின் மிகமுக்கிய கவிஞரும், விமர்சகரும், சிறுகதையாசிரியருமாவார். 1960 முதல் இலக்கியத்துக்குப் பங்காற்றி வந்த சண்முகம் சிவலிங்கம் ஓர் ஓய்வுபெற்ற விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள பாண்டிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் பிறந்தது ஒரு இந்துக் குடும்பத்தில். ஆனால் பாடசாலை காலத்திலேயே கத்தோலிக்கராக மதம் மாறியவர். ஒரு கத்தோலிக்கக் குடும்பத்திலேயே திருமணம் செய்து கொண்டவர். கேரளத்தில் படித்து அறிவியலில் பட்டம் பெற்றார். அறிவியல் பட்டதாரி ஆசிரியராகப் பணி ஆற்றினார். பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் அதிபராக பணியாற்றி ஓய்வு பெற்றார். இவரது கிராமத்தில் இவர் ஸ்டீபன் மாஸ்டர் எனவே அழைக்கப்பட்டார். இவருக்கு ஆறு ஆண் பிள்ளைகள். ஒருவர் ஈழப்போராட்டத்தில் களத்தில் உயிரிழந்தவர்.

இதுவரையில் 'நீர்வளையங்கள்' [தமிழியல் 1988], 'சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்' [காலச்சுவடு 2010] என்ற இரண்டு கவிதைத் தொகுதிகள் நூல்களாக வெளிவந்துள்ளன. இவர் விமர்சனக் கட்டுரைகளையும் சிறுகதைகளையும் எழுதுவதோடு கவிதை மொழிபெயர்ப்பிலும் பங்காற்றியுள்ளார். ஒரு கவிஞராகவே பரவலாக அறியப்பட்டாலும் இவரது சிறுகதைகளும் மிகவும் தரமானவையே. சண்முகம் சிவலிங்கம் எழுதிய ஆக்காண்டி கவிதை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.